நூறாண்டு பேசும் ஓராண்டுச் சாதனைகள்

தமிழரசு

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மே 2012

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி - மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2043
சித்திரை - வைகாசி
மே 2012

மலர் : 43 விலை ரூ.20 இதழ் : 11

தமிழ்நாடு ஓர் ஒட்டுமொத்த வளர்ச்சியைப் பெறவேண்டும். அதற்கு ஒவ்வொரு குடும்பமும், சமூகப் பொருளாதார வளர்ச்சியின் அனைத்து அம்சங்களிலும் முன்னேற வேண்டும்; வளர்ச்சி பெறவேண்டும். இவ்வாறு, தமிழக மக்களின் வாழ்வில் ஒட்டுமொத்த முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் உருவாக்கவே உங்கள் அன்புச் சகோதரியின் அரசு அல்லும் பகலும் பாடுபட்டு வருகிறது.

– மாண்புமிகு முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

ஆசிரியர் குழு

ஆசிரியர் - வெளியிடுபவர் :

முனைவர் **பொ.சங்கர்** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
டி.ஆர். ஜெயஸ்ரீ
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்

க. சண்முகசுந்தரம்
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்
ச.ஜெயலலிதா
இரா.ராஜசேகரன்
அ. மகேஸ்வரி

உதவி ஆசிரியர்
சு.கமலா

நிருபர்கள்
தி.பெரியார் சாக்ரடீசு
ஜெ.ஜெயசிம்ஹன்

இதழ் உதவியாளர் / கணினி வடிவமைப்பு
அ.மதன்

கணினி வடிவமைப்பு
இரா.பாலாஜி

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
110,அண்ணாசாலை,
சென்னை-600 002.
தொலைபேசி : 28520407/ 28520408
நிகரி : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in

இந்த இதழில்...

❖ தமிழகத்தில் சட்டத்தின் ஆட்சி....3
❖ முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள், முன்னாள் இராணுவ வீரர்கள் மற்றும் சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் நலன்காக்கும் அரசு 10
❖ பழம்பெருமை நிலை நிறுத்தி புதுப்பொலிவுடன் சட்டமன்றம் 13
❖ தமிழகம் வளம்பெற வளமான வரவு–செலவுத் திட்டம்....15
❖ எதிலும் முதன்மை காணும் வருவாய்த்துறை 17
❖ மின் பற்றாக்குறையிலிருந்து மின் நிறைவை நோக்கி 21
❖ நகர்ப்புற வளர்ச்சி நாடெல்லாம் மகிழ்ச்சி ஊரக வளர்ச்சி ஊர்தோறும் மகிழ்ச்சி 25
❖ நலிந்தோருக்கு வீடுகள் நல்லமைப்புடன் நகர்ப்புறங்கள் 39
❖ சாதனைகள் நிறைந்த சமூக நலத்துறை....44
❖ சிகரம் தொடும் உயர்கல்வி 53
❖ வரி நிருவாகத்தை மேம்படுத்த வணிகவரித்துறை கணினி மயம்....56
❖ இரண்டாம் பசுமைப்புரட்சி 64
❖ விவசாயிகளுக்கு இலக்கை விஞ்சிய பயிர்க்கடன் 69

❖ வளமான தமிழகத்திற்கு பசுமையான தொலைநோக்குத் திட்டங்கள் 72

❖ புதிய சாலைகள் புதிய பாலங்கள் 76

❖ முழு உணவுப் பாதுகாப்பை நோக்கி..............81

❖ வெண்மைப் புரட்சி..............85

❖ சிறு தொழில் வளர்ச்சிக்குப் புதிய முயற்சிகள் 88

❖ எழிலார்ந்த கட்டடங்கள் ஏற்றம் பெறும் நீர்நிலைகள் 91

❖ விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு
விலையில்லா கறவை மாடுகள் மற்றும் ஆடுகள்..............99

❖ தொழில் துறையில் புதுயுகம் 106

❖ முனைப்பான முன்னேற்றம் பெறும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை 111

❖ கதர் மற்றும் கிராமத்தொழில்கள் உற்பத்தி அதிகரிப்பு..............113

❖ சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகள் மேம்பாடு..............115

❖ தூய்மையான சுற்றுச்சூழல் பேண புதிய முயற்சிகள்..............118

❖ ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ மாணவியரின்
கல்வி மேம்பாட்டுக்காகக் கூடுதல் நிதி உதவி 120

❖ முன்னோக்கிச் செல்லும் போக்குவரத்துத்துறை 124

❖ மீனவர் நலம் காக்க முன்னோடித் திட்டங்கள் 128

❖ அறிவார்ந்த சமுதாயம் உருவாக்கிட கல்விக்கு முக்கியத்துவம் 131

❖ குறைந்த கட்டணத்தில் அதிக சேனல்களை வழங்கும்
அரசு கேபிள் டி.வி. 145

❖ அயராத உழைப்பால் புதுயுகம் படைக்கும் செய்தித்துறை 148

❖ தொழிலாளர் நலம் காக்கும் திட்டங்கள் 155

❖ மக்கள் நலம் பேணும் முதலமைச்சரின் விரிவான
மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 160

❖ புனிதப் பயணங்களுக்கு புதிய நிதியுதவி 165

❖ பொற்காலம் படைக்கும் இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை 169

தமிழகத்தில் சட்டத்தின் ஆட்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

காவல்

- காவல்துறையினர் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ததால், அசம்பாவிதங்கள் ஏதுமின்றி, உள்ளாட்சித் தேர்தல்களும், சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல்களும் அமைதியாக நடந்து முடிந்தன.
- 'தானே' புயல் ஏற்பட்டபோது காவல்துறையினர் மீட்புப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு, பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லும் பணியை மேற்கொண்டு இயல்புநிலை மீளப் பெரிதும் உதவினர்.
- அதிக அளவாக 14,475 சொத்து வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. ரூ.65.84 கோடி பெறுமானமுள்ள களவு போன சொத்துகள் மீட்கப்பட்டன.
- குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் திட்டத்தைச் செயல்படுத்தத் திட்ட ஒருங்கிணைப்பாளர் தெரிவு செய்யப்பட்டு 4.11.2011இல் இத்திட்டம் துவக்கப்பட்டுள்ளது.
- நில அபகரிப்புத் தடுப்பு சிறப்புப் பிரிவுகள் 39 அலகுகள் ஏற்படுத்தப்பட்டன. கடந்த ஓராண்டில் 1,225 பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் 1,299 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு ரூ.758.04 கோடி மதிப்பிலான சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன.

- ❖ பணியிலிருந்தபோது உயிரிழந்த 51 காவல் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு நிதி வழங்க முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1.02 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- ❖ காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர் வரையிலான பதவியிலுள்ள காவல் பணியாளர்களுக்கான இடர்ப்படி உயர்த்தப்பட்டுள்ளது. காவலர் முதல் காவல் ஆய்வாளருக்கு ரூ.270/–லிருந்து ரூ.300/–ஆகவும், காவல் துணைக் கண்காணிப்பாளர் முதல் காவல் கூடுதல் கண்காணிப்பாளர் வரை ரூ.315/–லிருந்து ரூ.350/– ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.
- ❖ நில அபகரிப்புத் தடுப்பு சிறப்புப் பிரிவுகளுக்கு 145 புதிய வாகனங்கள் உட்பட மொத்தம் காவல் துறைக்கு 560 வாகனங்கள் ரூ.30.51 கோடி செலவில் வாங்க ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- ❖ சட்டம் ஒழுங்குப் பிரச்சினையின்றிக் கூடங்குளம் அணு மின் நிலையம் வெற்றிகரமாகத் திறக்கப்பட்டது.
- ❖ சென்னையில் நடந்த இரு வங்கிக் கொள்ளைகள் வெற்றிகரமாக உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட்டு இவை போன்ற நிகழ்வுகள் ஏற்படாவண்ணம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- ❖ தமிழ்நாடு காவல் பணியாளர் நல நிதிக்கென அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்படும் மானியத் தொகை ரூ 1 கோடி நிதி, ரூ.1.2 கோடியாக உயர்த்தி அரசால் வழங்கப் பட்டுள்ளது.

- உத்தபுரம் கிராமத்தில் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக இரு சமூகத்தினரிடையே இருந்து வந்த பிரச்சினை தமிழக அரசின் அறிவுரையின் பேரில், மாவட்ட நிருவாகம் எடுத்த நடவடிக்கையினால் 20.3.2012 அன்று முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, தற்போது நிலைமை கட்டுப்பாட்டில் உள்ளது.

- காவல் பணியாளர்கள் தங்களது இல்லத்திற்குத் தேவைப்படும் உபயோகப் பொருள்களை நியாயமான விலையில் பெறுவதை உறுதி செய்திட, அரசாங்கம் காவலர் துணை விற்பனையகங்களைத் தமிழகத்தில் மதுரை, திருச்சி, ஆவடி ஆகிய மூன்று இடங்களில் தொடங்கியுள்ளது. மதிப்புக் கூட்டு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ள இவ்வங்காடிகள் 28.3.2012 அன்று திறந்து வைக்கப்பட்டன. இதன் உள்கட்டமைப்புகளுக்காக அரசு ரூ.1 கோடி நிதி உதவி வழங்கிட அனுமதியளித்துள்ளது.

- தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணித் தலைமையிடங்கள் 10–லும் ஆயுதப்படைப் பிரிவு 26–லும் மருத்துவச் சேவை மையங்கள் (Police Out Patient Units / Dispensaries) 28.3.2012 அன்று துவக்கி வைக்கப்பட்டன.

- காவல் நிலையத்திற்குப் புகாரைப் பதிவு செய்ய வரும் பொதுமக்களுக்கு, காவல் நிலையங்களில் அவர்கள் அமர இருக்கை வசதிகள் இல்லாத நிலையே நிலவி வந்தது. அதனால் அவர்கள் காவல் நிலையங்களுக்கு வெளியில் நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அவர்களுக்குக் கண்ணியம் அளித்து, வசதி செய்து கொடுக்கும் வகையில் ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் 10 நாற்காலிகளை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

- மாநிலத்தில் உள்ள அனைத்துக் காவல் நிலையங்களிலும் கிராமக் கண்காணிப்புக் குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இதனால் பொதுமக்கள் மற்றும் காவல் துறையினரிடையே நல்லுறவு ஏற்படும். இதற்கென ரூ.1.56 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டில், முதன் முதலில், 17.09.2003 அன்று சிறார் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்த முன் முயற்சிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், மேலும் 50 சிறார் குழுக்கள் 2011–2012இல் ஒப்பளிக்கப்பட்டன. ஒவ்வொரு குழுவிற்கும் அளிக்கப்படும் நிதி உதவி ஆண்டொன்றுக்கு ரூ.66,000/–லிருந்து ரூ.75,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

- 2011 – 2012 ஆம் ஆண்டில் திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியிலும், விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்ப்பேட்டையிலும் புதியதாக இரண்டு மகளிர் காவல் நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன.

- 2011– 2012இல், வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து, செயலிழக்கச்செய்யும் படைப்பிரிவிற்குப் பயிற்சி அளிக்கும் விதமாக ரூ.30.78 இலட்சம் செலவில் வெடிகுண்டு மாதிரி பயிற்சி அறை கட்டுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.
- வெடிகுண்டு கண்டுபிடிப்பு மற்றும் அழிக்கும் படையில் பணியாற்றும் 147 முன்னாள் இராணுவத்தினருக்குப் பிரத்தியேக இடர்ப்படி மாதம் ரூ.3000/– வழங்கப்படுகிறது.
- 2011 ஆம் ஆண்டில் தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம் / காவலர் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றில் உதவி ஆய்வாளர் பதவி நிலையில் உள்ள 1,061 பேருக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் வெற்றிகரமாகத் தங்கள் பயிற்சிகளை நிறைவு செய்துள்ளனர். 15.02.2012 அன்று நடைபெற்ற பயிற்சி நிறை அணி வகுப்பில் எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு மிக அதிகமான எண்ணிக்கையில் உதவி ஆய்வாளர்கள் பயிற்சியை நிறைவு செய்தனர்.
- இரண்டாம் நிலைக் காவலர்களுக்குக் காவல் பயிற்சிப் பள்ளியில் 22 வாரங்களுக்கு மட்டுமே அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. விரிவான பயிற்சித் திட்டத்திற்குக் குறைந்தது 7 மாதகால அளவு அடிப்படைப் பயிற்சியும், 1 மாதக் காலச் செய்முறைப் பயிற்சியும் தேவைப்படுவதால் பயிற்சிக்காலத்தை நீட்டித்து, 07.03.2012இல் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- மோப்ப நாய்களுக்கு நாள் ஒன்றுக்கு உணவுக் கட்டணமாக ரூ.54/– என இருந்ததை ரூ.85/– ஆகவும், பராமரிப்புக் கட்டணம் மாதமொன்றுக்கு ரூ.250/– ஆக இருந்ததை ரூ.300/– ஆகவும் உயர்த்தி அரசு வழங்கி வருகிறது.

- இரண்டாம் நிலைக் காவலர்கள், இரண்டாம் நிலைச் சிறைக்காவலர்கள் மற்றும் தீயணைப்போர் முதலிய 13,320 காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு அறிவிக்கை 21.03.2012 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

- ஊர்க்காவலரின் தினப்படியானது ரூ.65/–லிருந்து ரூ.150/– ஆக 16.09.2011 முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது. சென்னை மாநகரத்தில் இரவுப் பணிக்கான படி ரூ.200/– ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. மாநிலத்தில் ஊர்க்காவல் படையினரின் பதிவெண்ணிக்கையை 11,622லிருந்து 16,000 ஆக உயர்த்திட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- 2011–2012ஆம் ஆண்டில் 3,440 குடியிருப்புகள் ரூ.287.95 கோடி மதிப்பீட்டில் கட்ட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- 2011 – 2012இல் ரூ.9.25 கோடி செலவில் 22 காவல் நிலையங்கள் கட்ட ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- 97 காவல் நிலையங்கள் பழமையான மற்றும் பழுதடைந்த கட்டடங்களில் இயங்கி வந்தமை கண்டறியப்பட்டது. பழுதடைந்த கட்டடங்களில் இயங்கி வந்த 82 காவல் நிலையங்களுக்கு ரூ.37.70 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்ட இந்த அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

- நாகப்பட்டினம், அரியலூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் ரூ.12.82 கோடி செலவில் ஆயுதப்படை வளாகங்கள்.

- திருவண்ணாமலையில் ஆயுதப்படையினருக்கு ரூ.11.33 கோடி செலவில் படைக்குடியிருப்புகள்.

- கமாண்டோ பயிற்சி பெறும் காவலர்களுக்கு, பள்ளிப்பட்டு, வல்லநாடு, சத்தியமங்கலம், திருச்சிராப்பள்ளி மற்றும் ஒத்திவாக்கம் ஆகிய இடங்களில் ரூ.8.53 கோடி செலவில் படைக்குடியிருப்புகள்.

- தஞ்சாவூரில் ரூ.4.81 கோடி செலவில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்.

- இதர காவல்துறைக் கட்டடங்கள் ரூ.3.82 கோடி செலவில் கட்ட ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆக 2011–2012ல் காவல் துறையினருக்கான குடியிருப்புகள் மற்றும் பிற கட்டடங்களுக்கு ரூ.377.95 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- சென்னையில் கோயம்பேடு, தரமணி மற்றும் கானாத்தூர் ஆகிய இடங்களில் மூன்று புதிய காவல் நிலையங்கள் ரூபாய் 11.39 கோடி செலவில் உருவாக்க 2011–2012இல் ஆணையிடப்பட்டுள்ளது.

- சென்னை மாநகரில் வளசரவாக்கம் மற்றும் செம்மஞ்சேரி உட்படப் பன்னிரண்டு இடங்களில் புதிய போக்குவரத்துக் காவல் நிலையங்கள் ஏற்படுத்த இவ்வரசு ஆணையிட்டுள்ளது. மேலும், சென்னைப் போக்குவரத்துக் காவல் பணிக்கென 1,125 கூடுதல் பணியிடங்கள் தோற்றுவித்து இவ்வரசு 21.10.2011இல் ஆணையிட்டுள்ளது. இப்புதிய காவல் நிலையங்கள் மற்றும் கூடுதல் பணியிடங்களுக்கான செலவினம் ரூ.40 கோடியாகும்.
- 2011–2012இல் 12 புறக்காவல் நிலையங்கள் ரூ.13.03 கோடி செலவில் முழு அளவுக் காவல் நிலையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.
- பல்வேறு நிலைகளில் செயல்படும் காவல்துறை அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக ரூ.5 கோடி அனுமதிக்கப்பட்டு 1,000 புதிய கணினிகள் வழங்கப்படும்.
- ஆட்கடத்தல்காரர்களிடமிருந்து 205 இலங்கைத் தமிழர்கள் மீட்கப்பட்டு, அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பப்பட்டனர்.
- இரயில் நிலையங்களிலும், அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஆதரவின்றித் திரிந்து கொண்டிருந்த 42 பெண்கள் உட்பட 420 இளங்குற்றவாளிகள் தமிழ்நாடு ரயில்வே காவல் துறையினரால் மீட்கப்பட்டு, பெரும்பாலானவர்கள் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். எஞ்சியுள்ளவர்கள் ஆதரவு இல்லங்களில் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

- ரூ.150 கோடி செலவில் ஒருங்கிணைந்த போக்குவரத்து மேலாண்மை அமைப்பைச் சென்னையில் ஏற்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.
- கடும் வெயிலில் பணிபுரியும் போக்குவரத்துக் காவல் துறையினரின் தாகத்தைத் தணிக்க எலுமிச்சைச் சாறு வழங்குதல்.
- காவல்துறை, சிறைத்துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புத்துறையினரின் சொந்த உபயோகத்திற்காக 36,000 வீடுகள் கட்டுவதற்குப் பிரம்மாண்ட வீட்டு வசதித் திட்டம்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்

- விழுப்புரம் கோட்டம், சின்னசேலம் என்னும் இடத்தில் ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் ரூ.79.79 இலட்சம் செலவில் துவங்கப்பட்டுள்ளது.
- மதுரைக் கோட்டம், டி.கல்லுப்பட்டி என்ற இடத்தில் ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் ரூ.75.01 இலட்சம் செலவினத்தில் துவங்கப்பட்டுள்ளது.
- திருநெல்வேலி கோட்டம், ஆலங்குளம் என்ற இடத்தில் ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் ரூ.78.11 இலட்சம் செலவினத்தில் அமைக்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.
- ராமநாதபுரம் சிவகங்கை கோட்டத்தை இரண்டாகப் பிரித்துச் சிவகங்கையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய கோட்டம் ரூ.42 இலட்சம் செலவினத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.
- மாநகரங்களின் உபயோகத்திற்கு ரூ.3.20 கோடி செலவில் 9 தரம் உயர்த்தப்பட்ட நவீன இரக நீர்த்தாங்கி வண்டிகள் மற்றும் தண்ணீரைப் பீய்ச்சி அடிக்கும் தொழில் நுட்பத்தின் அடிப்படையிலான 8 விரைந்து செல்லும் திறன் கொண்ட சிறிய நீர்தாங்கி வண்டிகள் மற்றும் நீராற்றலால் இயங்கும் 22 இணை ஒருங்கிணைந்த கருவிகள் வாங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.
- அம்பத்தூர் மற்றும் திருச்சி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் உபயோகத்திற்கு 2 சிறிய நுரைத் தகர்வு ஊர்திகள் ரூ.48 இலட்சம் தொடராச் செலவினத்தில் கட்டுமானம் செய்ய ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.
- 9 நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் 2 இரு சக்கர வாகனங்கள் ரூ.45.10 இலட்சம் செலவினத்தில் வாங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.
- 28 கணினிகள் மற்றும் அதற்குரிய பிரிண்டர்கள் ரூ.12.60 இலட்சம் செலவில் வாங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.
- மோப்ப நாய்ப்படைப் பிரிவிலுள்ள மோப்ப நாய் ஒவ்வொன்றிற்கும் உணவுக் கட்டணம் நாளொன்றிற்கு ரூ.54/–லிருந்து ரூ.100/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள், முன்னாள் இராணுவ வீரர்கள் மற்றும் சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் நலன் காக்கும் அரசு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

- தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களின் வீரதீரச் செயல்களுக்கான விருது / சிறப்பாகப் பணிபுரிந்தமைக்கான விருது மற்றும் பதக்கம் பெறுவோருக்கு வழங்கப்படும் பணமுடிப்பு உயர்வு.
- முன்னாள் படைவீரர் நலத் துறையில் மின்–ஆளுமை உத்திகள் ஏற்படுத்திட நடவடிக்கை.
- மின்திருட்டு தடுப்புப் பிரிவின் பணியினை முன்னாள் படை வீரர்களைக் கொண்டு செயல்படுத்துவதன் மூலம் கூடுதல் வேலைவாய்ப்பு ஏற்படுத்த ஆணை.
- கோயில் பாதுகாப்புப் படையில் பணிபுரியும் 3,000 முன்னாள் படைவீரர்களுக்குத் தொகுப்பூதியம் ரூ.5,000/– ஆக உயர்வு.
- முன்னாள் படைவீரர்கள் குடும்பத்தினருக்குக் கருணை அடிப்படையிலான பணி நியமன விதிகளை எளிமைப்படுத்திப் பணி நியமனம் வழங்க ஆணை.
- மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் மாதாந்திரத் தொகுதிப்படி ரூ.5,000/–த்திலிருந்து ரூ.10,000/– ஆக உயர்வு.
- முன்னாள் சட்டப்பேரவை, மேலவை உறுப்பினர்களின் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.10,000/–த்திலிருந்து ரூ.12,000/–ஆக உயர்வு.

- ❖ மறைந்த சட்டப்பேரவை / மேலவை உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் மாதாந்திரக் குடும்ப ஓய்வூதியம் ரூ.5,000/–த்திலிருந்து ரூ.6,000/–ஆக உயர்வு.
- ❖ ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் மருத்துவப்படி மாதமொன்றிற்கு ரூ.100/–ஆக உயர்வு. விடுதலைப் போராட்ட ஓய்வூதியதாரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு அரசு மருத்துவமனைகளில் 'அ' வகுப்பு வசதிகளுடன் கூடிய இலவச மருத்துவச் சிகிச்சை, புதிய மருத்துவமனைகளில் கட்டணமில்லாமல் உயர்தர சிகிச்சை.
- ❖ தேசிய மனித உரிமை ஆணைய வழக்குகள் குறித்த நடவடிக்கைகளை மின் ஆளுமை மூலம் தொடர்ந்து கண்காணித்து நடவடிக்கை எடுத்திட ஆணை.
- ❖ தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்திற்கு ரூ.3.48 கோடி செலவில் புதிய கூடுதல் கட்டடம்.

முகாம் வாழ் இலங்கைத் தமிழர் நலன்

- ❖ முகாம்கள் சீரமைக்கப்படவும் முகாம்களில் தரமான இருப்பிடம், குடிநீர், சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் போன்றவற்றைச் செய்து தரவும் ரூ.25 கோடி ஒதுக்கீடு.

- ❖ பெண்குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஆண் குழந்தை இல்லாத குடும்பங்களில் பெண் குழந்தைகளின் பேரில் நிதி வைப்பீடு.
- ❖ சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் முகாம்களில் உள்ள ஆதரவற்ற விதவைப் பெண்கள், வயது முதிர்ந்தவர்கள், மாற்றுத் திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்ட மற்றும் வயது முதிர்ந்த மணமாகாத பெண்கள் ஆகியோருக்கு மாத ஓய்வூதியமாக ரூ. 1,000/– வழங்கப்படுகிறது.
- ❖ தையல் கலை தெரிந்த பெண்களுக்கு இலவசமாகத் தையல் இயந்திரம் வழங்கப்படுகிறது.
- ❖ மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் கீழ், தகுதிவாய்ந்த பெண்களில் பட்டம் / பட்டயம் பெற்ற பெண்களுக்கு ரூ.50,000/– மற்றும் 4 கிராம் திருமாங்கல்யத்திற்கான தங்கம் மற்றும் இதர படித்த பெண்களுக்கு ரூ.25,000/– மற்றும் 4 கிராம் திருமாங்கல்யத்திற்கான தங்கம் வழங்கப்படுகிறது.
- ❖ 'விலையில்லா அரிசி' வழங்கும் திட்டம் நீட்டிக்கப்பட்டு குடும்பத்திற்கென அனுமதிக்கப்பட்ட அளவில் 20 கிலோ வரை அரிசி விலையில்லாமல் வழங்கப்படுகிறது.
- ❖ ஒற்றைச் சாளர முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டுப் படித்து வரும் முதல் பொறியியல் பட்டதாரி மாணவர்களுக்குக் கல்விக் கட்டணத்தில் சலுகை வழங்கப்படுகிறது.
- ❖ மாதாந்திரப் பணக்கொடை உயர்த்தப்பட்டு, குடும்பத் தலைவருக்கு ரூ.1,000/–ஆகவும், மற்ற உறுப்பினர்களுக்கு ரூ.750/–ஆகவும் மற்றும் 12 வயதுக்குக்கீழ் உள்ள குழந்தைகளுக்கு ரூ.400/–ஆகவும் வழங்கப்படுகிறது.
- ❖ முகாம் வாழ் மாணவர்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மற்றும் ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயில 5 இடங்கள் வீதம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ❖ முகாம் வாழ் குழந்தைகள் உயர்கல்வி பெறும் வகையில் கல்வி உதவித் தொகை வழங்கிட ஆணை.
- ❖ முகாம்களில் 416 பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்குத் தலா ரூ.10,000/– வீதம் ரூ.41.60 இலட்சம் சுழல் நிதி வழங்கிட ஆணை.

பழம்பெருமை நிலை நிறுத்தி புதுப்பொலிவுடன் சட்டமன்றம்

மாண்புமிகு சட்டமன்றப்பேரவைத்தலைவர் திரு. **டி.ஜெயக்குமார்** அவர்கள்

- புனித ஜார்ஜ் கோட்டையிலிருந்த சட்டமன்றப் பேரவை, கடந்த ஆட்சியினரால், அவ்விடத்தில் செம்மொழி நூலகம் செயல்படும் வகையில் அதன் வடிவமைப்பு முற்றிலுமாக மாற்றி வடிவமைக்கப்பட்டது. சட்டமன்றப் பேரவையில் மீண்டும் பழைய வடிவமைப்பு பெறும் வகையில் ஒரு வார காலத்திற்குள் போர்க்கால அடிப்படையில் மாற்றி அமைக்கப்பட்டது. சென்னை–2, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில், போதிய வசதியின்றி செயல்பட்டு வந்த சட்டமன்றப் பேரவை, பழம் பெருமையை நிலைநிறுத்தும் வகையில், மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டைக்கு மாற்றப்பட்டு, 14–ஆவது பேரவையின் முதற்கூட்டம் 23.05.2011 அன்று நடைபெற்றது.
- தொகுதி சீரமைப்பின் காரணமாக, சில சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்கள் இடம் மாறிவிட்டது. எனவே, சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்கள் இல்லாத பல்வேறு தொகுதிகளில் 28 புதிய சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்களை கட்ட இச்செயலகம் தக்க நடவடிக்கை எடுத்துள்ளது.
- சட்டமன்றப் பேரவை ஆண் மற்றும் பெண் உறுப்பினர்களுக்குச் சட்டமன்றப் பேரவை மண்டபத்தையொட்டி ஓய்வறைகள் தனித்தனியே குளிர்சாதன வசதியுடன் புதுப் பொலிவுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேற்படி இரண்டு ஓய்வறைகளும் 8.8.2011 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகின்றன.
- சட்டமன்ற உறுப்பினர்கள், பேரவை மண்டபத்திற்குள் வரும்போது அவர்களது கைபேசிகளைப் பாதுகாப்பாக வைக்கப் பேரவை மண்டபத்தின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதித் தாழ்வாரங்களில் புறாக்கூண்டு அறைகள் (Pigeon Holes) பூட்டு, சாவி வசதிகளுடன் வைக்கப்பட்டுள்ளன.
- பேரவை மண்டபத்திற்குள் வரும் பத்திரிகையாளர்கள் தங்களது கைபேசிகளைப் பாதுகாப்பாக வைக்கப் பத்திரிகையாளர் மாடங்களின் அருகிலும் புறாக்கூண்டு அறைகள் வைக்கப்பட்டுள்ளன.

- சட்டமன்ற உறுப்பினர்களின் வசதிக்காக BSNL Smart Pay Phone கருவிகள் பேரவை மண்டபத்தின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதித் தாழ்வாரங்கள், பிளாசா, உறுப்பினர்களின் ஓய்வறைகள், சட்டமன்றக் கட்சி அறைகளின் நுழைவாயில் மற்றும் பேரவை மண்டபத்தின் பத்திரிகையாளர்கள் மாடம் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.
- சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில், சட்டமன்ற பெண் உறுப்பினர்களுக்கெனத் தனியே நவீன உடற்பயிற்சிக் கூடம் ஒன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 1.2.2012 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.
- சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் பாதுகாப்பு கருதி வளாகத்தின் முக்கியப் பகுதிகளில் C.C.T.V. கேமிராக்கள் நிறுவப் பட்டுள்ளன.
- சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்திற்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் வாகனங்களில் தங்குத் தடையின்றி வந்து செல்லும் வகையிலும், பொதுமக்கள் வந்து செல்லும் வகையிலும், அரசு விருந்தினர் மாளிகையிலிருந்து சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வரையிலும் சிவானந்தா சாலையிலிருந்து சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வரையிலும் பழுதடைந்த நிலையில் இருந்த சாலைகள் சீரமைக்கப்பட்டு மின் விளக்கு வசதியுடன் அமைக்கப்பட்டு வருகின்றன.
- சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்ட பிரத்தியேக மின்னஞ்சல் முகவரிகளுக்குச் சட்டமன்றப் பேரவைச் செயலகத்திலிருந்து அனுப்பப்பெறும் பேரவை நிகழ்ச்சி நிரல் (Agenda), வினாக்கள் பட்டியல், கொள்கை விளக்கக் குறிப்புகள் (Policy Notes), பேரவைச் செய்தித்தாள் (Bulletin) உள்ளிட்ட பல்வேறு பேரவை ஆவணங்கள் சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் தயாரானவுடன் பேரவை கூடும் நாள்களில் தினந்தோறும் உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே அனுப்பப்பட்டு வருகின்றன. மின்னஞ்சல் அனுப்பப்பட்ட விவரமும் உறுப்பினர்களது கைபேசிக்குக் குறுந்தகவல் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

தமிழகம் வளம்பெற வளமான வரவு-செலவுத் திட்டம்

மாண்புமிகு நிதியமைச்சர்
திரு. **ஓ. பன்னீர்செல்வம்** அவர்கள்

- 2011–2012 ஆம் ஆண்டிற்கான ஒட்டு மொத்த திருத்த வரவு – செலவுத் திட்ட மதிப்பீடு முதல் முறையாக ரூபாய் ஒரு இலட்சம் கோடியைத் தாண்டியுள்ளது.
- 2012–2013 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம், ரூ.2,376.07 கோடி என்ற உயரளவு வருவாய் உபரியுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
- மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப்பற்றாக்குறை 2.87 சதவீதமாக உள்ளது.
- 13ஆவது நிதிக்குழுவின் குறியீடுகள் 24.8 சதவீதம் அனுமதித்துள்ளபோதும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் கடனின் விழுக்காடு 19.56 சதவீதம் என்ற அளவில் பராமரிக்கப்படுகிறது.
- தமிழ்நாட்டைச் சேர்ந்த ஓய்வூதியதாரர்களின் வாரிசுகளான திருமணமாகாத/ விவாகரத்தான/ விதவை மகள்களுக்குச் சில நிபந்தனைகளுக்குட்பட்டு வாழ்நாள் முழுவதற்கும் குடும்ப ஓய்வூதியம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.
- ‘தொலைநோக்குத் திட்டம் 2023’க்கான அறிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 22.03.2012 அன்று வெளியிடப்பட்டது.

திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை

❖ 2011–2012 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.23,535 கோடி என நிர்ணயம் செய்யப்பட்டது. இது 2010–2011 ஆம் ஆண்டின் திட்ட ஒதுக்கீட்டைக் காட்டிலும் (ரூ.20,068 கோடி) 17.28 சதவீதம் அதிகமாகும்.

❖ மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாட்டில் 1975–76 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2011–2012 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த மத்திய அரசின் திட்டக்குழு ரூ. 22.77 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

❖ நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் 1975–ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு மத்திய திட்டக்குழு 2011–2012 ஆம் ஆண்டிற்கு ரூ.47.19 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டம் மண்வளப் பாதுகாப்பு, வனம், தோட்டக்கலை, ஊரகச் சாலைகள், உள்ளாட்சி நிறுவனங்களின் மேம்பாடு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், சுற்றுலா, பட்டுவளர்ச்சி, மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம், சிறுபாசனம் ஆகிய முக்கியப் பகுதிகளில் செயல்படுத்தப் படுகிறது. இதன் திட்டப் பணிகள் 22 துறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

எதிலும் முதன்மை காணும் வருவாய்த்துறை

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்
திரு. **கே.ஏ. செங்கோட்டையன்** அவர்கள்

- முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்த ஆணையிடப்பட்டு, இத்திட்டத்தின்கீழ்க் கல்வி உதவித்தொகை, திருமண உதவி, முதியோர் ஓய்வூதியம், விபத்து நிவாரணம், இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்குச் செலவு ஆகியவை பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன. திட்டத்தின் உறுப்பினர்களுக்குப் பண்பேறிய சிவப்பு நிற அட்டைக்காக 1,40,71,395 நபர்களும், அவர்களைச் சார்ந்தவர்களுக்குச் சாம்பல் நிற அடையாள அட்டைக்காக 1,22,55,770 நபர்களும் கணக்கெடுக்கப்பட்டு உள்ளனர். இப்புதிய திட்டத்தின்கீழ் ரூ.190.17 கோடி, 2,69,486 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- விரைவுப் பட்டா மாற்றம் செய்து தரும் புதிய திட்டம் தொடங்கப்பட்டு, 15.56 இலட்சம் பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன.
- 1,21,804 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- நில அபகரிப்புப் புகார் தொடர்பான வழக்குகளில் நில அபகரிப்புத் தடுப்பு தனிப்பிரிவிலிருந்து பெறப்பட்ட 659 மனுக்களும் உரிய நிலப்பதிவுறுக்களுடன் சரிபார்க்கப்பட்டு மீளத் தனிப்பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளன.
- நீலகிரி மாவட்டம், கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டத்தில் உள்ள 11,204.47 ஏக்கர் ஜன்மம் நிலங்கள் வனத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.
- 18,760 ஏக்கர் அரசு நிலங்களில் ஏற்படுத்தப்பட்ட 77,734 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன.

- திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி கோட்டத்தை இரண்டாகப் பிரித்து மாதவரம் மற்றும் அம்பத்தூர் வட்டங்களை உள்ளடக்கிய அம்பத்தூர் கோட்டம் உருவாக்க ஆணையிடப்பட்டுள்ளது.

- இயற்கை இடரினால் ஏற்பட்ட மனித உயிரிழப்பிற்கான நிவாரணத் தொகை ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து இரண்டு இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மாடு ஒன்றுக்கு ரூ.10,000/– லிருந்து ரூ. 20,000/– ஆகவும் ஆடு ஒன்றுக்கு ரூ.1,000/–லிருந்து ரூ.2,000/–ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

- தீ விபத்தில் முழுவதுமாகச் சேதமடைந்த குடிசைகளுக்கு ரூ. 2,000/– லிருந்து ரூ.5,000/– ஆகவும், பகுதியாகச் சேதமடைந்த குடிசைகளுக்கு ரூ.1,000/– லிருந்து ரூ.2,500/– ஆகவும் நிவாரண உதவித்தொகை உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

- தஞ்சாவூர், திருப்பூர், உடுமலைப்பேட்டை, தாம்பரம் மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் அரசு அலுவலகங்கள் கட்டுவதற்கு ரூ.154 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

- அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர்களுக்கு நேர்முக உதவியாளர் (சட்டம்) பணியிடம் உருவாக்கப்பட்டுள்ளது.

- வருவாய்த்துறையில் நேரடி நியமனம் மூலம் 3,318 கிராம நிருவாக அலுவலர்கள், 978 உதவியாளர்கள் மற்றும் 643 கிராம உதவியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

கருணை அடிப்படையின் மூலம் 72 இளநிலை உதவியாளர்கள் 4 தட்டச்சர்கள் மற்றும் 208 கிராம நிருவாக அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

❖ அரசு நிலங்களை வேலியிட்டுப் பாதுகாக்கும் பொருட்டு ரூ.94.89 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ நிலச்சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் உபரியாக அறிவிக்கப்பட்ட 19 ஏக்கர் நிலம் 26 நபர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

❖ விரைவாகப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ்ப் பணியை விரைவுபடுத்தும் நோக்கோடு 220 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு தலா இரு கணினிகள், அச்சுப்பொறி, மேசை, நாற்காலி மற்றும் ஒரு ஒளி அச்சு நகலி வழங்கப்பட்டுள்ளன.

❖ நவீன நில அளவைக் கருவிகளான ஜி.ப்பி.எஸ். மற்றும் டோட்டல் ஸ்டேஷன் ஆகிய உபகரணங்களைக் கொண்டு புதியதாகத் தரம் உயர்த்தப்பட்ட மூன்றாம் நிலை நகராட்சிகளில் நகர நிலஅளவைப் பணி மேற்கொள்வதற்காக 8 மாவட்டங்களில் நவீன நிலஅளவைத் திட்ட அலகுகள் ஏற்படுத்த பணி நடைபெற்று வருகின்றது.

❖ நவீன நில அளவைக் கருவிகளான ஜி.ப்பி.எஸ். மற்றும் டோட்டல் ஸ்டேஷன் ஆகியவற்றைக் கையாள்வதற்கு சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள சி–ஸ்டார் பயிற்சி நிலையத்தில் 360 பேருக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

- நில அளவை மற்றும் நிலவரித் திட்டத் துறையில் கருணை அடிப்படையில் 173 பேருக்குப் பணிநியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- நவீன நில அளவை மற்றும் வரைபடங்கள் தயாரிப்பதில் 71 நபர்களுக்கு நவீனப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- பயிரிடு குத்தகைதாரர்கள் மற்றும் நில உடமைதாரர்கள் (கோயில் நிலங்கள் உள்பட) ஆகியோருக்கிடையே ஏற்படும் தகராறுகள் 6 வருவாய் நீதிமன்றங்களால் தீர்த்து வைக்கப்படுகின்றன.

- மக்களின் தேவைகள் மற்றும் வசதிகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு திருப்புவனம், கலசப்பாக்கம், ஆலத்தூர், கிணத்துக்கடவு, திருப்போரூர், அன்னூர், சின்னசேலம், அந்தியூர், கொல்லிமலை ஆகிய 9 புதிய வட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

- இதனை நிறைவேற்றும் பொருட்டு, அரசுக்குப் பரிந்துரை செய்ய ஒரு அலுவலர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

- வரும் கல்வி ஆண்டு முதல் தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் படிக்கும் மாணவ – மாணவியர்களுக்கு ஆறாம் வகுப்பிலேயே அவர்களுக்குத் தேவையான சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் ஆகியவை அளித்தல்.

- இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் போது உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவும், உரிய நிவாரணப் பணிகளை மேற்கொள்ளப் பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கும் பொருட்டு, 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாநிலப் பேரிடர் மேலாண்மைப் பயிற்சி நிலையம் அமைத்தல்.

மின் பற்றாக்குறையிலிருந்து மின் நிறைவை நோக்கி

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்

திரு. **நத்தம் இரா. விசுவநாதன்** அவர்கள்

- ❖ மாநிலப் பிரிவின்கீழ் 29.11.2011 அன்று பவானி கட்டளை தடுப்பணை–2 இல் 30 மெகாவாட் (2 X 15 மெகாவாட்) மின் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ மாநிலப் பிரிவின்கீழ்ப் பெரியாறு வைகை – 2 சிறு புனல்மின் திட்டம் 2.5 மெகாவாட் (2 X1.25 மெகாவாட்) மின் கட்டமைப்புடன் 30.1.2012 அன்று இணைக்கப்பட்டுள்ளது.
- ❖ சிம்மாத்திரி நிலை 2 முதல் அலகு 500 மெகாவாட் 16.9.2011 அன்று மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாட்டின் பங்கு 95 மெகாவாட்.
- ❖ 962 மெகாவாட் அளவிற்குப் புதிய காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன.
- ❖ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகமே தூத்துக்குடி அனல்மின் நிலையம் (1 X 800 மெகாவாட்) நிலை– நான்கு (IV) திட்டத்தை, போட்டி ஏலமுறையின்கீழ் செயல்படுத்திட அரசு ஆணையிட்டுள்ளது.
- ❖ போட்டி ஏலமுறையின்கீழ், உப்பூர் (2 X 800 மெகாவாட்) அனல் மின் திட்டம், உடன்குடி அனல் மின் திட்டம் விரிவாக்கம் (1 X 800 மெகாவாட்) நிலை–II ஆகியவற்றிற்குத் தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ எண்ணூர் அனல் மின் நிலையம் முழுமையான ஆயுட்காலத்தை நிறைவு செய்துவிட்டதால், புதிய மாற்று மின்நிலையத்தை நிறுவுவதற்கு (1 X 660 மெகாவாட்) அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ காரே பெல்மா செக்டர் – I நிலக்கரிப் பகுதியிலிருந்து நிலக்கரியை எடுப்பதற்கும் மற்றும் சுரங்க வளாக அனல் மின் நிலையம் அமைப்பதற்கும் லான்கோ இன்பராடெக் லிமிடெட் நிறுவனம் ஒப்பந்தத்தாரராகத் தேர்வு செய்யப்பட்டு அதற்கான உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

- ❖ மாநிலப் பிரிவின் கீழ் உடன்குடி சூப்பர் கிரிட்டிக்கல் அனல் மின் (2 X 800 மெகாவாட்) திட்டம் ரூ.8,000 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.
- ❖ 16.8.2011 அன்று 400 கி.வோ. துணை மின் நிலையம் சுங்குவார் சத்திரத்தில் இயக்கி வைக்கப்பட்டுள்ளது.
- ❖ 20 எண்ணிக்கையிலான 110/33 கி.வோ. துணை மின் நிலையங்கள் இயக்கி வைக்கப்பட்டுள்ளன.
- ❖ 683.712 சுற்று கி.மீ உயர் அழுத்த மின்பாதை இயக்கி வைக்கப்பட்டுள்ளது.
- ❖ ஊரக மின்மயமாக்கல் கழகம் எஞ்சியுள்ள நீலகிரி, திருநெல்வேலி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் ரூ.37.27 கோடியில் ராஜீவ்காந்தி கிராமப்புற மின்மயமாக்கல் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- ❖ தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குப் பங்கு மூலதனத் தொகையாக ரூ. 4,100 கோடி, அரசின் வழிவகைகள் முன்பணமாக ரூ. 1,000 கோடி, இலவச மின்சாரத்திற்கான மானியத் தொகை ரூ.2,058.19 கோடி அளவுக்குத் தமிழக அரசு நிதி உதவிகளை வழங்கியுள்ளது.
- ❖ புதுப்பிக்கத்தக்க மின் ஆதாரத்திற்கான ஊக்கத்தொகை ரூ.455.16 கோடி மத்திய அரசின் மானியமாக வழங்கப்படுவதற்கு முன் தமிழக அரசால் முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது.
- ❖ முன்னாள் இராணுவத்தினரைக் கொண்ட 40 குழுக்கள் 9,306 மின்திருட்டுகளைக் கண்டுபிடித்துள்ளனர். இத்திருட்டுகளில் ஈடுபட்டோர் மீது இழப்பீட்டுத்தொகை மற்றும் சமரசத் தொகையாக ரூ.22.06 கோடி விதிக்கப்பட்டுள்ளது.
- ❖ 600 புதிய உதவிப்பொறியாளர்களை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பட்டியல் பெறப்பட்டு நேரடி நியமனம் செய்யத் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ பகுதி நேரத் துப்புரவுப் பணியாளர்கள் காலமுறை ஊதியம் அளிக்கப்பட்டுப் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.
- ❖ கடலூர், விழுப்புரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் 30.12.2011 அன்று கடுமையாக வீசிய தானே புயலால் பாதிக்கப்பட்ட வீடுகள் மற்றும் அத்தியாவசியப்

பணிகளுக்கான மின் இணைப்புகளுக்குப் போர்க்கால அடிப்படையில் புயல் வேகத்தில் செயல்பட்டு இரண்டு வாரத்திற்குள்ளாகவே மின்சார வசதி சரிசெய்யப்பட்டுள்ளது. இதற்கென ரூ.300 கோடி நிதி உதவியைத் தமிழக அரசு வழங்கியது.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை

- இந்தியாவின் முதல் ஒரு மெ.வாட் திறனுள்ள சூரிய ஒளி மின் திட்டம் நாகை மாவட்டத்தில் மேற்குக் கோமல் கிராமத்தில் 10.6.2011 அன்று நிறுவப்பட்டது. இதனைத் தொடர்ந்து, மேலும் ஒவ்வொன்றும் ஒரு மெகாவாட் திறன் கொண்ட 4 சூரிய ஒளி மின் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.
- 20,000 தெரு விளக்குகளைச் சூரிய சக்தி மூலம் ஒளிர்வித்தல் மற்றும் 60,000 எண்ணிக்கையிலான முதலமைச்சரின் சூரிய ஒளி பசுமை வீடுகள் திட்டம் ஆகியவற்றிற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு, உலகளவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இறுதி நிலையிலுள்ளது.
- 31.45 மெகாவாட் திறன் கொண்ட 4 தாவர சக்தி இணை மின் உற்பத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.
- மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் மூலம் தமிழ்நாட்டில் 12 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் 183 மெகாவாட் திறன் கொண்ட இணை மின் உற்பத்தித் திட்டங்களுக்காக ரூ.58.25 கோடி மானியம் பெறுவதற்கான ஒப்பளிப்பு பெறப்பட்டுள்ளது.
- தூத்துக்குடி மாவட்டம், செக்காரக்குடி கிராமத்தில் 5 மெகாவாட் சூரிய ஒளி மின் நிலையம் 29.3.2012 அன்று நிறுவப்பட்டுள்ளது.
- வெவ்வேறு இடங்களில் 913.16 ச.மீ. பரப்பு சூரிய சக்தி வெந்நீர் அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.
- காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங்குளத்தூர் எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகத்தில் 592 ச.மீ. பரப்பிலும், சென்னைச் செம்பரம்பாக்கம் எல் அண்டு டி பிளாஸ்டிக் லிமிடெட் நிறுவனத்தில் 64 ச.மீ. பரப்பிலும், சூரியசக்தி நீராவி சமைப்பான்கள் நிறுவப்பட்டுள்ளன.
- பையனூர் டர்போ எனர்ஜி லிமிடெட் நிறுவனத்தில் 169 ச.மீ. பரப்பு சூரியசக்தி குளிர்சாதன அமைப்பும், பல்வேறு தொழிற்சாலைகளில் 405 ச.மீ.பரப்பு சூரியசக்தி வெப்பக் காற்று அமைப்பும் நிறுவப்பட்டுள்ளன.
- மலைப்பகுதி சார்ந்த கொடைக்கானல்/ஊட்டி/கொல்லி மலை போன்ற இடங்களில் 63 குரும்புனல்/நீராலைகள் மத்திய அரசு நிதியுதவியுடன் சுய மின் உபயோகத்திற்காக நிறுவப்பட்டுள்ளன.
- மின் கலம் மூலம் இயங்கும் இரு சக்கர ஊர்திகள் சுமார் 1,427 எண்ணிக்கை பயனீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- Electrotek, Science City; Codissia, Coimbatore; Wind Expo, Coimbatore முதலான பல்வேறு கண்காட்சிகளில் இம்முகமை பங்கேற்றது.

❖ 35 மெகாவாட் திறன் கொண்ட 3 தாவர சக்தி சார்ந்த திட்டங்களுக்கு, இசைவு அளிக்கத் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குப் பரிந்துரை செய்யப் பட்டுள்ளது.

❖ 'பசுமை எரிசக்தி விரும்புவோம்' என்ற பெயரில் 10 வார கால விழிப்புணர்வு இயக்கம் நடத்தப்பட்டு, 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் 750 பள்ளிகளில் இருந்து பலவிதப் புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் போட்டிகளில் பங்கேற்றனர். மாநில அளவில் வெற்றி பெற்ற 6,720 மாணவர்களுக்குப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உபகரணங்கள் பரிசாக வழங்கப்பட்டன.

❖ காற்று மற்றும் சூரிய கலப்பின அமைப்புப் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் 10 பெரிய நகரங்களில் உள்ள கல்வி நிறுவனங்களில் நடத்தப்பெற்றன. 532 கல்லூரிகள் பங்கேற்று, 1.25 மெ.வா. திறனுள்ள கலப்பின அமைப்புகளுக்கு (இந்தியாவிலேயே) முதன் முதலாகக் (1 மெகாவாட்டுக்கு அதிகமாக) கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

❖ 10,000 பார்வையாளர்கள், 1,400 மாநாட்டுப் பங்கேற்பாளர்கள், 105 அரங்கங்களுடன் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையால் நடத்தப்பட்ட ரெனர்ஜி 2012 என்ற பன்னாட்டு மாநாடு மிகப்பெரிய வெற்றி பெற்றது.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை

❖ தமிழகத்தில் உள்ள 8 வடிப்பாலைகளில் எத்தனால் தயாரிக்க அனுமதி அளிக்கப் பட்டுள்ளது. 15.5.2012 முதல் 30.9.2012 வரை உள்ள காலத்திற்குத் தமிழ்நாட்டிற்குத் தேவையான எத்தனால் 3.37 கோடி லிட்டர் 8 இடங்களில் கொள்முதல் செய்யவும் எண்ணெய் நிறுவனங்கள் முடிவு செய்துள்ளன. எத்தனால் தயாரிப்பதனால் சர்க்கரை ஆலைகளுக்குக் கூடுதல் வருவாய் கிடைக்குமாதலால், கரும்பு விவசாயிகள் இதன் பயனைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

❖ கடந்த ஆண்டுகளில் முன்னாள் மதுவிலக்குக் குற்றவாளிகளின் மறுவாழ்விற்கு கடனாக வழங்கப்பட்ட மறுவாழ்வு நிதித் தொகை ரூ.5 கோடியாக உயர்த்தப்பட்டு முழு மானியமாக வழங்க அரசு ஆணையிட்டது. இத்திட்டம், தமிழகத்தில் எதிர்காலத்தில் கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் அதன் மூலம் ஏற்படும் தீமைகள் முற்றிலும் இல்லாத நிலையை உருவாக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகிறது.

❖ 3.1.2012 முதல் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (TASMAC) மதுபானச் சில்லறை விற்பனைக் கடைகளுக்கு, மது விற்பனை இல்லாத நாள்களை 5–லிருந்து 8–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதன்படி காந்தி ஜெயந்தி, திருவள்ளுவர் தினம், மகாவீர் ஜெயந்தி, நபிகள் நாயகம் பிறந்த நாள், வள்ளலார் நினைவு நாள், சுதந்திர தினம், குடியரசு தினம் மற்றும் மே தினம் ஆகிய நாள்களில் மதுவிற்பனை நடைபெறாது.

❖ மக்கள் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகாமலிருக்கவும், குடிப்பழக்கத்திற்கு அடிமை யானவர்கள் அப்பழக்கத்தைக் கைவிட வேண்டும் என்ற இரு நோக்கங்களுடன் மாநிலம் முழுவதும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன. அரசு, இதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

நகர்ப்புற வளர்ச்சி நாடெல்லாம் மகிழ்ச்சி ஊரக வளர்ச்சி ஊர்தோறும் மகிழ்ச்சி

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்
திரு. **கே.பி. முனுசாமி** அவர்கள்

- ❖ நகர்ப்புறங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளுக்காகச் சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் மற்றும் இதர மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கான ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் ஆகிய இரண்டு மாபெரும் புதிய நிதித் திட்டங்கள் இந்த அரசால்

கோயம்புத்தூர் பில்லூர்–2 குடிநீர்த் திட்டம் – குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்

தொடங்கப்பட்டுள்ளன. சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்திற்கு ரூ.500 கோடியும் மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திற்கு ரூ.750 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையரகம்

❖ 9 மாநகராட்சிகள் மற்றும் 125 நகராட்சிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.506.48 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

❖ நகர்ப்புறச்சாலைக் கட்டமைப்புத் திட்டத்தின்கீழ் 35 உள்ளாட்சி அமைப்புகளில் ரூ.217.11 கோடி மதிப்பீட்டில் 584.395 கி.மீ. சாலைப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

❖ நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 196.02 கி.மீ. பிளாஸ்டிக் சாலைகள் அமைக்கும் பணிகள் ரூ.34.26 கோடி மதிப்பீட்டில் 119 நகராட்சிகள் மற்றும் 9 மாநகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

❖ சுற்றுச்சூழலைப் மேம்படுத்தும் வகையில் 12 நவீன எரிவாயு தகன மேடைகள் அமைக்கும் பணிகள் 10 நகராட்சிகள் மற்றும் 2 மாநகராட்சிகளில் ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

- 9 நவீன இறைச்சிக் கூடங்கள் ரூ.3.30 கோடி செலவில் 3 மாநகராட்சி மற்றும் 4 நகராட்சிப் பகுதிகளில் கட்டப்பட்டு வருகின்றன.
- தூத்துக்குடி மாநகராட்சியில் 1.98 கி.மீ நீளத்திற்கு, "பக்கிள் ஓடை" கால்வாய் சீரமைக்கும் பணி ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.
- 9 மாநகராட்சிகளில் ரூ.1.37 கோடி மதிப்பீட்டில், மாற்றுத் திறனாளிகளுக்கான 68 கழிவறைகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

- ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 6000 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது.
- சிறப்புத் திட்டங்களின்கீழ் 3447 அரசுப் பள்ளிகளுக்கும், 1390 அங்கன்வாடி மையங்களுக்கும் மற்றும் 229 அரசு விடுதிகளுக்கும் குடிநீர் வசதி வழங்கப்பட்டுள்ளது.
- 769 நீர்ச் செறிவூட்டும் கட்டமைப்புகளான தடுப்பணைகள் மற்றும் நீர்ச்செறிவூட்டுக் குழிகள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- 72 இலங்கை மறுவாழ்வு முகாம்களுக்குக் குடிநீர் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.
- மத்திய மற்றும் மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டின்கீழ் முறையே ரூ.287.61 கோடி மற்றும் ரூ.465.39 கோடி செலவில் ஊரகக் குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- இராசிபுரம் நகராட்சி, குத்தாலம், காட்பாடி, காந்திநகர், கங்குவார்பட்டி, திட்டச்சேரி, கீரனூர், சங்கராபுரம், செங்கம், புதுப்பாளையம், செஞ்சி, சித்தையன் கோட்டை மற்றும் லப்பைகுடிகாடு பேரூராட்சிகள் ஆகிய 13 நகரங்களுக்கான (1 நகராட்சி மற்றும் 12 பேரூராட்சிகள்) குடிநீர்த்திட்டங்கள் ரூ.39.33 கோடி மதிப்பீட்டில் 2.01 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் முடிக்கப்பட்டுள்ளன.
- மறைமலைநகர் மற்றும் சின்னமனூர் நகராட்சிகளில் 2 பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் முறையே 48,463 மற்றும் 38,360 மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப் பட்டுள்ளன.
- ஒகேனக்கல் குடிநீர் மற்றும் புளோரைடு பாதிப்பு குறைப்புத் திட்டத்தில் இதுவரை ரூ.891 கோடி செலவில் 57 விழுக்காடு பணிகள் முடிவுற்றுள்ளன.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

- சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.189.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சென்னை மாநகருக்குக் குடிநீர் மற்றும் கழிவுநீர் வசதிகளை மேம்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.
- சுமார் 1.30 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் போரூர் பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் ரூ.12.94 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- பெருங்குடியில் நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறனுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ரூ.61.19 கோடி திட்ட மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சிகள் இயக்குநரகம்

- ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.250.80 கோடி ஒதுக்கீட்டில் 4,940 பணிகள் 529 பேரூராட்சிகளில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.
- ரூ.5.49 கோடி மதிப்பீட்டில் 20 புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ.2.92 கோடி மதிப்பீட்டில் 13 பேரூராட்சிகளில் குடிநீர் அபிவிருத்தித் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- நகர்ப்புறச் சாலைகள் அடிப்படைக் கட்டமைப்பு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ 51.55 கோடி செலவில் 440 சாலைப் பணிகள் 296.469 கி.மீ அளவிற்கு 339 பேரூராட்சிகளில் மேம்படுத்தும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.
- பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு 108.756 கி.மீ நீளத்திற்கு ரூ.18 கோடி மதிப்பீட்டில் 94 பேரூராட்சிகளில் புதிய சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.
- பேரூராட்சிகளில் இளநிலை உதவியாளர், வரித்தண்டலர், துப்புரவுப் பணியாளர் என மொத்தம் 264 காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டன.
- நகர்ப்புற ஏழைகளுக்குத் தனித் திறன் மேம்பாட்டுப் பயிற்சி, சுய வேலை வாய்ப்பு மற்றும் உழைப்பூதியம் பெறும் வேலை வாய்ப்புகளை உருவாக்கப் பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.23.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- நல்ல நகர்ப்புற நிர்வாகங்களான பாதுகாப்பு, ஆரோக்கியம், பசுமை, நேர்த்தி மற்றும் உள்ளீட்டான நகரங்களை உள்ளடக்கிய முனிசிபாலிகா “10ஆவது தேசிய மாநாடு” சென்னையில் 2012, ஜனவரி 23 முதல் 25 வரை நடைபெற்றது.
- திறந்தவெளிக் கழிப்பிடம் இல்லாத நிலையினை ஏற்படுத்த 238 பேரூராட்சிகளில் 645 சுகாதார வளாகங்கள் ரூ.44.15 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் 697 சுகாதார வளாகங்கள் ரூ.11.09 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- தமிழகத்திலேயே முதன்முறையாகக் கன்னியாகுமரி பேரூராட்சியில் முன்னோட்ட அடிப்படையில் ரூ.8.40 இலட்சம் மதிப்பீட்டில் மின்னணுக் கழிவறை நிறுவப்பட்டுள்ளது.
- மாமல்லபுரம் பேரூராட்சியில் குப்பைக் கழிவிலிருந்து எரிசக்தி மாற்றும் திட்டம் பிபிசி–யால் நடத்தப்பட்ட உலக சவால்–2011 போட்டியில் இறுதிப் பட்டியலுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி

- ❖ சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ரூ.333.27 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு மழைநீர் வடிகால்வாய்கள், தெருக்கால்வாய்கள், தெருவிளக்குகள், பேருந்து நிழற்குடைகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ❖ ரூ.95.00 இலட்சம் செலவில் 615 தெரு விளக்கு மின் கம்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ரூ.5.00 கோடி செலவில் 2,718 புதிய தெரு விளக்குகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ❖ மின் சேமிப்பைக் கருத்தில் கொண்டு 1,016 இன்டக்சன் (Induction) வகை விளக்குகளுடன் கூடிய புதிய தெரு விளக்குகள் ரூ.2.00 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன.
- ❖ 77.35 கி.மீ நீளத்திற்கு 118 பேருந்து சாலைகள் ரூ.50.21 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ❖ சென்னை மாநகராட்சி சுகாதாரத் துறையின்கீழ், இரண்டு நீரிழிவுச் சிகிச்சை மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் 74 செமி ஆட்டோ அனலைசர் எனப்படும் உபகரணங்கள் ரூ.40.07 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்டு நகர்ப்புற ஆரம்பச் சுகாதார மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

திருப்பூர் மாநகராட்சி புதிய அலுவலகக் கட்டடம்

- சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 40 மைக்ரானுக்குக் கீழ் உள்ள பிளாஸ்டிக் பைகள் (ம) பொருள்கள் 2 டன் அளவில் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.
- 5 இலட்சம் பள்ளி மாணவ மாணவிகளுக்குக் குடற்புழு நீக்கச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.
- மழை நீர் வடிகால் திட்டத்தின்கீழ் 9.68 கி.மீ. நீளத்திற்கு ரூ.29.83 கோடியில் 77 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தற்போது 223 பணிகள் 130.96 கி.மீ. நீளத்திற்கு ரூ.259.80 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.
- பொதுத்தேர்வை எதிர்கொள்ளும், 10வது மற்றும் 12வது பயிலும் 16,332 மாணவ மாணவியருக்கு 02.01.2012 முதல் மாலை நேரச் சிறப்பு வகுப்பில் புத்துணர்ச்சியுடன் கல்வி பயிலத் தினமும் சுண்டல் வழங்கப்பட்டது. மேலும், விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள 5 பள்ளிகளில் 304 மாணவர்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

முதலமைச்சரின் சூரிய ஒளி மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம்

- பசுமை வீடு ஒவ்வொன்றும் 300 சதுர அடி பரப்பளவுடன் 1.80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சூரிய ஒளிவிளக்குடன் கட்டப்படுகிறது.
- 2011–12 நிதியாண்டில் 60,000 பசுமை வீடுகள் ரூ.1,080 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- மொத்த வீடுகளில் பழங்குடியினருக்கு – 1%, தாழ்த்தப்பட்டோருக்கு – 29% இதர வகுப்பினருக்கு 70% வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் (தாய்) திட்டம்

❖ மொத்தம் உள்ள 12524 கிராம ஊராட்சிகளில் உள்ள 79394 குக்கிராமங்களில், 2011–12–ஆம் ஆண்டில் 2020 கிராம ஊராட்சிகளில் உள்ள 25335 குக்கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖ 2011–12–ஆம் ஆண்டில் ரூ.680.00 கோடியில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதில் தகவல், கல்வி மற்றும் தொடர்புப் பணிகளுக்காக ரூ.27.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ குக்கிராமம் வாரியாக அடிப்படைத் தேவைகளைக் கண்டறிவதற்கான கணக்கெடுப்புப் பணி முடிக்கப்பட்டுக் கணினியில் பதியப்பட்டுள்ளது. (www.tnrd.gov.in)

❖ இப்புள்ளி விவரங்களின் அடிப்படையில் ரூ.680.00 கோடி மதிப்பீட்டில் 68232 பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் 13464 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள் யாவும் ஜூன் 2012–க்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களைப் புதுப்பித்தல்

❖ 12,811 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

❖ 2011–12ம் ஆண்டில் ஊரகக் கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் ரூ.170 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

❖ இவ்வளாகங்களைப் பயன்படுத்துவதற்கும், பராமரிப்பதற்கும் பயனாளிகள் குழு அமைக்கப்பட்டு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தூய்மைக் கிராம இயக்கம்

❖ இவ்வரசால் “தூய்மைக் கிராம இயக்கம்” 2011–12ம் ஆண்டில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு, ரூ.1.55 கோடி இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

❖ “தூய்மைக் கிராம இயக்க” விருது, மாவட்டத்திற்கு ஒரு கிராம ஊராட்சி வீதம் 31 கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு ஆகஸ்ட் 15ஆம் தேதி விருது வழங்கப்படவுள்ளது.

❖ ரூ.5 இலட்சம் ஊக்கத்தொகை மற்றும் சான்றிதழுடன், இவ்விருது வழங்கப்படும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்

❖ மொத்தம் உள்ள 1.05 கோடி கிராமக் குடியிருப்புகளில் இதுவரை 73.23 இலட்சம் குடியிருப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

- 1.15 கோடி தனிநபர் வேலைக்கான அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.
- இதுவரை உருவாக்கப்பட்ட மொத்த மனித சக்தி நாள்கள் 33 கோடி ஆகும்.
- 2011–12–ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட மொத்த தொகை ரூ.3,000 கோடி.
- ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் குறைந்தபட்ச ஊதியம் ரூ.119/– ஆகும். 2012–13–ஆம் ஆண்டில் ரூ.132–ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ்ச் சராசரி ஊதிய விகிதம் ரூ.70/–லிருந்து ரூ.110/–ஆக உயர்ந்துள்ளது.

நபார்டு – ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

- ரூ.145.23 கோடி செலவினத்தில் 1269.657 கிலோ மீட்டர் நீளமுள்ள 451 சாலைப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- 2011–12–ஆம் ஆண்டில் நபார்டு வங்கி ரூ.143 கோடி அனுமதித்திருந்தாலும், நபார்டு 17–ன்கீழ் கூடுதலாகச் சிறப்பு ஒதுக்கீடாக ரூ.315 கோடி நிதியினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சிறந்த செயல்பாட்டிற்காக அனுமதித்து உள்ளது.

- இதன்மூலம் 1729.28 கிலோ மீட்டர் நீளமுள்ள 637 சாலைகள் மேம்படுத்தப்பட உள்ளன.

பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு தார்ச்சாலை அமைத்தல்

- இத்திட்டத்தின்கீழ் 110.21 கிலோ மீட்டர் நீளமுள்ள 45 சாலைப் பணிகள் ரூ.9 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 60.84 கி.மீ. நீளமுள்ள 25 சாலைப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- பிளாஸ்டிக் கழிவுகளைத் தரம் பிரித்துச் சிறு துணுக்குகளாக மாற்றும் நிலையங்கள் 10 மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் அமைத்திட ரூ.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த பள்ளி உள்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம்

❖ 2011–2012–ம் ஆண்டில் இத்திட்டச் செயல்பாட்டிற்கென ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ இத்திட்டமானது 2011–12ஆம் ஆண்டில் 'தாய்' திட்டம் செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படவுள்ளது.

❖ 'தாய்' திட்டத்திற்கான கணக்கெடுப்பு விவரத்தின் அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

❖ 2011–12–ம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ்க் கட்டப்பட்டு வரும் வீடுகளுக்குக் கான்கிரீட் கூரை அமைக்க வழங்கப்பட்ட தொகை ரூ.30,000/–லிருந்து ரூ.55,000/– ஆக மாநில அரசால் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் மாநில அரசின் பங்குத் தொகை ரூ.66,250/– மத்திய அரசின் பங்குத் தொகை ரூ.33,750/– ஆகும்.

❖ இதன்படி தமிழ்நாட்டில் 2011–12–ஆம் ஆண்டு முதல் ஒரு வீட்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்ட அலகுத் தொகை ரூ.1,00,000/– ஆகும்.

❖ 2011–2012–ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 1,00,553 வீடுகள் ரூ.1005.53 கோடி மதிப்பீட்டில் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

❖ இதுவரை 92,566 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய வீடுகளின் கட்டுமானப்பணி முன்னேற்றத்தில் உள்ளன.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

- ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ரூ.1.75 கோடியாக இருந்த நிதியானது 2011–12ஆம் ஆண்டில் ரூ.2.00 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.
- 2011–12 ஆம் ஆண்டிற்கு ரூ.470.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இதுவரை 14,121 பணிகள் எடுக்கப்பட்டு, 1417 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

தன்னிறைவுத் திட்டம்

- தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ஊரக மற்றும் நகரப் பகுதிகளில் பொது மக்கள் பங்களிப்புடன் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.
- குறைந்தபட்ச பொதுமக்கள் பங்களிப்பு தேர்வு செய்யப்பட்ட பணியின் மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பங்கு ஆகும்.
- தன்னிறைவுத் திட்டம் செயல்பாட்டிற்கென 2011–12ஆம் ஆண்டிற்கு ரூ.100 கோடி நிதியினை அரசு அனுமதித்துள்ளது.
- இதுவரை 1408 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

சூரிய சக்தியுடன் கூடிய மின் விளக்கு பொருத்துதல்

- இத்திட்டத்தின் மூலம் 2016–ஆம் ஆண்டு வரையான ஐந்து ஆண்டுகளில் 1000 கிராம ஊராட்சிகளில் 1,00,000 தெரு விளக்குகள் சூரிய சக்தி விளக்குகளாக மாற்றியமைக்கப்படும்.
- 2011–12 ஆம் ஆண்டில் 20,000 தெரு விளக்குகளைச் சூரிய சக்தி தெரு விளக்குகளாக மாற்றியமைப்பதற்கு ரூ.52.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இப்பணியானது, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையினால் செயல்படுத்தப்பட உள்ளது.

உள்ளாட்சித் தேர்தல்கள் 2011

- மூன்று அடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் 2011 அக்டோபர் மாதம் வெற்றிகரமாக இந்த அரசால் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.
- 1,19,399 தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய மக்கள் பிரதிநிதிகள் பதவியேற்றுள்ளனர்.

மாநில நிதிக்குழு மானியம்

- 2011–12 ஆம் ஆண்டிற்கு மாநில நிதிக்குழு மானியமாக ரூ.3,332.46 கோடி மூன்று அடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பிரித்து வழங்கப்பட்டுள்ளது.

- கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கான ஒதுக்கீடு விகிதாச்சாரம் 60:32:8 ஆகும்.

ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதி

- இத்திட்டத்தின்கீழ் 2011–12ஆம் ஆண்டிற்கு ரூ. 532.42 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இதில் மூன்றில் இரண்டு பங்குத் தொகையான ரூ.354.95 கோடி 67:33 என்ற விகிதாச்சாரத்தில் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பிரித்து வழங்கப்பட்டுள்ளது.
- மூன்றில் ஒரு பங்குத் தொகையான ரூ.177.48 கோடி ஊரகப்பகுதியில் உள்ள முன்னுரிமைத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பதின்மூன்றாவது நிதிக்குழு மானியம்

- பதின்மூன்றாவது நிதிக்குழு அடிப்படை மானியமாக ரூ.352.62 கோடி, கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டு ள்ளது.
- இத்தொகையானது, கிராம ஊராட்சிகளில் குடிநீர், தெருவிளக்கு, சுகாதார இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காகவும் தெருவிளக்கு வசதிக்கான மின் கட்டணம் மற்றும் குடிநீர்க் கட்டணத்திற்காகவும் பயன்படுத்தப்பட உள்ளது.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

- மகளிர் திட்டத்தில் 5,56,311 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, இவற்றில் 85.70 இலட்சம் மகளிர் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர். இக்குழுக்களின் மொத்த சேமிப்பு 3,374.60 கோடி ரூபாய் ஆகும்.
- 4.85 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பயன் பெறும் வகையில் வழங்கப்பட்ட வங்கிப் பொருளாதாரக் கடன் தொகை ரூ. 15,633.83 கோடி ஆகும்.
- 2011–12ஆம் ஆண்டில் இதுவரை 65,000 குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- சுழல்நிதியாக 2011–12ஆம் ஆண்டில் 22,214 குழுக்களுக்குத் தலா 15000/– ரூபாய் வீதமும், 17,050 குழுக்களுக்குத் தலா ரூ.10000/–வீதமும் வழங்கப்பட்டுள்ளன.
- இந்த நிதியாண்டில் 30.4.2012 வரை ரூ.4,030 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.
- 2,230 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தரமதிப்பீடு செய்யப்பட்டு, தலா ஒரு இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகை பெற்றுள்ளன.

- ❖ 2011–12ஆம் ஆண்டில் இதுவரை 272 குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றில் 138 கூட்டமைப்புகள் தரமதிப்பீடு செய்யப்பட்டு, தலா ஒரு இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகை பெற்றுள்ளன.
- ❖ இளைஞர்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சித் திட்டத்தின் மூலம் 25,000 இளைஞர்கள் பல்வேறு தொழிற்பயிற்சிகள் பெற்று வருகின்றனர்.
- ❖ 4,081 பெண்களுக்குத் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- ❖ வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும் சுயஉதவிக்குழுக்களின் உறுப்பினர்களுக்குப் பல்வேறு கலைப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

புது வாழ்வுத் திட்டம்

- ❖ 2509 கிராம ஊராட்சிகளில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- ❖ பெண்கள் மற்றும் இளைஞர்களைக் கொண்டு 334 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- ❖ மாற்றுத்திறனாளிகளைக் கொண்டு 119 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- ❖ 14,093 மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு வாழ்வாதார நடவடிக்கைகள் தொடங்குவதற்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.
- ❖ 25,330 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.
- ❖ 40,730 இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.
- ❖ 82 ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.
- ❖ ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகளுக்கு ரூ. 92.81 கோடி வாழ்வாதார நிதிக்காக வழங்கப்பட்டுள்ளது.
- ❖ 1545 பூச்சரங்கள் (ஒத்த தொழில் குழுக்கள்) அமைக்கப்பட்டுள்ளன.
- ❖ 2795 புதிய மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான சுய உதவிக்குழுக்கள் சுழல் நிதி பெற்றுள்ளன.
- ❖ சுய உதவிக்குழுக்களுக்கு முதல் தவணை நிதியுதவி ரூ.17.2 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- ❖ 3604 சுய உதவிக்குழுக்களுக்கு இரண்டாம் நிலைத் தவணை நிதியுதவியாக ரூ.46.48 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- திட்டத்தின் முயற்சியால் 2,743 மாற்றுத் திறனாளிகள் பராமரிப்புத் தொகை பெற்றுள்ளனர்.
- 5,251 மாற்றுத் திறனாளிகள் உபகரணங்கள் மற்றும் கருவிகள் பெற்றுள்ளனர்.
- திட்ட முயற்சியின் பலனாக 17,338 பேர் முதியோர்களுக்கான உதவித் தொகை பெற்றுள்ளனர்.
- 10 புதிய மாவட்டங்களில் (அரியலூர், தர்மபுரி, திண்டுக்கல், கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, பெரம்பலூர், புதுக்கோட்டை, சிவகங்கை, விருதுநகர்) உள்ள மிகவும் பின்தங்கியுள்ள 50 வட்டாரங்களில் ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் துவக்கப்பெற்று நடைபெற்று வருகின்றன.

சுனாமி மறுவாழ்வுத் திட்டங்களின் சாதனைகள்

- சுனாமி திட்டச் செயலாக்க அலகு மூலம் சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள் 11 கடலோர மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- அவசர காலச் சுனாமி மறுகட்டமைப்புத் திட்டம் – கடலோரச் சமுதாயத்தின் பாதிப்புக்கு உள்ளாகும் நிலையைக் குறைக்கும் திட்டம் ஆகியவை உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப் பட்டுள்ளன.
- கடலோரச் சமுதாயத்தின் பாதிப்புக்குள்ளாகும் நிலையைக் குறைக்கவும் சுனாமி பாதித்த பகுதிகளில் எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக்கட்டவும் ஏற்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.670 கோடி ஆகும்.
- எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக்கட்டுதல் திட்டத்தின்கீழ், கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் முதல் 1,000 மீட்டருக்குள் அமைந்துள்ள 15,056 எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீண்டும் கட்டுவதற்கு அடையாளம் காணப்பட்டது.
- 11 கடலோர மாவட்டங்களில் உள்ள இந்த வீடுகள் 157 தொகுப்புகளாக பிரிக்கப்பட்டுள்ளன.
- 8,341 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு ரூ.358.49 கோடி செலவிடப்பட்டுள்ளது.
- அவசர காலத்தில் கடலோரப் பகுதிகளில் பாதுகாப்பான பகுதிகளுக்கு எளிதில் தப்பிச்செல்ல வழிகாட்டும் பலகைகளுடன் கூடிய வெளியேறும் சாலைகள் அமைக்கும் பணி 44கி.மீ. தூரத்திற்கு ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- அதைப்போன்றே, இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 0–200 மீட்டர் வரை உள்ள எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீண்டும் வலுவுள்ளதாகக் கட்டுவதற்கான ஒரு உட்கூறு ஆகும்.

- இத்திட்டத்தின்கீழ்ப் புதுக்கோட்டை மாவட்டத்தில் இன்றைய தேதியில் 665 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 437 வீடுகள் பணி முன்னேற்றத்தில் உள்ளன. இவை அனைத்தும் 31.5.2012க்கு முன்னர்க் கட்டி முடிக்கப்பட உள்ளன.

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

- கடலோரப் பகுதி வள மேலாண்மைத் திட்டக் கூறின்கீழ் 498 சமுதாய உட்கட்டமைப்புப் பணிகள் ரூ.1752.91 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

- 21 முன்னோடி ஊராட்சிகளில் காப்பீடு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தப் பயிற்றுநர் பயிற்சியும், சமுதாய மக்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளன. பல்வேறு காப்பீடு திட்டங்களில் 20,077 உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர்.

- 1570 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.2646 இலட்சம் வங்கிக் கடன் இணைப்பு பெற்றுத் தரப்பட்டது.

- 28 கூட்டு வள மையங்களுக்கு மின் அஞ்சல் மற்றும் இணையதள வசதி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

- 56 சிறு தொழில்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன. அதன் மொத்த திட்டத் தொகை ரூ. 290.02 இலட்சமாகும்.

- 3058 பயனாளிகள் சமுதாயப் பரிமாற்றப் பயணம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

- துயர் குறைப்பு நிதியாக 2120 பயனாளிகளுக்கு ரூ.81.86 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டது.

- 288 மீனவப் பெண்களுக்கு அறுவடைக்குப் பிந்தைய கால நடவடிக்கைகள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 140 மீனவப் பெண்கள் பட்டறிவுப் பயணம் மேற்கொண்டனர்.

- 405 மீனவர்கள் ரூ.85.30 இலட்சம் கடனிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர்.

நலிந்தோருக்கு வீடுகள் நல்லமைப்புடன் நகர்ப்புறங்கள்

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்

திரு. **ஆர். வைத்திலிங்கம்** அவர்கள்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

- ❖ மாற்றுத் திறனாளிகளுக்காகத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் அனைத்துத் திட்டங்களிலும் 3 விழுக்காடு ஒதுக்கீடு செய்ய ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- ❖ 1,376 குடியிருப்பு வீடுகளுக்கான பணிகள் முடிவுற்றன. 7,492 குடியிருப்பு வீடுகளுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ❖ ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் ஒசூர் ஆகிய இடங்களிலுள்ள 6,394 குடியிருப்புகளுக்கு இறுதி விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
- ❖ 1,587 வணிக மனைகளுக்குக் குறும விலையும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- ❖ 93 வணிக மனைகள் ரூ. 37.07 கோடிக்கும், 5,287 குடியிருப்புகள் ரூ.556.67 கோடிக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.
- ❖ தகுதியுள்ள ஒதுக்கீடுதாரர்களுக்கு 18,866 விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ❖ ரூ. 2160 கோடி மதிப்பீட்டில் திருமழிசையில் துணைக்கோள் நகரம் அமைக்க ஆணை. இங்கு 12000 வீடுகள் கட்டப்படும்.

❖ பாடி, திருவான்மியூர், நெசப்பாக்கம், மதுரவாயல், செவ்வாய்ப்பேட்டை, அம்பத்தூர், திருமுல்லைவாயில், முகப்பேர், கொடுங்கையூர், சேலம், திருநெல்வேலி, ஒசூர் ஆகிய முக்கிய ஊர்களில் ஆக்கிரமிப்பில் இருந்த ரூ.60.30 கோடி மதிப்பிலான 9.73 ஏக்கர் பரப்பளவு வாரிய நிலம் மீட்கப்பட்டது.

❖ நீண்ட காலத்திற்குப் பின் 93 தொழில்நுட்பப் பணியாளர்களுக்கும், 185 தொழில்நுட்பம் அல்லாத பணியாளர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

❖ சுனாமி ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்டோருக்குச் சென்னை நொச்சி நகரில் ரூ.36 கோடி செலவில் கட்டப்படும் 628 அடுக்குமாடிக் குடியிருப்புகள் முடிவுறும் நிலையில் உள்ளன. ஒக்கியம் துரைப்பாக்கத்தில் ரூ.106.11 கோடி செலவில் 2,048 அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைப்பதற்கான பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.

❖ சூலூர், ஈரோடு, ஒசூர், நாமக்கல், திருநெல்வேலி மற்றும் சென்னை ஆகிய இடங்களில் 1,821 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.71.43 கோடி செலவில் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன மற்றும் 2,882 அடுக்குமாடிக் குடியிருப்புகள் சென்னை, வந்தவாசி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கம், ஒரத்தநாடு மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் ரூ.145.11 கோடி செலவில் அமைக்க ஒப்புதல் பெறப்பட்டுள்ளன.

❖ கோவை சூலூரில் 108 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.3.16 கோடி செலவிலும், சேலம் எருமப்பாளையத்தில் 400 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.10.50 கோடி செலவிலும் கட்டப்பட்டுள்ளன.

❖ 2,567 அடுக்குமாடிக் குடியிருப்புகள் நகரக் குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 2,618 குடியிருப்புகள் / மனைகளுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

❖ வேளச்சேரி துரித இரயில் போக்குவரத்து நிலையத்தின் அருகில் 12 ஏக்கர் நிலப் பரப்பிலும் மாதவரத்தில் உள்ள மாதவரம் பேருந்து மற்றும் சரக்குந்து முனைய வளாகத்தில் 8 ஏக்கர் நிலப் பரப்பிலும் அமைக்கப்பட உள்ள பேருந்து முனைய அபிவிருத்தித் திட்டத்திற்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் ஆய்வுப் பணிகள் குறித்த நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. சுமார் 12 ஏக்கர் பரப்பளவில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் மஞ்சம்பாக்கத்தில் மிகப்பெரிய சரக்குந்து வாகன நிறுத்துமிடம் ஒன்று ஒரே நேரத்தில் சுமார் 400 சரக்குந்து வாகனங்கள் நிறுத்தும் வகையில் அமைக்கப்படவுள்ளது. இதனால் மாதவரத்திலுள்ள உள்வட்ட சாலையிலும், ஜி.எஸ்.டி. சாலையிலும் வாகனங்கள் நிறுத்துவதால் ஏற்படும் நெரிசல் தவிர்க்கப்படும்.

நகர் ஊரமைப்பு இயக்ககம்

❖ புராதன நகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், வேளாங்கண்ணி, விராலிமலை, திருமயம், திருவண்ணாமலை, திருவக்கரை மற்றும் தரங்கம்பாடி ஆகிய 6 புராதன நகரங்களுக்கு மானியமாக ரூ. 1.14 கோடி அளிக்கப்பட்டுள்ளது.

❖ போக்குவரத்து அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், குடியாத்தம், கோவில்பட்டி, இராஜபாளையம், பட்டுக்கோட்டை, மதுராந்தகம், பத்மநாபபுரம், ஆரணி மற்றும் நாமக்கல் ஆகிய நகராட்சிகளுக்கு ரூ.94.01 இலட்சம் மானியம் அளிக்கப்பட்டுள்ளது.

❖ பூங்கா அபிவிருத்தித் திட்டத்தின்கீழ்ச் சாத்தூர் மற்றும் திருவாரூரில் உள்ள இரு பூங்காக்களுக்கு ரூ.3.40 இலட்சம் மானியம் அளிக்கப்பட்டுள்ளது.

❖ உள்கட்டமைப்பு வசதி நிதித் திட்டத்தின்கீழ், இதற்கென நியமிக்கப்பட்டுள்ள வளர்ச்சிக் குழு ரூ.207.35 கோடி அளவில் 6 பெரிய அளவிலான உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

- ❖ செம்பரம்பாக்கம் முதல் பூந்தமல்லி புறவழிச்சாலை வரை குடிநீர்க் குழாய் அமைத்திட உள்கட்டமைப்பு வசதி நிதியிலிருந்து ரூ.40 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- ❖ கோயம்பேடு மொத்த விற்பனை வளாக மேம்பாட்டிற்கென ரூ.33.62 கோடி அளிக்கப்பட்டுள்ளது.
- ❖ காஞ்சிபுரம் உள்ளூர்த் திட்டப் பகுதியின் விரிவாக்கப் பகுதிக்கு, முழுமைத் திட்டம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- ❖ தனித்த உள்ளூர்த் திட்டக் குழுமங்களான கோவில்பட்டி, இராசபாளையம், கோபிச்செட்டிப்பாளையம் மற்றும் தருமபுரி ஆகியவை கூட்டு உள்ளூர்த் திட்டக் குழுமப் பகுதிகளாக உயர்த்தப்படவுள்ளன.
- ❖ நுண்ணிய அளவில் 40 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்தல் / மறு ஆய்வு செய்தல் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.
- ❖ இராஜபாளையம், கோபிச்செட்டிப்பாளையம், தர்மபுரி மற்றும் கோவில்பட்டி ஆகிய உள்ளூர்த் திட்டப்பகுதிகளின் சிறந்த திட்டமிட்ட வளர்ச்சிக்காகக் கூடுதலாகச் சில கிராமங்கள் இணைக்கப்பட்டு விரிவாக்கம் செய்ய ஆணைகள் வெளியிடப் பட்டுள்ளன.
- ❖ போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்த் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து திட்டமதிப்பீட்டில் 75 விழுக்காடு வழங்கப்படும். அதிகபட்ச மானியத்தொகையினை மாநகராட்சிகளுக்கு ரூ.50 இலட்சத்திலிருந்து ஒரு கோடி ரூபாயாகவும், நகராட்சிகளுக்கு ரூ.25 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சமாகவும் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

❖ பூங்கா மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒரு பூங்காவிற்கு ரூ.2.25 இலட்சம் என வழங்கப்படும் மானியத் தொகையை அதிகபட்சமாக ரூ.10 இலட்சமாக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

❖ புராதன நகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அதிகபட்ச மானியத் தொகையை நகரங்களின் தன்மையைப் பொறுத்து ரூ.50 இலட்சத்திலிருந்து ஒரு கோடி ரூபாயாக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி)

❖ வீட்டுக் கடன் பெற்றவர்களுக்கு உதவி செய்யும் நோக்குடனும், குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான வட்டி தள்ளுபடியை 50 சதவீதத்திலிருந்து 75 சதவீதமாகவும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வட்டி தள்ளுபடியை 25 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாகவும், உயர் வருவாய்ப் பிரிவினருக்கான வட்டித் தள்ளுபடியை 10 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாகவும் உயர்த்திப் புதிய வட்டித் தள்ளுபடி திட்டத்தை அறிமுகப்படுத்த இந்த அரசு ஆணை வெளியிட்டுள்ளது. அபராத வட்டி முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்படும். இத்திட்டம் 30.9.2012 வரை நடைமுறையில் இருக்கும். இதனால் வட்டி இழப்பிற்கான நிதியுதவியாக அரசுக்கு 390 கோடி ரூபாயும், அபராத வட்டித் தள்ளுபடியால் கூட்டுறவு அமைப்புகளுக்கு 545 கோடி ரூபாயும் இழப்பு ஏற்படும். இது 1.14 இலட்சம் பயனாளிகளுக்குப் பயனளிப்பதோடு, கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் 665 கோடி ரூபாய் நிலுவைக் கடன்களை வசூலிக்கவும் உதவும்.

சாதனைகள் நிறைந்த சமூக நலத்துறை

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்
திருமதி. **பா. வளர்மதி** அவர்கள்

❖ ஏழைப்பெண்களின் வாழ்வில் ஒளி ஏற்றவும் பெண்கல்வியை ஊக்குவிக்கவும் 5 திருமண நிதி உதவித் திட்டங்களின்கீழ், நிதி உதவியாக வழங்கப்படும் 25,000 ரூபாயுடன் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் (22காரட்) தங்க நாணயமும்,

பட்டப்படிப்பு/பட்டயப் படிப்பு முடித்த பெண்களுக்குத் திருமண நிதியுதவியாக வழங்கப்படும் 50,000 ரூபாயுடன் 4 கிராம் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் மட்டுமே மேற்கண்ட திருமண நிதியுதவித் திட்டங்களுக்குத் தேவையான தங்க நாணயம் கொள்முதல் செய்யப்படுகிறது.

❖ ஐந்து திருமண நிதியுதவித் திட்டங்களின்கீழ் 29.04.2012 வரை 10ஆம் வகுப்பு வரை படித்த 86,676 பயனாளிகளுக்கு தலா ரூ.25,000 மற்றும் 4 கிராம் தங்க நாணயமும், பட்டம்/பட்டயப் படிப்புப் படித்த 34,345 பயனாளிகளுக்கு தலா ரூ.50,000 மற்றும் 4 கிராம் தங்க நாணயமும் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை வாழ் முகாம் அகதிகள் 41 பேர் இத்திட்டத்தின்கீழ்ப் பயனடைந்துள்ளனர். இதுவரையில் 1,21,021 பயனாளிகளுக்கு ரூ.658.91 கோடி செலவிடப்பட்டுள்ளது. திருமண நிதியுதவி பழைய திட்டத்தின்கீழ் 61,821 பயனாளிகளுக்கு தலா ரூ.25,000 வீதம் வழங்கப்பட்டுள்ளது.

❖ திருநங்கைகள் பொருளாதார வளர்ச்சிக்காக வங்கிகள் மூலம் ரூ. 15 இலட்சம் வரை கடனுதவி வழங்கவும் அதில் 25 விழுக்காடு மானியத்துடன் சுய உதவிக் குழுக்கள் மூலம் சொந்தத் தொழில் துவங்கி வருமானம் உயர்த்திக்கொள்ளும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருநங்கைகளுக்கான தொழிற்கடன் வழங்கும் புதிய திட்டத்தை அறிவித்துள்ளார்கள்.

❖ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி திருநங்கைகளுக்கான 51 சுய உதவிக் குழுக்களின் பல்வேறு திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்க 2.20 கோடி ரூபாய்ச் செலவினத்தில் 25 விழுக்காடு மானியமாக ரூபாய் 55 இலட்சம் வங்கிக் கடனாக 1.65 கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது.

❖ இளம் பெண்களின் உயர்கல்வியை ஊக்குவிக்கும் வகையில் 7 அரசுச் சேவை இல்லங்கள் மற்றும் 27 அரசுக் குழந்தைகள் காப்பகங்களில் தங்கி +2 படித்து முடித்த மாணவிகளுக்குக் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. 2011 ஆம்

ஆண்டு முதல் இக்கல்வி உதவித்தொகையானது தொழிற்கல்விக்கு ஆண்டுக்கு ரூ. 50,000/–மும் மற்றும் பட்டம்/பட்டயப் படிப்பிற்கு ரூ. 30,000/–மும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 167 மாணவிகள் பயனடைந்துள்ளனர். இதற்காக ரூ.52.30 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

❖ பெண் குழந்தைகளின் வாழ்க்கையை வளமாக்கும் வண்ணம், "முதலமைச்சரின் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின்" திட்டம் 1–இன் கீழ் வழங்கப்படும் வைப்பீட்டுத் தொகை ரூ.22,200/– லிருந்து ரூ.50,000/– ஆகவும், திட்டம்–2 ன் கீழ் வழங்கப்படும் வைப்பீட்டுத் தொகை ரூ.15,200/– லிருந்து ரூ.25,000/– ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளன. இதுவரை 175 பெண் குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர். இத்திட்டம் முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு 30 பெண் குழந்தைகள் பயன் பெற்றுள்ளனர்.

❖ திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், பெரம்பலூர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களில், குழந்தைப் பாலின விகிதம் குறைவாகக் காணப்பட்டதையடுத்து, தொட்டில் குழந்தைத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு ரூ.33.20 இலட்சம் செலவில் மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனைகளில், வரவேற்பு மையங்கள் நவம்பர் 2011 மாதம் முதல் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் 25.07.2011 முதல் 31.03.2012 வரை 24 குழந்தைகள் (ஆண்–7, பெண்–17) தொட்டிலில் பெறப்பட்டுள்ளனர்.

❖ 26.82 இலட்சம் பயனாளிகளுக்குப் பயனளிக்கும் வகையில் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகையினை ரூ.500/–லிருந்து ரூ.1,000/– ஆக மே 2011 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

❖ பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டை மூலம் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, காட்டுமன்னார் கோயில் வட்டம் (கடலூர் மாவட்டம்), மணப்பாறை வட்டம் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) மற்றும் தோவாளை வட்டம் (கன்னியாகுமரி மாவட்டம்) ஆகிய மூன்று வட்டங்களில் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖ சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் பயன்கள், முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு 4,416 இலங்கைத் தமிழர்கள் 01.09.2011 முதல் மாதம் ரூ.1,000/– ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

❖ சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் மாதாந்திர ஓய்வூதியத்தைப் பயனாளிகளுக்கு விரைவாக ஒப்புதல் அளித்திட ஏதுவாக அலுவலர் குழு அமைத்து விண்ணப்பங்களின் மீது விரைந்து ஆய்வு நடத்தித் தொடர் நடவடிக்கை எடுக்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், ஓய்வூதியம் கோரும் விண்ணப்பங்கள் வாரந்தோறும், திங்கள்கிழமைகளில் கிராம நிருவாக அலுவலர்களால் கிராமங்களில் பெறப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 4,50,873 புதிய பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுப் பயனடைந்து வருகின்றனர்.

- ❖ இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதியத் தேசியத் திட்டத்தின்கீழ்ப் பயன்பெறும் பயனாளிகளின் வயது வரம்பை 65 லிருந்து 60 ஆகக் குறைத்துள்ளதால் இத் திட்டத்தின்கீழ்க் கூடுதலாக 5.36 இலட்சம் பயனாளிகள் பயன்பெறுவர். இதுவரை இத்திட்டத்தின் கீழ் 2 இலட்சம் பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர்.
- ❖ பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டையைப் பயன்படுத்தி வங்கிச் சேவையாளர் மூலம் பயனாளிகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் முன்னோடித் திட்டமானது மாநிலத்தில் பிற பகுதிகளுக்கும் மூன்றுக் கட்டங்களில் விரிவுபடுத்தப்படும் என ஆணையிடப் பட்டுள்ளது.
- ❖ 10,602 அங்கன்வாடிகளில் சிறு பழுதுகளையும் 6,202 மையங்களில் பெரிய பழுதுகளையும் ரூ.123.93 கோடி செலவில் பழுது நீக்கம் செய்திடவும், 20,558 அங்கன்வாடி மையங்களுக்கு மின்வசதி, ஒரு மின்விசிறி மற்றும் குழல் விளக்கு ரூ.12.34 கோடி செலவில் அமைத்திடவும், 20,244 அங்கன்வாடி மையங்களுக்கு ரூ.36.43 கோடி செலவில் குழந்தைகள் நேயக் கழிப்பறை கட்டித்தரவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- ❖ 15,313 அங்கன்வாடி மையங்களுக்கு அரசுக் கட்டடம் கட்டிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- ❖ 3,232 அங்கன்வாடி மையங்களுக்குச் சமையல் எரிவாயு அடுப்பு, எரிவாயு இணைப்பு மற்றும் அடுகலன் ரூ.211.80 இலட்சம் செலவில் வழங்கப்படவுள்ளன.
- ❖ 2,200 அங்கன்வாடி மையங்களுக்கு ரூ.26.40 இலட்சம் செலவில் உணவுப் பொருள்கள் பாதுகாப்புக் கலன்கள் வழங்கப்படவுள்ளன.
- ❖ ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் ரூ. 342.33 கோடி செலவில், 6 மாதம் முதல் 36 மாதங்கள் வரையுள்ள 15.60 இலட்சம் குழந்தைகள், 5.55 இலட்சம் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 3.71 இலட்சம் வளரிளம் பெண்கள் ஆகியோர் இணை உணவு பெறுகின்றனர்.
- ❖ சமூகப் பாதுகாப்புத்துறையின்கீழ் இயங்கும் 26 நிறுவனங்கள் ரூ.2.60 கோடி செலவில் 2,450 குழந்தைகள் பயன்பெறும் வகையில், மேம்படுத்தப் படவுள்ளன. மேலும், ரூ.6.50 இலட்சம் செலவில் குளிர்ப்பதனப் பெட்டிகள் வாங்கி அவற்றில் உயிர்காக்கும் மருந்துகள், உணவுப்பொருள்களான முட்டை/ அசைவ உணவுப் பொருள்கள், பால் மற்றும் காய்கறிகள் வைத்துப் பாதுகாக்கப்படவுள்ளன.
- ❖ 800 குழந்தைகள் பயன்பெறும் வகையில், சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் 4 குழந்தைகள் இல்லங்கள் மற்றும் செங்கல்பட்டு அரசினர் சிறப்பு இல்லம் ஆகியவற்றில் ரூ.2.10 கோடி செலவில் சுற்றுச்சுவர் அமைக்கப்படவுள்ளன.
- ❖ 1,200 குழந்தைகள்/ பெண்கள் பயன்பெறும் வகையில் சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் மகளிர்/ பெண்கள் பாதுகாப்பு இல்லங்களில் உள்ள

அனைத்துக் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு உருப்படம் எடுத்தல், கணினி, செல்லிடைப்பேசி பழுதுபார்த்தல் போன்ற நவீனத் தொழிற்பயிற்சிகள் ரூ.43.11 இலட்சம் செலவில் வழங்கப்படவுள்ளன.

❖ குழந்தைகள் பயன்பெறும் வகையில் அரசினர் கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் செங்கல்பட்டு அரசு சிறப்பு இல்லம் ஆகியவற்றில் ரூ.35.18 இலட்சம் செலவில் நெருங்கிய கண்காணிப்புக் காமிராக்கள் மற்றும் பாதுகாப்புச் சாதனங்கள் பொருத்தப்படவுள்ளன.

❖ 100 குழந்தைகள் பயன்பெறும் வகையில், செங்கல்பட்டு அரசினர் சிறப்பு இல்லத்தில் வசிக்கும் இளம்சிறார்களுக்காக ரூ.30.80 இலட்சம் செலவில் புதிய தங்குமிடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

❖ சமூகப் பாதுகாப்புத்துறையின்கீழ் இயங்கும் இராயபுரம், தஞ்சாவூர், பஞ்சப்பள்ளி, மல்லிப்புதூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய குழந்தைகள் இல்லங்களுக்குத் துணி துவைக்கும் இயந்திரங்கள் ரூ.17.50 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

❖ 450 குழந்தைகள் பயன்பெறும் வகையில் 9 வரவேற்பு இல்லங்களில் அனுமதிக்கப்படும் குழந்தைகளுக்கு வரவேற்புப் பைகள் ரூ.9 இலட்சம் செலவில் வழங்கப்பட்டு வருகின்றன.

❖ சென்னை, அரசினர் கூர்நோக்கு இல்லச் சிறார்களுக்கு மின்தடையின் போது தடையற்ற மின்சாரம் அளிக்க ஏதுவாகத் தானியங்கி டீசல் ஜெனரேட்டர் (100 KVA) வழங்க ரூ.13.10 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

❖ சமூகப் பாதுகாப்பு இயக்குநரகத்தை வலுப்படுத்த இணைப்புப் பிரிண்டருடன் கூடிய இரண்டு நகல் எடுக்கும் இயந்திரங்கள் ரூ.5 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

❖ சமூகப் பாதுகாப்புத் துறை நிர்வாகத்தின்கீழ் இயங்கும் இல்லங்களில் உள்ள இல்லவாசிகள் தங்கள் ஆற்றலை ஆக்கப்பூர்வமாக விளையாட்டு மற்றும் ஆளுமைத் திறன் பயிற்சிகளில் மேம்படுத்தும் பொருட்டு ஒரு நிறுவனத்திற்கு ரூ.5,000/–ம் வீதம் 26 நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ.1.30 இலட்சம் செலவில் விளையாட்டுப் பொருள்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

❖ சாலையோரச் சிறார்கள், வீட்டை விட்டு வெளியேறிய சிறார்கள், குப்பைப் பொறுக்கும் சிறார்கள் ஆகியோருக்குப் பாதுகாப்பு வழங்கும் பொருட்டுச் சென்னை மாநகரத்தில் கூடுதலாக வடசென்னைப் பகுதியில் ஒரு திறந்தவெளித் தங்கும் இடம் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் தொடங்கப்பட்டுள்ளது. மேற்படி இல்லத்தில் தங்கும் சிறார்களுக்கு உணவு, உடை, உறைவிடம், முறைசாராக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி போன்றவைகளுக்கு ரூ.6.27 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ சமூக நல இயக்குநர் மூலம் கருணை அடிப்படையில் 27 நபர்களும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடியாக 186 நபர்களும், பதவி உயர்வு மூலம் 14 நபர்களும் ஆக மொத்தம் 227 நபர்களுக்குப் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

❖ சமூகப் பாதுகாப்பு இயக்குநர் மூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடியாக 3 நபர்களும், வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் 9 நபர்களும் ஆக மொத்தம் 12 நபர்கள் பணி நியமனம் பெற்றுள்ளனர்.

❖ தற்போது தமிழ்நாட்டில் உள்ள 54,439 அங்கன்வாடி மையங்களில், 16,645 அங்கன்வாடி மையங்களில், 'புகையில்லாச் சமையலறைகள்' அமைக்கப் பட்டுள்ளன. எஞ்சியுள்ள 37,794 அங்கன்வாடி மையங்களில், 5,000 அங்கன்வாடி மையங்களில், இந்த ஆண்டில், அதாவது 2012–2013–ஆம் ஆண்டில், 3 கோடியே 20 இலட்சம் ரூபாய்ச் செலவில், எரிவாயு அடுப்பு, எரிவாயு இணைப்பு மற்றும் அழுத்தக் கலன், அதாவது, பிரஷர் குக்கர் ஆகிய உபகரணங்கள் வழங்கப்பட்டு, புகையில்லாச் சூழ்நிலையை உருவாக்கக்கூடிய நவீனமயமாக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

❖ அங்கன்வாடி மையங்களுக்கு அதிக அளவில் குழந்தைகள் ஊட்டச் சத்து உணவைப் பெறுவதற்காகவும், 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் பள்ளிசாரா முன்பருவக்கல்வி பெறுவதற்காகவும் வருகை புரிவதை ஊக்குவிக்கும் பொருட்டு, 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு இரண்டு வண்ண உடைகள் இந்த ஆண்டு முதல் வழங்கப்படும். இந்த முன்னோடித் திட்டம் முதற்கட்டமாக,

சென்னை, வேலூர், திருச்சிராப்பள்ளி, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள 2,01,032 குழந்தைகள் பயனடையும் வகையில், 4 கோடியே 30 இலட்சம் ரூபாய்ச் செலவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

❖ புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ்ப் பயனடையும் பள்ளிக் குழந்தைகளுக்காக வழங்கப்பட்டு வந்த இரண்டு இணைச் சீருடைகளை, நான்கு இணைச் சீருடைகளாக இந்த ஆண்டு முதல் உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளதைத் தொடர்ந்து, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள மகளிர் அதிக ஊதியம் பெற வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டும், மகளிர் தையற் கூட்டுறவுச் சங்கங்களில் 54,000 நவீனத் தையல் இயந்திரங்களை 54 கோடி ரூபாய்ச் செலவில் வாங்க வழிவகை செய்யப்படவுள்ளது. இந்தத் தொகை மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்படும். இந்தத் தையல் கூட்டுறவுச் சங்கங்கள் கடனுதவி பெறத்தக்க வகையில் 10 விழுக்காடு அளவிற்கு ஆதார நிதியை அரசு வழங்கும்.

மாற்றுத் திறனாளிகள் நலத்துறை

❖ கடுமையாகப் பாதிக்கப்பட்ட / மன வளர்ச்சி குன்றிய / தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திரப் பராமரிப்பு உதவித் தொகை ரூ.500/–லிருந்து ரூ.1,000/– ஆக உயர்த்தப்பட்டு 76,407 நபர்கள் ரூ.92.28 கோடி செலவில் பயன்பெற்று வருகிறார்கள். மாவட்டங்களிலிருந்து வந்த கோரிக்கையினை ஏற்று இத்திட்டத்தில் கூடுதலாக 13,894 மனவளர்ச்சி குன்றிய நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.4.38 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

❖ பார்வையற்ற/கை, கால் பாதிக்கப்பட்ட/செவித் திறன் குன்றிய மாற்றுத் திறனாளிகளைத் திருமணம் செய்து கொள்ளும் சாதாரண நபர்களுக்கு திருமண உதவித் தொகை ரூ.25,000/– மற்றும் திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் தங்கம் வழங்கப்படுகிறது.

❖ திருமணம் செய்து கொள்ளும் மாற்றுத் திறனாளிகள் பட்டயம் அல்லது பட்டப்படிப்புப் படித்திருந்தால், திருமண உதவித் தொகை ரூ.50,000/–மும், திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் தங்கமும் வழங்கப்படுகின்றது.

❖ திருமண உதவித் திட்டத்தின்கீழ்ப் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை உச்ச வரம்பு 490 என்று இருந்ததை முற்றிலுமாக நீக்கி, தகுதியுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் திருமண உதவித் தொகை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

❖ மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ் 2002 – 2003 முதல் 2009–2010 ஆம் ஆண்டு வரை நிலுவையில் இருந்த 3240 விண்ணப்பங்களைத் தீர்வு செய்ய ரூ.6.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

- 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் மாநில / மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் செவித் திறன் குறைவுடைய மாணவ, மாணவியருக்கு ரொக்கப் பரிசு மற்றும் உயர்கல்வி பயில ரூ.35.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.
- அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் மாவட்டத்திலுள்ள தனியார் தொழில் நிறுவனங்களின் தேவைக்கேற்பத் தங்கும் வசதியுடன் கூடிய குறுகிய காலத் தொழிற்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் 32 மாவட்டங்களிலும் ரூ.74.88 இலட்சம் செலவில் 2,400 மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வண்ணம் வழங்கப்பட்டு வருகின்றன.
- பரனூர், யா. புதுப்பட்டி மற்றும் புதுக்கோட்டை ஆகிய மூன்று இடங்களில் இயங்கிவரும் அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள இல்லவாசிகளுக்குப் புதிய கட்டடங்கள்

மற்றும் நவீனச் சமையலறைகள் ரூ.5.21 கோடி செலவில் கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

❖ இரண்டு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் 400 பேருக்கு ரூ.2 கோடி செலவில் வழங்கப்படுகின்றன.

❖ செவித் திறன் குறையுடைய 1,000 குழந்தைகளுக்கு ஒரு கோடி ரூபாய்ச் செலவில் காதுக்குப் பின்புறம் அணியும் காதொலிக் கருவிகள் வழங்கப்படுகின்றன.

❖ 6 வயதிற்குட்பட்ட பார்வைத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கான ஆரம்பநிலைப் பயிற்சி மையங்கள் 20 மாவட்டங்களில் ரூ.2 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ளன.

❖ 1,000 மனவளர்ச்சி குன்றிய ஆண்கள் மற்றும் பெண்கள் பயனடையும் வகையில் 20 சிறப்பு இல்லங்கள் ரூ.2 கோடி செலவில் ஏற்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

❖ மாற்றுத் திறனாளிகளுக்கு 3 சதவீத இட ஒதுக்கீட்டின்கீழ், அவர்களுக்கு அரசு வேலைவாய்ப்புகள் வழங்குவதைக் கண்காணித்திட தலைமைச் செயலாளர் தலைமையில் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

❖ கைவிடப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான ஓய்வூதியம் வழங்க நிர்ணயிக்கப் பட்டிருந்த குறைந்தபட்ச வயது வரம்பு 45 லிருந்து 18 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

சிகரம் தொடும் உயர்கல்வி

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்
திரு. **பி. பழனியப்பன்** அவர்கள்

- தமிழ்நாட்டில் உயர்கல்வி அதிகம் சென்றடையாத பகுதிகளில் 11 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 2011–2012 கல்வியாண்டு முதல் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.
- அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களை, சென்னை அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கும் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

- தமிழக அரசு நிர்ணயித்த குறைந்தபட்சத் தகுதி மதிப்பெண் முறையைப் பின்பற்றி 2011–2012–ஆம் ஆண்டுக்கும் ஒற்றைச் சாளர முறையில் பொறியியல் கல்லூரி மாணவர் சேர்க்கை நடைபெற்றது.
- அரசு/அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல்/பொறியியல் மற்றும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கப்பட்டுள்ளது.

❖ இளநிலைப் பொறியியல்/தொழில்நுட்பவியல் மற்றும் முதுநிலைத் தொழில் நிருவாகம்/கணினி செயல்முறை போன்ற படிப்புகளுக்குச் சென்ற ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை அதிகரிக்காமல் அதே கட்டணம் இந்த ஆண்டும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

❖ கல்லூரிக் கல்வி இயக்ககம் மற்றும் தொழில்நுட்பக்கல்வி இயக்ககம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டின்கீழ் வரும் ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கும் பணியிட மாறுதலில் ஒளிவுமறைவற்ற கலந்தாய்வு முறை 2011–2012–ஆம் கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

❖ சுயநிதித் தொழில் கல்லூரிகளின் மீதான புகார்கள் குறித்து விசாரணை மேற்கொள்ள அமைக்கப்பட்ட குழுவானது, தற்போது தலைசிறந்த கல்வியாளர்களைக் கொண்டு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

❖ நீண்ட காலம் நிலுவையில் இருந்த அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பணியாற்றும் உதவிப் பேராசிரியர்களுக்கிடையே பணிமூப்பு வரிசைப் பட்டியல் உளவியல் நெறிமுறையில் (Heuristic Algorithm) தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

❖ தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம் மேலசொக்கநாதபுரம் கிராமத்தில் ஒரு புதிய அரசு பொறியியல் கல்லூரி 2012–2013–ஆம் கல்வியாண்டு முதல் ஏற்படுத்தப்படவுள்ளது. இதற்காக 93.64 கோடி ரூபாய் நிருவாக ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

❖ திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், சேதுராப்பட்டி கிராமத்தில் ஒரு புதிய இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனம் ஏற்படுத்த நிலம் கண்டறியப்பட்டுக் கருத்துரு துரித நடவடிக்கையில் உள்ளது.

❖ 2011–2012–ஆம் கல்வியாண்டு முதல் முகாம் வாழ், இலங்கைத் தமிழர்களின் குழந்தைகள் பி.இ/பி.டெக். இரண்டாமாண்டு நேரடிச் சேர்க்கை மற்றும் எம்.பி.ஏ./எம்.சி.ஏ./ எம்.இ/ எம்.டெக் போன்ற முதுகலைப் பாடப்பிரிவுகளில் பொதுக் கலந்தாய்வில் கலந்து கொள்ள முதன்முறையாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

❖ முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. 2011–12ஆம் ஆண்டில் 1,57,176 மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ்ப் பயன்பெற்றுள்ளனர். இதற்காக ரூ. 299.28 கோடி செலவிடப்பட்டுள்ளது. 2012–13 ஆம் நிதியாண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.477.97 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் முகாம்களில் வசிக்கும் இலங்கை அகதிகளின் குடும்பங்களைச் சேர்ந்த தகுதியான மாணவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

❖ பி.இ./பி.டெக் பயிலும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த 92 மாணவர்களுக்குத் தலா ரூ.25,000/– வீதம் ரூ.23 இலட்சம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

❖ அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இரண்டாம் சுழற்சி முறை கௌரவ விரிவுரையாளர்கள் மற்றும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் சிறப்புப்

பயிலகங்களில் பகுதிநேரம் / சுழற்சி முறை / பணிநேர முறை மற்றும் மாலைநேர வகுப்புகள் நடத்தும் அனைத்துப் பணியாளர்களுக்கும் ஊதியம் ரூ.6,000/–லிருந்து ரூ.10,000/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

❖ 10 பல்கலைக்கழகங்களில் காணொலிக் காட்சி வசதியுடன் உயர்தொழில்நுட்பத் தரமேம்பாடு வகுப்பறைகள் ஏற்படுத்த ரூ.2 கோடியும், அயல்மொழிகளான ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மனி, சீனம் ஆகியவற்றை மாணவர்களுக்குப் பயிற்றுவிக்க அயல்மொழி அறிவாய்ந்த ஆய்வகங்கள் ஏற்படுத்த ரூ.1.50 கோடியும், தொழில் முனைவோர் மற்றும் திறன்மேம்பாட்டு மையங்களை ஏற்படுத்த ரூ.2 கோடியும், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு, வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலிருந்து புகழ்பெற்ற பேராசிரியர்களை வரவழைத்துப் பயிற்சி அளிப்பதற்கு ரூ. 1 கோடியும், பாடத்திட்ட மேம்பாட்டுப்பிரிவு உருவாக்க ரூ.10 கோடியும் அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

❖ 34 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிய பாடப்பிரிவுகள் இக்கல்வியாண்டு முதல் தொடங்கப்படவுள்ளன. இதன் தொடர்ச்சியாக இவ்வகுப்புகளைக் கையாள 145 உதவிப் பேராசிரியர் பணியிடங்களை அடுத்த மூன்றாண்டுகளில் நிரப்பிட ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

❖ 23 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு ரூ.3.19 கோடி செலவில் கணினி மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

❖ 5 அரசுப் பொறியியல் கல்லூரிகளில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் 20 கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படவுள்ளன.

❖ 8 அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் 20 கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படவுள்ளன.

❖ அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் 1,025 உதவிப் பேராசிரியர் காலிப்பணியிடங்கள், அரசுப் பொறியியல் கல்லூரிகளில் உள்ள 154 பேராசிரியர் காலிப்பணியிடங்கள், மற்றும் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் 139 விரிவுரையாளர் காலிப்பணியிடங்கள் ஆகியவை நிரப்பப்படவுள்ளன.

❖ தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் ஆவணங்களைப் பாதுகாப்பதற்கு ரூ.40 இலட்சம் செலவில் அதற்குரிய சாதனங்கள் வாங்க அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

❖ ரூ.15 இலட்சம் செலவில் சென்னை பி.எம். பிர்லா கோளரங்கத்தில் கணினிமயமாக்கப்பட்ட ஆறுபக்க ஒளிப்படக் கருவிகள் அமைத்து நவீனப்படுத்தப்பட உள்ளன.

❖ 2012–13–ம் கல்வியாண்டு முதல் 11 புதிய பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்படவுள்ளன. மேலும் 2 பொறியியல் கல்லூரிகள் மற்றும் 7 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

❖ 2012–13–ஆம் ஆண்டில் 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 7 அரசு ஆசிரியர் கல்வியியல் கல்லூரிகள் மற்றும் 24 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் என மொத்தம் 93 அரசு கல்லூரிகளில் ரூ. 100 கோடி மதிப்பீட்டில் நவீன உள்கட்டமைப்பு வசதிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு அறைகலன்கள், மின்னணுப் பலகைகள், மொழி ஆய்வகங்கள், கணினிமயமாக்கப்பட்ட நூலகங்கள், அடிப்படை வசதிகள் போன்றவை ஏற்படுத்தப்படவுள்ளன.

வரி நிருவாகத்தை மேம்படுத்த வணிகவரித்துறை கணினி மயம்

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள், மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்
திரு. **சி.வி.சண்முகம்** அவர்கள்

வணிகவரி மற்றும் பதிவுத்துறை

❖ ஆரம்பம் முதல் முடிவு வரை முழுமையான கணினிமயமாக்கும் திட்டத்தினை வணிகவரித்துறையில் செயல்படுத்துவதற்கென அரசு ரூ.230.96 கோடியினை ஒதுக்கீடு செய்துள்ளது. வணிகர்கள், துறையுடனான தொடர்பினை மேம்படுத்தும் வகையில் இத்திட்டம் வரி நிருவாகத்திறனை மேம்படுத்தும்.

❖ சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு உதவிடும் பொருட்டும், வேளாண் தொழில்களுக்கு ஊக்கம் அளித்திடும் வகையில், வேளாண் இடுபொருள்கள் மற்றும் உபகரணங்கள், இரசாயன உரங்கள், ஜிப்சம், அனைத்து வகையான பூச்சிக் கொல்லிகள், களைத் தடுப்பான்கள், தாவர வளர்ச்சி சீராக்கிகள், திவலைப் பீய்ச்சிகள், தெளிப்பான்கள், சொட்டு நீர்ப்பாசனக் கருவிகள் ஆகியவற்றின் மீதான மதிப்புக் கூட்டுவரி 12.7.2011 முதல் முற்றிலும் அரசால் விலக்கிக் கொள்ளப்பட்டது. இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.87 கோடிக்கு மேல் வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது.

❖ வீட்டு உபயோகத்திற்குப் பயன்படுத்தப்படும் எல்.பி.ஜி. எனப்படும் சமையல் எரிவாயுவின் மீதான விலையினை மத்திய அரசு 2011ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் உயர்த்தியபோது, பொது மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு, வீட்டு உபயோகத்திற்குப் பயன்படுத்தப்படும் சமையல் எரிவாயுவின் மீதான மதிப்புக் கூட்டுவரி முற்றிலுமாக விலக்கிக் கொள்ளப்பட்டது. இதன்மூலம் மாநிலத்தில்

1.36 கோடி குடும்பங்கள் பயனடையும் வகையில் ஒரு சமையல் எரிவாயு மீதான விலையில் ரூ.14.73 குறைக்கப்பட்டது. இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.120 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது.

❖ 15 இடங்களில் 34 வணிகவரி அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு ரூ.20.15 கோடி ஒப்புதல் அளித்துள்ளது.

❖ பொதுமக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு 1.4.2012 முதல் கோதுமை, ஓட்ஸ், அனைத்து விதமான இன்சுலின், கையினால் தயாரிக்கப்படும் பூட்டுகள், பாலூட்டும் புட்டிகள், பாலூட்டும் ரப்பர் மற்றும் தலைக்கவசம் ஆகிய பொருள்களின் மீதான மதிப்புக் கூட்டுவரியை அரசு முற்றிலுமாக விலக்கிக் கொண்டது.

❖ மின் சக்தியால் இயங்கக்கூடிய இரு சக்கர வாகனங்கள், தீக்குச்சி தயாரிப்பதற்கான மரக் குச்சிகள் மற்றும் மரப்பட்டைகள், சானிடரி நேப்கின்கள் மற்றும் டயாபர்கள், காம்பேக்ட் ப்ளோரசண்ட் விளக்குகள் மற்றும் காம்பேக்ட் ப்ளோரசண்ட் குழல் விளக்குகள் ஆகிய பொருள்கள் மீதான மதிப்புக் கூட்டு வரி 14.5 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

❖ வணிகவரித்துறையில் பணியில் இருக்கும்போது இறந்த அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்கள் 15 பேருக்குக் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

பதிவுத்துறை

❖ 1.11.2011 முதல் 31.1.2012 வரையிலான மூன்றுமாத காலங்களுக்குச் "சமாதானத் திட்டம்" நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டம் வழிகாட்டி மதிப்பின்படி முத்திரைத் தீர்வை செலுத்தாமல் திரும்பப் பெறாத ஆவணங்களைத் திரும்பப் பெறப் பொது மக்களுக்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது. இத்திட்டத்தின்கீழ் 23,804 ஆவணங்கள் பதிவுதாரர்களுக்குத் திரும்ப வழங்கப்பட்டு, இதன் மூலம் அரசுக்கு வரவேண்டிய முடங்கிக் கிடந்த வருவாய் ரூ.140.83 கோடி ஈட்டப்பட்டது.

❖ மாநிலத்திலுள்ள அனைத்துச் சார்பதிவகங்களுக்கும் ஐந்து ஆண்டுகளில் சொந்தமாக அரசுக் கட்டடம் கட்டப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி 2011–2012ஆம் ஆண்டில் 52 சார்பதிவகங்களுக்கு ரூ.26 கோடி மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

❖ 1.04.2012 முதல் முத்திரைத் தீர்வையை 6 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாகக் குறைத்து அரசு ஆணையிட்டுள்ளது.

❖ பணியில் இருக்கும்போது இறந்த அரசு ஊழியரின் 17 வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

சட்டத்துறை

- ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெற்ற மாதிரி நீதிமன்ற போட்டிகளில் கலந்துகொள்ளத் தேர்வான டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மற்றும் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப்பள்ளியினைச் சார்ந்த 12 மாணவர்களுக்காக, உதவித் தொகை ரூ.9 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- அமெரிக்க ஐக்கிய நாட்டின் வாஷிங்டனில் நடைபெற்ற பிலிப் சி. ஜெசப் மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் கலந்து கொள்ளத் தேர்வான தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப்பள்ளியினைச் சார்ந்த 5 மாணவர்களுக்கு ஒரு சிறப்பு நேர்வாக, உதவித் தொகையாக ரூ.5 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- சட்டக் கல்வி பயிலும் முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கான கல்விக் கட்டணத்தைத் திருப்பி வழங்கிட அரசால் ஒரு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், நாவலூர் குட்டப்பட்டு கிராமத்தில் தேசியச் சட்டப் பள்ளி நிறுவுவதற்கு, தமிழ்நாடு தேசியச் சட்டப் பள்ளி சட்டம், (தமிழ்நாடு சட்டம் 9/2012) இயற்றப்பட்டுள்ளது. இத்தேசியச் சட்டப் பள்ளி நிறுவுவதற்கான பணிகளை ஒருங்கிணைத்து மேற்கொள்ளச் சிறப்பு அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- தமிழகத்தில் தனியார் சுயநிதிச் சட்டக் கல்லூரிகள் தொடங்குவதற்கான தடையில்லாச் சான்றிதழ் பெறுதலுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதில் விண்ணப்பப் படிவம் மற்றும் விண்ணப்பக் கட்டணம் குறித்தும் விரித்துரைக்கப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாட்டில் அரசு சட்டக் கல்லூரிகளில், நீண்ட நாட்களாகக் காலியாக உள்ள 45 விரிவுரையாளர் பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சிறைச்சாலைகள்

❖ 9 புதிய உளவியல் நிபுணர் பணியிடங்கள் ஆண்டு ஒன்றிற்கு ரூ.45.08 இலட்சம் கூடுதல் செலவினத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

❖ சிறைவாசிகளின் மறுவாழ்வு குறித்து ஆராய்ச்சி செய்வதற்கெனச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் குழு ஒன்று அமைத்திட ஒருமுறை மட்டும் ஒரு கோடி ரூபாய் நிதி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ சிறைவாசிகளின் வசதிக்காகச் சிறைகளில் ரூ.1.58 கோடி செலவில் தொலைபேசிச் சேவை மையங்கள் நிறுவிட ஆணையிடப்பட்டுள்ளது.

❖ சிறைத் தொழில் கூடங்களில் பணியாற்றும் சிறைவாசிகளுக்கான தினக்கூலியை அவர்களின் வேலைசெய்யும் திறனுக்கேற்ப உயர்த்தி வழங்குவதற்கு ஏதுவாக ரூ. 38.88 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

❖ சிறைத்துறைப் பணியாளர்களுக்கு இடர்ப்படியைக் காவல்துறைப் பணியாளர்களுக்கு இணையாக உயர்த்தி வழங்கும் பொருட்டு ரூ.96.40 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

❖ சென்னைப் புழல் மத்திய சிறை வளாகத்தில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தும் பொருட்டு ரூ. 1.38 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ புழல் மத்திய சிறை–1 மற்றும் பாளையங்கோட்டை மத்திய சிறை, ஒவ்வொன்றிற்கும் தலா ஒரு பேக்கேஜ் ஸ்கேனர் கருவி வீதம் இரண்டு கருவிகள் கொள்முதல் செய்ய ரூ. 40.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ நீதிமன்றங்களுக்குக் கூடுதலாக 28 எண்ணிக்கையிலான வீடியோ கான்பரன்சிங் கருவிகள் கொள்முதல் செய்ய ரூ.3.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ சிறைத்துறைத் தலைமை அலுவலகத்திற்கெனப் புதிய கட்டடம் கட்டுவதற்காக ரூ.8.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- சிறைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள 'ஆ' வகுப்பு தண்டனைச் சிறைவாசிகளுக்கான சீருடை அரைக்கால் சட்டையிலிருந்து முழுக்கால் சட்டையாக மாற்றம் செய்து வழங்குவதற்கு ரூபாய் 5.85 இலட்சம் செலவில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- மதுரை, சேலம், திருச்சி மற்றும் கடலூரில் உள்ள மத்திய சிறைப் பணியாளர்களுக்கு 100 குடியிருப்புகள், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தால் கட்டுவதற்கு ரூபாய் 765.51 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள, மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரியில் சேர்ந்து படிக்கும் தமிழகச் சிறைகளில் உள்ள சிறைவாசிகளுக்கு கல்வி கட்டணத் தொகையிலிருந்து முழு விலக்கு அளிக்கப் பட்டுள்ளது.

நீதிமன்றங்கள்

- இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானையில் நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிக்கான குடியிருப்பு ரூ.187.43 இலட்சம் செலவில் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.
- கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிக்கான குடியிருப்பு ரூ.285.49 இலட்சம் செலவில் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.
- சேலம் மாவட்டம், மேட்டூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் ரூ.496.72 இலட்சம் செலவில் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.
- சென்னை எழும்பூரிலுள்ள நீதிமன்ற வளாகத்தில், 7 நீதிமன்றங்களுக்குக் கூடுதல் கட்டடங்கள் ரூ.868.19 இலட்சம் செலவில் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.
- சென்னை உயர்நீதிமன்ற இணைப்புக் கட்டடத்தை அடுத்த, பணியாளர்கள் கழிவறை அமைந்த கட்டடத்தின் இரண்டாவது தளத்தில் ரூ.18 இலட்சம் செலவில் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.
- மதுரை, கிருஷ்ணகிரி, தேவக்கோட்டை, திண்டுக்கல், புதுக்கோட்டை, பரமத்தி மற்றும் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் ஆகிய இடங்களில் உள்ள நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகளுக்குச் சுற்றுச் சுவர் ரூ.48.74 இலட்சம் செலவில் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.
- சார்நிலை நீதிமன்றங்களுக்கு ஒளி நகல் கருவிகள் மற்றும் அச்சுப் பொறிகள் ஆகியன ரூ.214.16 இலட்சம் செலவில் வாங்குவதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- கடலூர் மாவட்ட முதன்மைச் சார்பு நீதிமன்றம் மற்றும் முதன்மை உரிமையியல் நீதிமன்றம், தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டியிலுள்ள மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், நாகப்பட்டினத்திலுள்ள மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் மற்றும் சென்னையிலுள்ள சிறுவழக்குகள் நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்களுக்கு அறைகலன்கள் ரூ.24.32 இலட்சம் செலவில் வாங்குவதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- மதுரை மாவட்டம், பேரையூரில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.
- தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரில் உள்ள கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தினை, திருச்செந்தூரில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குற்றவியல் நடுவர் நீதிமன்றம் என இரண்டு நீதிமன்றங்களாக மாற்றியமைப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.
- புதுக்கோட்டையில் புதியதாகக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.
- நீலகிரி மாவட்டம், பந்தலூரில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.
- பூதப்பாண்டியிலுள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை மாற்றியமைப்பதன் மூலம் பூதப்பாண்டியில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.
- சென்னைப் பெருநகரக் காவல் ஆணையரக மத்தியக் குற்றப் பிரிவு வழக்குகள் (ஏமாற்றுதல் குறித்த வழக்குகள்) மற்றும் சென்னைப் பெருநகரக் குற்றப் புலனாய்வுத் துறை வழக்குகளை விசாரிப்பதற்காக முதுநிலை உரிமையியல் நீதிபதி நிலையில் சென்னையில் ஒரு தனி நீதிமன்றம் அமைப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.
- செய்யாறில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.
- உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்குக் கூடுதலாக 32 நேர்முக உதவியாளர் பணியிடங்கள் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளைக்குக் கூடுதலாக 25 உதவிப் பிரிவு அலுவலர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டன.
- சென்னை உயர்நீதிமன்றத்தின் 150ஆவது ஆண்டு விழா நிகழ்ச்சிக்கான செலவினங்களை மேற்கொள்வதற்காக ரூ.40 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.
- சென்னை உயர்நீதிமன்றத்தின் 150ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு உயர்நீதிமன்றத்தில் பணியாற்றும் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு

ஓர் ஊதிய உயர்வுக்கு நிகரான பணவெகுமதி (ஒரு முறை மட்டும்) வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

- உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓட்டுநர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டுவரும் சிறப்பு ஈட்டுப்படியை ரூ.190/– லிருந்து ரூ.380/– ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையின் மாண்புமிகு நீதிபதிகளின் பயன்பாட்டிற்காகப் பழைய கைபேசிகளுக்குப் பதிலாக ரூ.9,43,400/– செலவில், 53 புதிய நோக்கியா கைபேசிகள் வாங்குவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை அமைவதற்குக் கையகப்படுத்திய நிலங்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகையாக ரூ.8.46 கோடி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.
- சென்னை உயர்நீதிமன்றத்தில் சுத்திகரிக்கப்பட்ட குளிர்ந்த குடிநீர் வழங்குவதற்காக ரூ.60,750/–செலவில் இரண்டு குளிரூட்டிகள் வாங்குவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.
- மாநிலத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்களுக்குச் சட்டப் புத்தகங்கள் மற்றும் சட்ட இதழ்கள் வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்ட நிலையான ஒப்பளிப்புத் தொகையை ரூ.64 இலட்சமாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.
- சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை நூலகத்திற்குச் சட்டப் புத்தகங்கள், சட்ட இதழ்கள் ஆகியவை வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்ட நிலையான ஒப்பளிப்புத் தொகையை ரூ.12.50 இலட்சமாக உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.
- சென்னை உயர்நீதிமன்றத்தின் முதன்மை ஆயத்தையும், மதுரைக் கிளையையும், காணொலிக் காட்சி மூலம் இணைப்பதற்கு ரூ.5,73,597/– ஒப்பளிப்புச் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை

- அரசுப்பணி புரியும் தாய்மார்கள் தங்களது பச்சிளம் குழந்தைகளைப் பாதுகாத்திட அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மூன்று மாதப் பேறுகால விடுப்பு ஆறு மாதங்களாக நீட்டிக்கப்பட்டது.
- பவானி சாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் குடியிருப்புகளைப் பழுது நீக்கும் மராமத்துப் பணிகளுக்காக ரூ.1.58 கோடி அளிக்கப்பட்டது.
- அண்ணா மேலாண்மை நிலைய ‘அ’ மற்றும் ‘ஆ’ பிரிவு அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி வகுப்புகளில் வசதிகளை

மேம்படுத்துவதற்கும், தங்கும் விடுதியைப் பழுது நீக்கி மேம்பட்ட வசதிகளைச் செய்வதற்கும் ரூ.25 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

- சென்னையிலுள்ள அரசு அகில இந்தியக் குடிமைப் பணிகள் தேர்வுப் பயிற்சி மையத்தில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர உணவு மானியம் 800 ரூபாயிலிருந்து 1,200 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது.
- திருநெல்வேலி மற்றும் விருதுநகர் மாவட்டங்களை உள்ளடக்கிய ஒரு ஒழுங்கு நடவடிக்கை ஆணையரகம் திருநெல்வேலியைத் தலைமையிடமாகக் கொண்டும் கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களை உள்ளடக்கிய ஒரு ஒழுங்கு நடவடிக்கை ஆணையரகம் நாகர்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்டும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.
- பகவான் வைகுண்ட சுவாமி அவர்களைப் பெருமைப்படுத்தும் விதமாகத் தமிழக அரசு அவரது பிறந்தநாளை வரையறுக்கப்பட்ட விடுமுறை நாளில் ஒன்றாக அறிவித்துள்ளது.

பணி நியமனங்கள்

- சென்னை, அண்ணா மேலாண்மை நிலையத்தில் 4 பணியிடங்களும், தலைமைச் செயலகத்தில் உதவிப்பிரிவு அலுவலர் முதல் தட்டச்சர் வரை 90 பணியிடங்களும் நிரப்பப்பட்டன.
- பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையில் 12 அலுவலக உதவியாளர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையில் 8 இளநிலை உதவியாளர்கள், ஒரு தட்டச்சர் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.
- பவானி சாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் ஒரு விடுதிக் காப்பாளர் மற்றும் கண்காணிப்பாளர் பணியிடம் ஏற்படுத்தப்பட்டு நிரப்பப்பட்டுள்ளது. தலைமைச் செயலகத்தில் இரண்டு முதுநிலை முதன்மைத் தனிச் செயலர் பணியிடங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- தலைமைச் செயலகத்திலுள்ள துறைகளில் துணைச் செயலாளர் முதல் தபேதார் வரை 509 பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- சென்னை, அகில இந்தியக் குடிமைப்பணிகள் தேர்வுப் பயிற்சி மையத்தில் ஒரு துப்புரவுப் பணியாளர் காலிப்பணியிடம் கருணை அடிப்படையில் நிரப்பப்பட்டுள்ளது.

இரண்டாம் பசுமைப் புரட்சி

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்
திரு. **செ. தாமோதரன்** அவர்கள்

- சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு மேட்டூர் அணையில் முன்கூட்டியே ஜூன் 6ஆம் தேதி தண்ணீர் திறந்துவிடப்பட்டதால் காவிரி டெல்டா விவசாயிகள் அதிகமான விளைச்சல் பெற்றுள்ளனர்.
- இந்தியா முழுவதும் உரத்தட்டுப்பாடு இருந்த நிலையில் தமிழகத்தில் உரத்தட்டுப்பாடு திறமையாகச் சமாளிக்கப்பட்டது.
- இந்தியாவிலேயே முதன்முறையாக வேளாண் இடுபொருட்கள் மீதான 4 சதவீத மதிப்புக் கூட்டுவரி ரத்து செய்யப்பட்டது.
- இரண்டாம் பசுமைப் புரட்சியை உருவாக்க கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- 2011–12ஆம் ஆண்டில் மண்பரிசோதனை செய்து அதன் முடிவை உழவர் கையேட்டில் பதிவு செய்து வழங்க ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- வேளாண் விரிவாக்க அலுவலர்கள், விஞ்ஞானிகள் மற்றும் விவசாயப் பெருமக்கள் ஓரிடத்தில் கூடி கருத்துகளைப் பரிமாறிக் கொள்ள முதல் கட்டமாக 10 மாவட்டங்களில் வட்டாரத்திற்கு ஒரு உழவர் மையம் உருவாக்க சுமார் ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- தமிழ்ப் புத்தாண்டு தினமான 13.4.2012 முதல் 17.5.2012 வரை 385 வட்டாரங்களின் 16,564 வருவாய்க் கிராமங்களில் ரூ.34.59 கோடி ஒதுக்கீட்டில் உழவர் பெரு விழா நடைபெற்றுள்ளது.
- வேளாண் விரிவாக்கப் பணிகளை வலுப்படுத்த 1,300 வேளாண் விரிவாக்க அலுவலர்கள் நியமனம்.

- வேளாண் தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்குச் சென்றடைய 8,109 உழவர் நண்பர்கள் நியமனம்.
- நாட்டிலேயே முதன்முறையாக திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் தொகுதி, நவலூர் குட்டப்பட்டில் ரூ.40 கோடியில் மகளிருக்கான தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தொடங்கப்பட்டது.
- நுண்ணீர்ப் பாசனம் அமைக்க சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம், பிற விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியம் வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் ரூ.19.18 கோடி மானியத்தில் 7,418 எக்டேர் பரப்பில் 6,044 விவசாயிகள் பயனடையும் வகையில் நுண்ணீர்ப்பாசன அமைப்புகள் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- நதிப்பள்ளத்தாக்கு நீர்பிடிப்பு பகுதிகள், மலைப்பகுதிகள், மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகள் மற்றும் பழங்குடியினர் பகுதிகளுக்கு மண் அரிப்பினைத் தடுக்க ரூ.26.86 கோடி செலவில் 3,099 கட்டுமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- பண்ணை மேம்பாட்டுப் பணிகள் ரூ.68.87 கோடி செலவில் 26,412 எக்டரில் மேற்கொள்ளப்பட்டது.

- திருந்திய நெல் சாகுபடித் திட்டம் தீவிரப்படுத்தப்பட்டு இதுவரை 1,880 கிராமங்களில் திருந்திய நெல் சாகுபடி முறை செயல்விளக்கங்கள் மூலம் 10.011 இலட்சம் எக்டரில் மேற்கொள்ளப்பட்டது.
- பயறுவகையில் நுண்ணீர்ப் பாசனம் மேற்கொள்ள 5,000 எக்டருக்கு, 100% மானியம் அனுமதியுடன் ரூ.10.48 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2,500 செயற்கை மழை நீர் தூவான்கள் மற்றும் 2,500 நடமாடும் நீர் தூவான்கள் அமைக்கப்பட்டது.
- கரும்பு சாகுபடிப் பரப்பை அதிகரித்திட கரும்புக்கு மாநில அரசின் ஆதரவு விலை டன் ஒன்றுக்கு ரூ.2,100 ஆக நிர்ணயம்.
- மானாவாரி மேம்பாட்டுத் திட்டம் 20 மாவட்டங்களில் ரூ.25 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டது.
- ரூ.72.94 கோடி செலவில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் மூலம் 42,096 எக்டர் இலக்கு எய்தப்பட்டது.

- மண் ஆய்வுக் கூடங்களை மேலும் வலுப்படுத்துவதற்காக, 13 நடமாடும் மண் ஆய்வுக் கூடங்களை நிறுவவும், 11 அணுக்கதிர் ஈர்ப்பு அலைக்கற்றைமானிக் கருவி வாங்கவும் ரூ.5 கோடி ஒதுக்கீடு.
- 11,109 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க விவசாயிகளுக்கு ரூ.37.43 கோடி மானியம் வழங்கப்பட்டது.
- 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சிறப்புத் தொகுப்புத் திட்டம் மூலம் 54,490 ஏக்கர் பரப்பிற்கு 54,490 நெல் சிறுதளைகள், 6,250 ஏக்கர் பரப்பிற்கு 6,250 வீரிய மக்காச்சோள சிறுதளைகள், 3,83,660 ஏக்கர் பரப்பிற்கு பயறுவகை சிறுதளைகள், 3,175 ஏக்கர் பரப்பிற்குத் தேவையான 3,175 மணிலா சிறுதளைகள் மற்றும் 3,20,600 தென்னங்கன்றுகள் ஆகியன ரூ.35.66 கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. தானே புயலால் பாதிக்கப்பட்ட தோட்டக்கலைப் பயிர் விவசாயிகளுக்கு ரூ.724.94 கோடியில் சிறப்புத் திட்டம். புயலால் சாய்ந்த மரங்களை வெட்டி வேர்ப்பகுதிவரை எடுத்து உழவு மேற்கொள்ள எக்டருக்கு ரூ.25,000/– உதவித்தொகை. காய்கறி பயிர்களுக்கான சிறுதளைகள் வழங்க ரூ.25.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பல்லாண்டு பயிர்கள் நடவு செய்வதற்கு ஏதுவாக கீழே விழுந்த மரங்களை வெட்டி எடுத்த பின்பு உழவுப்பணி மேற்கொள்ள ரூ.3.651 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- தானே புயல் சிறப்பு தொகுப்புத் திட்டத்தினைச் செயல்படுத்த கூடுதல் மாவட்ட ஆட்சியர் தலைமையில், கடலூரில் திட்ட மேலாண்மை மையம் அமைத்திட ரூ.20.34 கோடி நிதி ஒதுக்கீடு.
- ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தோட்டக்கலைப் பயிர்கள் 26,583 எக்டரில் ரூ. 371.18 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது.
- ரூ.6.09 இலட்சம் செலவில் 6,400 விவசாயிகளுக்கு உயர் தொழில்நுட்ப தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி முறைகளில் பயிற்சியளிக்கப்பட்டது.
- 3,405 எக்டரில் ரூ.718.29 இலட்சம் செலவில் தோட்டக்கலைப்பயிர்களில் துல்லியப்பண்ணையம் அமைக்கப்பட்டது.
- 170 இலட்சம் இனத்தூய்மையான நடவுச்செடிகள் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.
- 2011 – 2012 ஆம் ஆண்டில் தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 200 நீர்வடிப்பகுதிகளில் ரூ.6.64 கோடி செலவில் 11,067 எக்டர் நிலத்தில் நில மற்றும் நீர்வள மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- நபார்டு உதவியுடன் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் 2011–2012ஆம் ஆண்டில் ரூ.3.68 கோடியில் 6,100 எக்டர் நிலம் 13 மாவட்டங்களில் உள்ள 34 நீர்வடிப்பகுதிகளிலும் ரூ.2.66 கோடியில் நிலம் மற்றும் வாய்க்கால் பண்படுத்தும்

பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. மேலும் ரூ.45 இலட்சம் வாழ்வாதாரப்பணிகள், பயிற்சி மற்றும் செயல்முறை விளக்கம் அளிப்பதற்கு செலவிடப்பட்டுள்ளது.

❖ 2011–2012ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம் ரூ.49.15 கோடியில் 40,960 எக்டர் நிலத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது. ரூ.21.50 கோடி செலவில் 1,849 நுழைவு கட்டப்பணிகளுக்கான குடிநீர் வசதி, உலர் மற்றும் கதிரடிக்கும் களம் கட்டுதல், சிறிய பாலங்கள் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

❖ வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் 29,980 எக்டர் பரப்பில் 1,222 நீர்வடிப் பகுதிகளில் ரூ.17.99 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

❖ ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் 19,854 எக்டர் பரப்பளவில் 910 நீர்வடிப்பகுதிகளில் ரூ.11.91 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

❖ மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் 66 நீர்வடிப்பகுதிகளில் 1,371 பணிகள் ரூ.4.40 கோடி செலவில் நடைபெற்றுள்ளது.

❖ விவசாயிகளுக்குப் பொருளீட்டுக் கடன் தொகை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தப்பட்டு 2,532 விவசாயிகளுக்கு ரூ.21.69 கோடி பொருளீட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

❖ ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 50 நவீனக் கிடங்குகள் அமைத்திட ரூ.82 கோடி ஒதுக்கீடு.

❖ சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் கட்ட ரூ.3 கோடி ஒதுக்கீடு.

❖ உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் திறன் மேம்பாட்டிற்காகத் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் ரூ.4.45 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 164 திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் 7,900 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

❖ தோட்டக்கலை விளைபொருட்களுக்கென வணிக வளாகங்கள் மற்றும் குளிர்சாதன வசதி அமைப்புகளை உருவாக்கிட தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.26.5 கோடி ஒதுக்கீடு.

❖ வேளாண் பதனிடும் தொழிற்சாலைகளில் விவசாயிகளைப் பங்குதாரர்களாக்கி அதற்கான 25 சதவீதப் பங்குத் தொகையை அரசே செலுத்தி ரூ.20 கோடியில் ஐந்து வேளாண் பதனிடும் தொழிற்சாலைகள் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு இலக்கை விஞ்சிய பயிர்க்கடன்

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு. **செல்லூர் கே. ராஜு** அவர்கள்

- ❖ தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் 2011–2012 ஆம் ஆண்டில் ரூ.3,000 கோடி பயிர்க் கடன் வழங்கக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 31.03.2012 முடிய 8,99,974 விவசாயிகளுக்கு ரூ.3,280.42 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.
- ❖ ரூ.25,000 கோடி அளவிற்கு நகைக் கடன்கள் வழங்கிடக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 31.3.2012 வரை ரூ.26,669.02 கோடி நகைக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ❖ தமிழ்நாட்டில் 31,089 நியாயவிலைக் கடைகளைக் கூட்டுறவு நிறுவனங்கள் நடத்தி வருகின்றன. ஜூன் 2011 முதல் நியாயவிலைக் கடைகள் மூலம் விலையில்லா அரிசி வழங்கப்படும் என அரசு உத்தரவிட்டதின் பேரில், 1.6.2011 முதல் குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாயவிலைக் கடைகள் மூலம் 31.3.2012 வரை 24,72,929 மெ.டன் அரிசி விநியோகிக்கப்பட்டுள்ளது.

- ரூ.180 கோடி வீட்டுவசதிக் கடன் வழங்கக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 31.3.2012 முடிய ரூ.202.33 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.
- மகளிர் தொழில் முனைவோருக்குக் கடன் வழங்கிட மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும் நகரக் கூட்டுறவு வங்கிகளுக்கும் சேர்த்து ரூ.30 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 31.3.2012 முடிய ரூ.32.98 கோடி கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.
- மாதச் சம்பளம் பெறும் மகளிருக்கு ரூ.30 கோடி கடன் வழங்கிடக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 31.3.2012 முடிய ரூ.30.91 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.
- மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.15 கோடி கடன் வழங்கிடக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 31.3.2012 முடிய ரூ.17.53 கோடி அளவிற்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

- டெல்டா பாசனப் பகுதி அல்லாத இடங்களில் உள்ள விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லுக்கு நியாயமான விலை கிடைக்கத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு 46,958.67 மெ.டன் நெல் கொள்முதல் செய்து கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு இரசாயன உர விற்பனைக்காக ரூ.130.50 கோடி வட்டியில்லாக் கடன் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உரிய நேரத்தில் விநியோகிக்கப்படுகின்றன.

❖ தொழுநோயால் பாதிக்கப்பட்ட 232 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறும் வகையில் அவர்கள் வசிக்கும் இடமான சென்னை, பலராமபுரம் என்ற இடத்தில் சிறப்புப் பகுதிநேர நியாயவிலைக் கடை 28.6.2011 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

❖ குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்புகள் புத்துயிர் பெறுவதற்காக ரூ.82.54 கோடி அளவுக்கு மாநில அரசால் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

❖ தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஆகியவற்றில் தானிய சேமிப்புக் கிடங்குகளின் கொள்ளளவு 1,55,300 மெட்ரிக் டன் அளவிற்கு உயர்த்துவதற்காக நபார்டு - ஊரகக் கட்டுமான வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (Rural Infrastructure Development Fund) 1,166 புதிய கிடங்குகள் கட்டுவதற்காக ரூ.105.47 கோடி அளவிற்கு அரசால் நிதி உதவி அளிக்கப்பட்டு, கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

வளமான தமிழகத்திற்கு பசுமையான தொலைநோக்குத் திட்டங்கள்

மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
திரு. **கே.டி. பச்சைமால்** அவர்கள்

- பசுமைப் பரப்பினை விரிவுபடுத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளையொட்டி, தமிழகம் முழுவதும் 64 இலட்சம் மரக்கன்றுகள் நடும் பணிகள் தொடங்கப்பட்டு ரூ.13.77 கோடி செலவில் 39.33 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.
- ரூ. 21.97 கோடி செலவில் உயிர்ப்பன்மைப் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம் செயலாக்கம். இதனால் ஏறத்தாழ 1,000 கிராமங்கள் பயன்பெறும்.
- ரூ.54.94 கோடி செலவில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை–2 செயலாக்கம்.
- ரூ.12.73 கோடி செலவில் தனியார் நிலங்களில் 1.19 கோடி மரங்கள் நடப்பட்டுள்ளன.
- பள்ளிக்கரணை சதுப்பு நில மேம்பாட்டிற்காக ரூ.5.17 கோடி ஒதுக்கீட்டில் பணிகள் நடைபெறுகின்றன.
- சமூக வனத்தோட்டங்களில் கடந்த ஆண்டுகளில் கிடைத்த ஏல விற்பனை வருவாயில் ரூ.16.44 கோடி 1018 ஊராட்சிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.
- தேரூர் மணக்குடி நீர்ப்பகுதி, ஈரநிலப் பறவை இனங்களைப் பாதுகாக்க ரூ.1.61 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- ஸ்ரீரங்கத்தில் வண்ணத்துப்பூச்சிப் பூங்கா அமைக்க ரூ.1.62 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- வனத்துறையில் புதிய கட்டடங்கள் கட்ட மற்றும் பராமரிக்க ரூ.4.57 கோடி செலவிடப்பட்டுள்ளது.
- ரூ.24.81 கோடி செலவில் காடுகள் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- ரூ.13.93 கோடி செலவில் பழங்குடியினர் பயன்படுத்தும் சாலைகள் பராமரிக்கப்பட்டுள்ளன.
- ரூ.3.80 கோடி செலவில் ஆற்றுப்படுகைகளில் நடப்பட்டுள்ள தேக்கு மரங்கள் பராமரிப்பு.

- ஏழு மாவட்டங்களில், யானை புகா அகழிகள் வெட்டுதல் மற்றும் வனங்களுக்குள் நீர் ஆதாரம் ஏற்படுத்துதல் போன்ற பாதுகாப்புத் திட்டங்களைச் செயலாக்க ரூ.11.70 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- வனப்பகுதிகளில் தீவனப் பயிர்களைப் பயிர் செய்யும் திட்டத்திற்காக ரூ.20.87 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை 2011–2012 ஆம் ஆண்டில் செயல்படுத்திட ரூ.3.46 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

- வனத்துறை களப் பணியாளர்களுக்கு மாத இடர்ப்படி ரூ.60 லிருந்து ரூ.270 ஆக உயர்வு; தற்காலிக வேட்டைத் தடுப்புக் காவலர்களின் மாதந்திர ஊதியம் ரூ.4,000–ஆக உயர்வு.
- வனவிலங்கு தாக்கி உயிரிழந்தால் வழங்கப்படும் இழப்பீடு ரூ.1.5 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாகவும், பயிர்ச்சேதங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15,000–லிருந்து ரூ.25,000 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.
- வன விலங்குகளால் ஏற்படும் பாதிப்புகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குவதற்கு ஏதுவாக ரூ.2.50 கோடி சுழல் நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- வனத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவ/மாணவியருக்குப் பரிசாக ரூ.15,000லிருந்து ரூ.50,000 வரை வழங்கப்பட்டது. இவர்களில் பெரும்பான்மையோர் பழங்குடியின மாணவர்கள்.

வனவருவாய்

- சந்தன மர வருவாய் ரூ.27.16 கோடியும் தேக்கு மரக்கட்டை வருவாய் ரூ.2.95 கோடியும் ஈட்டப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தினால் அரசுக்கு வழங்கப்பட்ட குத்தகைத் தொகை ரூ.20.03 கோடி.
- அரசு இரப்பர் கழகம் அரசுக்கு வழங்கிய குத்தகை ரூ. 3.14 கோடி.
- தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகம் வழங்கிய குத்தகை ரூ. 96.39 இலட்சம்.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம்

- தமிழ்நாடு தேயிலைத் தோட்டப் பணியாளர்களுக்குப் பசுந்தேயிலை பறிக்கக் கீழ்க்கண்டவாறு ஊக்கத்தொகை உயர்த்தப்படுகிறது.

36 கிலோ முதல் 40 கிலோ வரை	–	கிலோ 1க்கு ரூ. 1
41 கிலோ முதல் 50 கிலோ வரை	–	கிலோ 1க்கு ரூ. 2
51 கிலோ மற்றும் அதற்கு மேல்	–	கிலோ 1க்கு ரூ. 3

இதன் மூலம் ஆண்டொன்றுக்குக் கூடுதலாக ரூ.31.50 இலட்சம் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும்.

- ரூ.39 கோடியே 49 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 19,075 எக்டேர் பரப்பளவில் தேக்கு மரங்கள் நடப்படும்.

- கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் கிராமத்தில் உள்ள உதயகிரி கோட்டையில் ரூ.15 கோடி செலவில் 22.5 எக்டேர் பரப்பளவில் உயிரியல் பூங்கா ஒன்று நிறுவப் பெறும்.
- ரூ.686 கோடி செலவில் நடைபெற்றுவரும் உயிர்ப் பன்மை பாதுகாப்பு மற்றும் பெருமளவிலான பசுமையாக்குதல் திட்டத்தினைச் சிறப்பாகச் செயலாக்கவும், திட்டப் பணிகளைக் கண்காணிக்கவும் திட்ட மேலாண்மை அலகுக் கட்டடம் வேளச்சேரியில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.
- தமிழ்நாடு வனத்துறையில் வனவர், வனக்காப்பாளர், ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் மற்றும் வனக்காவலர் ஆகிய பதவிகளில் ஏற்படும் நேரடி நியமனத்திற்கான காலிப்பணியிடங்களை நிரப்ப மாநில அளவில் தமிழ்நாடு வனச் சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் ஏற்படுத்தப்படும்.
- தமிழ்நாடு வனத்தோட்டக் கழகப் பகுதிகளில் 4,500 எக்டேர் பரப்பில் 9 கோடியே 33 இலட்ச ரூபாய் செலவில் மரங்கள் நடவு செய்யப்படும். மேலும், 800 எக்டேர் பரப்பில் உயர்விளைச்சல் ஒட்டு முந்திரிக் கன்றுகள் 3 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் நடவு செய்யப்படும்.
- தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழக நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் பயன்பெறும் வண்ணம் 40 இலட்சம் ரூபாய் செலவில் சாலை வசதிகளை மேம்படுத்துதல், குடிநீர் வசதி செய்தல், குடியிருப்புப் பகுதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் இந்த ஆண்டு நிறைவேற்றப்படும்.

புதிய சாலைகள்
புதிய பாலங்கள்

மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள்துறை அமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிச்சாமி** அவர்கள்

- 62017 கி.மீ. நீளத் தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், முக்கிய மாவட்டச் சாலைகள் மற்றும் மாவட்ட இதரச் சாலைகளை இத்துறை சிறப்புடன் பராமரித்து வருகிறது.

சாலைப் பணிகள்

- ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 1608.21 கோடி செலவிடப்பட்டு 4953 கி.மீ. நீள சாலைகளில் அகலப்படுத்துதல் மேம்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.



- ❖ திட்டம் சாராப் பணிகளின்கீழ் 6035 கி.மீ. நீளச் சாலைகளில் பராமரிப்புப் பணிகள் ரூ. 985.87 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.
- ❖ நபார்டு வங்கி நிதியுதவியுடன் 219.10 கி.மீ. நீளமுள்ள 45 சாலைகள் ரூ.74.73 கோடி செலவில் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன.
- ❖ தூத்துக்குடி முதல் அஞ்சுகிராமம் வரையிலான 113 கி.மீ. நீளமுள்ள கிழக்குக் கடற்கரை சாலை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் பணி ரூ. 257 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புறவழிச்சாலைகள்

- ❖ சிவகங்கை மாவட்டத்தில் இளையான்குடி நகருக்கு ரூ. 3.50 கோடி மதிப்பிலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் எட்டுக்குடி நகருக்கு ரூ. 1.55 கோடி மதிப்பிலும், நாகப்பட்டினம் நகருக்கு ரூ. 19.49 கோடி மதிப்பிலும் மற்றும் திருச்சி மாவட்டத்தில் துறையூர் நகருக்கு ரூ. 9.45 கோடி மதிப்பிலும் புறவழிச்சாலை அமைக்கும் பணிகள் முடிவுற்றுள்ளன.
- ❖ சிவகங்கை நகருக்குச் சுமார் 10.6 கி.மீ. நீளத்திற்கும் மற்றும் எடப்பாடி நகருக்கு 8.8 கி.மீ. நீளத்திற்கும் புறவழிச்சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ❖ மாநில நெடுஞ்சாலைகளை ஒட்டி அமைந்துள்ள நகராட்சி பகுதிகளுக்கு புறவழிச்சாலைகள் அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வட்டச் சாலை

❖ மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், திருப்பூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, ஈரோடு மற்றும் வேலூர் ஆகிய நகரங்களுக்கு வட்ட மற்றும் ஆரச்சாலைகள் அமைப்பதற்காக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சென்னை வெளிவட்டச் சாலை கட்டம் II

❖ சென்னை மாநகரில் தற்போதுள்ள சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் சென்னைப் பெருநகரைச் சுற்றி நெரிசலின்றிப் போக்குவரத்து சீராகச் செல்லும் வகையில் வெளிவட்டச் சாலை அமைக்க அரசு முடிவு செய்து அதனை செயல்படுத்தும் வகையில், சென்னை வெளிவட்டச் சாலை இரண்டாம் கட்டமாக நெமிலிச்சேரி (தே.நெ. 205) முதல் தே.நெ.5இல் உள்ள பாடியநல்லூர் வழியாகத் திருவொற்றியூர்–பொன்னேரி–பஞ்செட்டி சாலையில் உள்ள மீஞ்சூர் வரை சுமார் 32 கி.மீ. நீளத்திற்கு ஆறு வழிச் சாலை அமைக்கும் பெருந்திட்டத்திற்குப் பொது மற்றும் தனியார் பங்கேற்போடு வடிவமைத்தல், கட்டுதல், நிதி திரட்டுதல், செயல்படுத்தல், ஒப்படைத்தல் (DBFOT) முறையில் அரை ஆண்டுதோறும் ஈவுத்தொகை வழங்கும் செயல்திட்டத்திற்கு அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

❖ முன்னோடித் திட்டமாகச் சென்னை வெளிவட்டச் சாலை அமையும் பகுதியில் அச்சாலையைச் சுற்றி அமைந்துள்ள பகுதிகள் வளர்ச்சி அடையும் வகையில் சாலை கட்டமைப்பு வளையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ மாமல்லபுரத்தையும், எண்ணூர் துறைமுகத்தையும் இணைக்கும் வகையில் ரூ. 1420 கோடி மதிப்பீட்டில் சுமார் 162 கி.மீ. நீளமுடைய "சென்னை எல்லை சாலைப்" பணிக்கான திட்ட அறிக்கை தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம்

❖ சென்னைப் பெருநகருக்குச் சிறப்பான சாலை இணைப்பை வழங்குவதற்காக இத்துறையின் மெட்ரோ அலகின் மூலம் 62 சாலைப் பணிகளும் மற்றும் 21 பாலப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கூவம் ஆற்றின் குறுக்கே பெரியார் ஈ.வெ.ரா. சாலையில் கி.மீ. 6/6இல் பாலம் ரூ. 6.91 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் III–இன் கீழ் 2 சாலைப் பணிகள் ரூ. 13.87 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன.

❖ சென்னையிலுள்ள அண்ணாசாலை, ஈ.வெ.ரா. பெரியார் சாலை மற்றும் உள்வட்டச் சாலைகளைச் சர்வதேசத் தரத்திற்கு மேம்படுத்த 'ஒருங்கிணைந்த திட்டமிடல்' நடவடிக்கை துவங்கப்பட்டுள்ளது.

செயல்பாடு அடிப்படையில் சாலைப் பராமரிப்புப் பணிகள் (PBMC)

❖ சாலைப் பராமரிப்புப் பணியினைச் சிறப்பாகச் செயல்படுத்திட, பரிசோதனை அடிப்படையில் சுமார் 296 கி.மீ. நீளச் சாலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, தொடர்ந்து 5 ஆண்டுகள் பராமரிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

பாலப்பணிகள்

❖ ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.121.10 கோடி செலவில் 274 பாலம்/சிறுபாலம் கட்டுமானப் பணிகள் முடிக்கப் பட்டுள்ளன.

❖ நபார்டு வங்கி நிதியுதவியுடன் 78 பாலங்கள் ரூ. 209.77 கோடி மதிப்பில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. மேலும் 65 பாலங்கள் ரூ. 151 கோடி மதிப்பில் அமைக்கப் படும்.

❖ மேலும், சுனாமி மறுவாழ்வுத் திட்டம் மற்றும் பகுதி II திட்டத்தின்கீழ் 2 பாலப் பணிகள் ரூ. 19.43 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

❖ கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ரூ. 81 கோடி மதிப்பீட்டில் ஸ்ரீரங்கத்தையும் திருச்சியையும் இணைக்கும் வகையில் பாலம் அமைக்கும் பணி மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

❖ கரூர் மாவட்டத்தில் பசுபதிபாளையம் அருகே காவேரி ஆற்றின் குறுக்கே ரூ. 12.50 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

சாலை மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள்

❖ இரயில்வே பணிகள் திட்டத்தின்கீழ் 23 சாலை மேம்பாலம் / கீழ்ப்பாலங்கள் அமைக்க ரூ. 740.01 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

❖ 7 இரயில்வே சாலை மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் ரூ.230.28 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன.

நவீனத் தகவல் சேகரிப்பு உபகரணம் (Advanced Data Collection Equipment)

❖ இரண்டு நவீனத் தகவல் சேகரிப்பு உபகரணங்கள் (Advanced Data Collection Equipment) ரூ.3 கோடி மதிப்பில் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

அலுவலகக் கட்டடங்கள் மற்றும் ஆய்வகக் கட்டடங்கள்

❖ ரூ. 2.68 கோடி செலவில் சேலம் மற்றும் திருச்சியில் தர உறுதி மற்றும் ஆராய்ச்சியின் மண்டல ஆய்வகக் கட்டடங்கள், தாராபுரம், நாகப்பட்டினம், வாணியம்பாடி, திருவள்ளூர் மற்றும் விழுப்புரத்தில் அலுவலகக் கட்டடங்கள் முடிக்கப்பட்டுள்ளன.

உதவிப் பொறியாளர்கள் பணி நியமனம்

❖ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 164 உதவிப் பொறியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டனர்.

சிறு துறைமுகங்கள்

❖ திருவாளர்கள் செட்டிநாடு பவர் கார்ப்பரேஷன் லிட் நிறுவனத்தினர் அமைக்க உத்தேசித்துள்ள 1200 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின்நிலையத்திற்குத் தேவையான நிலக்கரியைக் கையாளுவதற்கு ஏற்ற துறைமுகத்தை அமைக்க ஏதுவாக, அரசால், செட்டிநாடு தரங்கம்பாடி துறைமுகத்தின் எல்லைகள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியில் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

❖ நாகப்பட்டினம் அருகே அனைத்துப் பருவக் காலநிலைக்கேற்ப ஆழ்கடல் கப்பல் அணையும் பசுமைச் சூழலுடன் கூடிய துறைமுகம் ஒன்றைச் சுமார் 380 கோடி ரூபாய் முதலீட்டில், பொது மற்றும் தனியார் கூட்டாண்மையில், ஒப்பந்த முறையில் மேம்பாடு செய்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முழு உணவுப் பாதுகாப்பை நோக்கி

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர்
திரு. **ஆர். காமராஜ்** அவர்கள்

- 01.06.2011 முதல் அரிசி பெறத் தகுதியுள்ள 1,85,84,153 குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் விலையில்லா அரிசி வழங்கப்பட்டு வருகிறது. 16.05.2011 முதல் 31.03.2012 வரை 35,76,316 மெட்ரிக் டன்கள் அரிசி நுகர்வு செய்யப்பட்டுள்ளது.

- மாதந்தோறும், சர்க்கரை, கோதுமை, மண்ணெண்ணெய், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு மானிய விலையில் விநியோகம் செய்யப்படுகின்றன. இதற்கு ரூ.408 கோடி மானியம் வழங்கப்படுகிறது. 1.97 கோடி குடும்பங்கள் பயன் அடைந்துள்ளன.

- பொது விநியோகத் திட்டத்தில், 16.05.2011 முதல் 31.03.2012 வரை 35,76,316 மெட்ரிக் டன்கள் அரிசி, 3,86,122 மெட்ரிக் டன்கள் சர்க்கரை, 1,46,521 மெட்ரிக் டன்கள் கோதுமை, 1,41,587 மெட்ரிக் டன்கள் துவரம் பருப்பு, 97,718 மெட்ரிக் டன்கள் உளுத்தம் பருப்பு, 1,74,218 கிலோ லிட்டர் பாமாயில், 34,550 மெட்ரிக் டன்கள் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு மற்றும் மளிகைப் பொருள்கள் 13,94,754 பொட்டலங்கள் 1.97 கோடி குடும்பங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

- நெடுந்தொலைவிலும் மற்றும் போக்குவரத்து வசதி இல்லாத பகுதிகளிலும் 371 புதிய பகுதி நேர நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

- சென்னை சிந்தாமணி சிட்கோ நகர்–3 நியாயவிலைக் கடையைப் பிரித்து 232 தொழுநோயால் பாதிக்கப்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்குப் பிரத்தியேகமாக ஒரு புதிய பகுதி நேர நியாயவிலைக் கடையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 28.06.2011 அன்று திறந்து வைத்தார்கள்.

- 1,365 குடும்ப அட்டைகள் திருநங்கையர்களுக்கும், 61,061 குடும்ப அட்டைகள் காவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

- புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகளின் செல்லத்தக்க காலம் 01.01.2012 முதல் 31.12.2012 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. 31.03.2012 வரை 1.93 கோடி குடும்ப அட்டைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

- மாநில எல்லையோரப் பகுதியில் பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருள்கள் கடத்தப்படுவதைத் தடுக்கப் புதிய குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறை அலகு கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சியில் அமைக்கப்பட்டுள்ளது.

- முந்தைய அரசால் 2010–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கலைக்கப்பட்ட 5 மாநில எல்லையோரச் சிறப்புக் கண்காணிப்புப் படைகள் கன்னியாகுமரி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் மீண்டும் உருவாக்கப்பட்டுள்ளன.

❖ கடத்தல் பற்றித் தகவல் அளிப்பவர்களுக்கு வழங்கப்படும் சன்மானத்தை ரூ.500–லிருந்து ரூ.1,000 ஆக உயர்த்தி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

❖ போலி குடும்ப அட்டைகள் பற்றித் தகவல் அளிப்பவர்க்கு ஒரு போலி குடும்ப அட்டைக்கு வழங்கப்படும் சன்மானத்தை ரூ.200–லிருந்து ரூ.250 ஆக உயர்த்தி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

❖ குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறையால் 3,792 பேரும், தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் 202 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

❖ 52,489 குவிண்டால் பொது விநியோகத்திட்ட அரிசி, 1,97,868 லிட்டர் பொது விநியோகத்திட்ட மண்ணெண்ணெய் மற்றும் 11,890 எரிவாயு உருளைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

- நுகர்வோருக்கு நியாயமான விலையில் பொருள்கள் கிடைக்க வழிவகை செய்ய ரூ.50 கோடி முதலீட்டில் விலைக் கட்டுப்பாட்டு நிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- வெளிச்சந்தையில் ரூ.95/– க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ புளி ரூ.58/–க்கும், ரூ.220/–க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ குண்டு மிளகாய் ரூ.120/–க்கும், ரூ.96/–க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ நீட்டு மிளகாய் ரூ.80/–க்கும் 11.01.2012 முதல் பொது மக்களுக்குக் குறைந்த விலையில் கூட்டுறவு மற்றும் அமுதம் அங்காடிகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

- தானே புயலால் பாதிக்கப்பட்ட கடலூர், விழுப்புரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழக்கமாக விநியோகிக்கப்படும் அளவைவிடக் கூடுதலாக ஒரு லிட்டர் விலையில்லா மண்ணெண்ணெய் மற்றும் 10 கிலோ விலையில்லா அரிசி ஆகியவை வழங்கப்பட்டன.

- 2011–2012 கரீப் சந்தைப் பருவத்திற்கு மத்திய அரசு குறைந்தபட்ச ஆதரவு விலையாகக் கிரேடு "ஏ" வகை நெல்லுக்குக் குவிண்டால் ஒன்று ரூ.1,110 எனவும் சாதாரண இரக நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,080 எனவும் நிர்ணயம் செய்துள்ளது. மாநில அரசு, விவசாயிகளை ஊக்கப்படுத்தவும், நெல் கொள்முதலை அதிகரிக்கவும், கிரேடு "ஏ" நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு ஊக்கத் தொகை ரூ.70/–ஐ சேர்த்து ரூ.1,180/– என்ற விலையிலும், சாதாரண இரக நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு ஊக்கத் தொகை ரூ.50/–ஐ சேர்த்து ரூ.1,130/– என்ற விலையிலும் கொள்முதல் செய்தது.

- 2011–2012 கரீப் சந்தைப் பருவத்தில் 31.03.2012 வரை 21.10 இலட்சம் மெட்ரிக் டன் நெல் 1,621 நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதே நாளில் கடந்த 2010–2011 கரீப் சந்தைப் பருவத்தில் 16,73,318 மெட்ரிக் டன்கள் நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது. இந்த ஆண்டு 4,36,682 மெட்ரிக் டன்கள் நெல் கூடுதலாகக் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இது கணக்கீட்டின்படி 26.09 சதவீதம் அதிகமாகும்.

வெண்மைப் புரட்சி

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்
திரு. **வி. மூர்த்தி** அவர்கள்

- 1,460 பிரதமப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.
- பால் உற்பத்தியாளர்கள் நலன் கருதிப் பசும்பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.18/– லிருந்து ரூ.20/– ஆகவும், எருமைப்பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.26/– லிருந்து ரூ.28/– ஆகவும் உயர்த்தி வழங்கப்படுகின்றன.
- 2011 ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் பால்கொள்முதல் விலையை உயர்த்தி, விற்பனை விலையை உயர்த்தாததன் மூலம் இணையம் மற்றும் மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.16.55 கோடி கூடுதல் செலவினம் ஏற்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டு, பால் உற்பத்தியாளர்களுக்குப் பால் பணம் பட்டுவாடா செய்வதில் ஏற்பட்டுள்ள கூடுதல் செலவினை அரசே ஏற்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதைத் தொடர்ந்து இந்த அரசு 115.85 கோடி ரூபாயை வழிவகை முன்பணமாக வழங்கியுள்ளது.
- கோயம்புத்தூர் மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திற்குப் பால் வழங்கும் பிரதமப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பால் உற்பத்தியாளர்களுக்கு ஒரு லிட்டருக்கு 50 பைசா வீதம் 2012 ஆம் ஆண்டில் ரூ.4.10 கோடி வழங்கப்பட்டுள்ளது. ஒன்றியத்தால் பால் கொள்முதல்

விலைப்பட்டியலின்படி நிருவாகச் செலவினத்திற்குப் பிடித்தம் செய்யப்பட்ட பின்னர் உள்ள தொகையினை உற்பத்தியாளர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட தொகையை விட இத்தொகை கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

❖ தரமான தூய பால் உற்பத்திக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தில் (SIQ & CMP) ரூ329.53 கோடி கோவை, திண்டுக்கல், திருச்சி, வேலூர், திருநெல்வேலி, சிவகங்கை ஆகிய 6 மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

❖ பிரதமப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் 19,823 பணியாளர்களுக்கு 25.11.2011 முதல் தலா ரூ.200 ஊதிய உயர்வும், பொங்கல் 2012இல் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகையாகத் தலா ரூ.1,000 மற்றும் பால் பொருள்களும் வழங்கப் பட்டன.

❖ 5,709 இணையம் மற்றும் ஒன்றியப் பணியாளர்களுக்குப் பொங்கல் 2012இல் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகையாகத் தலா ரூ.1,000 வீதம் ரூ.57.09 இலட்சம் மற்றும் பால்பொருள்களும் வழங்கப்பட்டன.

- பிரதமப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த பகுதி 2 திட்டத்தின்கீழ் ரூ.1.25 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மற்றும் மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தத் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், (NADP) ரூ.24.62 கோடியில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- தேசியப் புரதச்சத்து வழங்கும் (NMPS) அமைப்பகம், ஆர்.கே.வி.ஒய். திட்டத்தின்கீழ் வழங்கிய ரூ.9.33 கோடியில் மாதவரம், அம்பத்தூர், சோழிங்கநல்லூர், விழுப்புரம், காக்களூர் பால்பண்ணைகள் மற்றும் ஈரோடு, கிருஷ்ணகிரி பால்பவுடர் தொழிற்சாலைகளில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளன.

- புதுக்கோட்டை ஒன்றியத்தில் இயக்கப்படாமல் இருக்கும் பால் குளிரூட்டும் நிலையத்தைப் பால் பண்ணையாக மாற்றி இயக்க வைக்கத் திட்டமிடப்பட்டு “தீவிரப் பால் பெருக்குத்திட்டத்தின்” கீழ் 2.99 கோடி ரூபாய் செலவில் உள்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

- திருவண்ணாமலையில் நாளொன்றிற்கு 2 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறனுள்ள பால்பண்ணை மற்றும் 20 டன் பால் பவுடர் தொழிற்சாலை விரைவில் அமைக்க 20.71 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- கூட்டுறவுகளுக்கு உதவுதல் திட்டத்தின்கீழ், திண்டுக்கல் ஒன்றியத்திற்கு ரூ.1.33 கோடியும், தஞ்சாவூர் ஒன்றியத்திற்கு ரூ.7.60 கோடியும் மற்றும் காஞ்சிபுரம் ஒன்றியத்திற்கு ரூ.3.88 கோடியும் மத்திய மற்றும் மாநில அரசுகள் ஒப்புதல் அளித்துள்ளன.

சிறு தொழில் வளர்ச்சிக்குப் புதிய முயற்சிகள்

மாண்புமிகு ஊரகத்தொழில் மற்றும் சத்துணவுத்துறை அமைச்சர்
திரு. **எம்.சி. சம்பத்** அவர்கள்

- நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளின் உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட தேயிலைக்கு ஆதரவு விலையாக கிலோவிற்கு ரூ. 2 வீதம் ரூ.11.20 கோடி ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

- குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களைச் செம்மைப்படுத்தும் வகையில், மின்னாக்கிகளுக்கு வழங்கும் பண உதவித்தொகைத் திட்டத்தில் 125 KVA யிலிருந்து 320 KVA வரை மின்னாக்கிகள் பண உதவி பெறத் தகுதியுடையதாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

- அரியலூர் மாவட்டத்திற்கென ஒரு மாவட்டத் தொழில் மையம் உருவாக்க வேண்டும் என்ற இத்துறையின் உறுதிப்பாட்டிற்கேற்ப ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்டத் தொழில் மையம் அமைவது இதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

- காக்களூரில் உள்ள மத்திய மின் சோதனை ஆய்வகத்தின் சோதனை வசதிகளை ரூ.63 இலட்சம் செலவில் வலுவூட்ட ஒரு சிறப்புத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. தொழில் வணிக இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள இவ்வாய்வக நிறுவனம் மின் விசிறி, உணவுக் கலவைக் கருவி மற்றும் மாவரைக்கும் இயந்திரம் (Grinder) ஆகியவற்றின் மாதிரிகளைச் சோதனை செய்யும் முகவரமைப்பாகும்.

- கிண்டி தொழிற்பேட்டையில், தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்திற்குப் பயிற்சி வளாகம் அமைக்க 1.91 ஏக்கர் நிலம் ஒதுக்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) வலுவான சந்தை வரைமுறையினை வகுத்து, 16.12.2011 அன்று நாமக்கல் நகரில் புதிய காட்சியகம் திறக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டில் குழும வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஐம்பது திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் ஏழு திட்டங்கள் முழுமையடைந்துள்ளன. எட்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. முழுமையடைந்த குழுமங்களுள் குடியாத்தம், விருதுநகர், ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர், கழுகுமலை மற்றும் கோவில்பட்டி ஆகிய இடங்களில் உள்ள தீப்பெட்டிக் குழுமங்களும், கோயம்புத்தூரில் உள்ள ஈர மாவு அரவைக் குழுமமும் அடங்கும். நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் குழுமங்களில் சிங்கம்புணரியில் உள்ள கயிறுக் குழுமம், விருத்தாசலத்திலுள்ள பீங்கான் குழுமம், திருநெல்வேலியிலுள்ள செங்கல் குழுமம், சேலத்திலுள்ள ஜவ்வரிசிக் குழுமம், ஒசூர் மற்றும் இராணிப்பேட்டையிலுள்ள பொறியியல் குழுமங்கள், சிவகாசியிலுள்ள அச்சுக் குழுமம் மற்றும் கீழப்பாவூரில் உள்ள அரிசி ஆலைக் குழுமம் ஆகியவை அடங்கும்.

- 2010–11–இல் 14 கோடியே 39 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாயை ஈவுத் தொகையாகத் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் அரசுக்குச் செலுத்தியுள்ளது. அதேபோல அதே காலத்தில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் ரூ. 87 இலட்சம் ஈவுத் தொகையாகச் செலுத்தியுள்ளது. இதைத் தவிர இண்ட்கோசர்வும் ரூ. 15.36 இலட்சம் ஈவுத் தொகையாக இதே காலக்கட்டத்தில் செலுத்தியுள்ளது. 02.12.2011 அன்று இத்தொகைகள் அரசுக்குச் செலுத்தப்பட்டன.

- சென்னை, கிண்டியில் உள்ள அரசுத் தொழிற்பேட்டையில் 1.47 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 44 கோடி மதிப்பீட்டில் அடித்தளம் மற்றும் 9 மாடிகளுடன் சிட்கோவிற்காக நிருவாக அலுவலகக் கட்டடம் கட்டப்படுகிறது.

- போட்டித் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் திறன் வளர்த்தல் ஆகியவற்றைக் குழும மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் செயல்படுத்த சிட்கோ நிறுவனத்தைத் தமிழக அரசு முகவராக நியமித்துள்ளது. தமிழ்நாட்டில் குழுமத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 50 திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதில், 7 திட்டங்கள் முழுமையடைந்துள்ளதோடு மட்டுமல்லாமல், 8 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில், 136 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20 திட்டங்கள் நிறைவேற்றப்படும். இந்தத் திட்டங்களை விரைந்து நிறைவேற்றும் பொருட்டு, 10 உதவி வளர்ச்சி அலுவலர் பணியிடங்கள் புதிதாகத் தோற்றுவிக்கப்படும்.

- விருத்தாசலத்தில் அமைந்துள்ள பீங்கான் தொழில்நுட்பப் பயிற்சி மையத்தின் மூலம் மூன்றரை ஆண்டுக் காலப் “பீங்கான் தொழில் நுட்பம்” பட்டயப் படிப்பும், திண்டுக்கல்லில் உள்ள கருவிப் பொறியியல் பயிலகத்தின் மூலம் மூன்று ஆண்டு கால அச்சு மற்றும் பொறியியல் படிப்பும், சென்னையிலுள்ள அரசினர் தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தின் மூலம் மூன்று ஆண்டுக் கால இயந்திரவியல் பட்டயப் படிப்புகளில் சிறப்புப் பிரிவுகளான அச்சு மற்றும் கருவிப் பொறியியல் மற்றும் குளிர் பதனம் மற்றும் காற்றுப் பதனவியல் படிப்புகளும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிலையங்களின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பாண்டில் மேம்படுத்தப்படும்.

- மாவட்டத் தொழில் மையங்களின் பணிகளை நவீன முறையில் சீரமைக்கும் பொருட்டு, ஏற்கெனவே சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் மாவட்டத் தொழில் மைய அலுவலகக் கட்டடங்கள் தேவைக்கேற்ப நவீன வசதிகளுடன் சீரமைக்கப்படும். தேவை உள்ள இடங்களில் புதிய கட்டடம் கட்டித் தரப்படும். வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் மாவட்டத் தொழில் மைய அலுவலகங்களுக்கு நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும். இப்பணிகள் 50 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

எழிலார்ந்த கட்டடங்கள் ஏற்றம் பெறும் நீர்நிலைகள்

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்
திரு. **கே.வி. ராமலிங்கம்** அவர்கள்

கட்டடங்கள் அமைப்பு

- தேனி மாவட்டம், லோயர் கேம்பில் திரு. கர்னல் (மறைந்த) ஜான் பென்னிகுயிக் அவர்களுக்கு ரூ.1.25 கோடி செலவில் மணிமண்டபம் கட்டும் பணி.
- சென்னை, பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடத்தினை ரூ.4.30 கோடி செலவில் மேம்படுத்தும் மற்றும் அழகுபடுத்துதல், ரூ.3.40 கோடி செலவில் முகப்பு அழகுபடுத்துதல், சென்னை, பேரறிஞர் அண்ணா நினைவிடத்தினை ரூ.1.20 கோடி செலவில் மேம்படுத்தும் பணி, சென்னை, கிண்டி, சர்தார் பட்டேல் சாலையில் உள்ள காந்தி மண்டப வளாகத்தினை ரூ.11.61 கோடி செலவில் புதுப்பிக்கும் பணி.

- திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் தேசியச் சட்டப்பள்ளி வளாகம் ரூ.100 கோடி செலவில் கட்டும் பணி.
- சென்னை, தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகைக் கட்டடத்தின் முகப்புத் தோற்றத்தினை ரூ.28 கோடி செலவில் மேம்படுத்தும் பணி.
- ரூ. 25 கோடி செலவில் தஞ்சாவூரிலும் ரூ. 25 கோடி செலவில் கடலூரிலும் மாவட்ட ஆட்சியரகக் கட்டடங்கள் கட்டும் பணி.
- ரூ.15 கோடி செலவில் 10 இடங்களில் வேலைவாய்ப்பு அலுவலகக் கட்டடம் கட்டும் பணி.
- ரூ.15 கோடி செலவில் 15 இடங்களில் உள்ள அரசுத் தொழிற்கல்வி மையக் கட்டடங்களை மேம்படுத்துதல் மற்றும் புதுப்பிக்கும் பணி.
- ரூ.97.48 கோடி செலவில் கால்நடை மருத்துவமனை, மருந்தகங்கள், கால்நடை நோய் நுண்ணறிவு மையம் மற்றும் இதர மையக் கட்டடங்கள் கட்டும் பணி.
- சென்னை அரசுப் பல் மருத்துவக் கல்லூரியில் ரூ.2.40 கோடி செலவில் பட்டமேற்படிப்பு மாணவர்களுக்கான விடுதியின் கூடுதல் தளம் கட்டும் பணி.
- சென்னை, கீழ்ப்பாக்கம் வளாகத்தில் உள்ள மருத்துவக் கல்வி இயக்குநரகம் மற்றும் தேர்வுக்குழு கட்டடத்தின் இரண்டாம் தளம் ரூ.2 கோடி செலவில் கட்டும் பணி.
- சென்னை, அரசு இராயப்பேட்டை மருத்துவமனை வளாகத்தில், சிறுநீரகவியல் துறையில் விபத்து மற்றும் உடலியக்க மருத்துவக் கட்டடத்தின் கூடுதல் தளங்கள் (4ஆவது மற்றும் 5ஆவது தளங்கள்) ரூ.4.35 கோடி செலவில் கட்டும் பணி.
- ரூ.5.06 கோடி செலவில் 23 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கட்டுதல்.
- கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் நூலகக் கட்டடம் ரூ.3.36 கோடி செலவில் கட்டுதல்.
- ரூ.1.70 கோடி செலவில், சென்னைப் பூந்தமல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான பள்ளியில் விடுதியுடன் கூடிய நவீனச் சமையலறைக் கட்டடம் கட்டும் பணி.
- ரூ.2.10 கோடி செலவில், 5 சமூக நல மையங்களில் பாதுகாப்புச்சுவர் கட்டும் பணி.
- ரூ.2.60 கோடி செலவில், 26 குழந்தைகள் மற்றும் மகளிர் பாதுகாப்பு மையக் கட்டடப் பணிகள்.
- ரூ.3 கோடி செலவில் 15 இடங்களில் உயிர் உரம் தயாரிக்கும் பிரிவுகளுக்கு சேமிப்புக் கிடங்கு கட்டும் பணி.
- குடுமியான் மலையில் மையக் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் ரூ.1.30 கோடி செலவில் நுண்உணவுக் கலவை தயாரிப்பு மற்றும் வழங்கும் கிடங்கு அறை கட்டும் பணி.

- பொதுப்பணித்துறையில் நேரடி நியமனம் மூலம் 262 நபர்கள், கருணை அடிப்படையில் 160 நபர்கள் பணிநியமனம்.

நீர்வள ஆதாரத்துறை

- 2011–12ஆம் ஆண்டுத் திட்டப்பணிகளின்கீழ் இதுவரை இல்லாத அளவில் நீர்வள நிலவளத் திட்டம், நபார்டு கடனுதவித் திட்டங்கள் வாயிலாக செயற்கைமுறையில் நிலத்தடி நீர் செறிவு, வெள்ள மேலாண்மை போன்ற பணிகளுக்கு ரூ.1,500 கோடி செலவிடப்பட்டுள்ளது.
- சுதந்திரத்திற்குப் பிறகு முதன்முறையாக மேட்டூர் அணை 06.06.2011 அன்று ஜூன் 12–க்கு முன்னரே திறக்கப்பட்டது.
- மேட்டூர் அணை கட்டப்பட்டு 75 ஆண்டுகள் முடிவுற்றதன் நிறைவாகக் கட்டப்பட்ட பவள விழாக் கட்டடம் 03.03.2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டது.
- சென்னைக்கு 1996ஆம் ஆண்டிலிருந்து இதுவரையிலும் இல்லாத வகையில் அதிகப்பட்சமாக 8 டி.எம்.சி கிருஷ்ணாநதி நீர் பெறப்பட்டது.
- விரிவுபடுத்தப்பட்ட சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்திட திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டத்தில், கண்ணன்கோட்டை மற்றும் தேர்வாய்க் கண்டிகை கிராமத்தின் அருகே 1 டிஎம்சி தண்ணீர் தேக்கும் வகையில் ஒரு புதிய நீர்த்தேக்கத்தை அமைக்க ரூ.330 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- சென்னையில் சோழவரம், போரூர், அயனம்பாக்கம், நேமம் ஆகிய ஏரிகளின் நீர்த்தேக்கக் கொள்ளளவை அதிகப்படுத்தவும் செம்பரம்பாக்கம் ஏரியினைப் புனரமைத்து அதன் அதிகப்படியான நீர்த்தேக்கத்திறனை மீட்கவும் ரூ.130 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் முக்கிய ஏரிகளில் ஒன்றான செங்குன்றம் ஏரியைப் புனரமைத்துப் பலப்படுத்த ரூ.10.56 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுப் பணிகள் துவங்கப்படவுள்ளன.

- திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், கொசஸ்தலையாற்றின் குறுக்கே திருகண்டலத்தில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.35 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கப்படவுள்ளது.
- திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், கொசஸ்தலையாற்றின் குறுக்கே இராமஞ்சேரியில் புதிய நீர்த்தேக்கம் அமைக்கப்படவுள்ளது.
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலை நோக்குத் திட்டத்தின்கீழ் ரூ.200 கோடி மதிப்பீட்டில் பெண்ணையாற்றைப் (சாத்தனூர் அணை) பாலாற்றுடனும், ரூ.253 கோடி மதிப்பீட்டில் பெண்ணையாற்றைப் (கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம்) பாலாற்றுடனும், ரூ.1,134 கோடி மதிப்பீட்டில் காவேரியாற்றை (மேட்டூர் அணை) சரபங்காவுடனும் (நாமக்கல் மாவட்டம்) இணைக்கும் திட்டங்களும் ரூ.1,862 கோடி மதிப்பீட்டில் அத்திக்கடவு அவினாசி வெள்ளக் கால்வாய்த் திட்டமும் செயல்படுத்தப்படவுள்ளன.
- காவேரி, மணிமுத்தாறு, கோட்டக்கரையாறு, வைகை மற்றும் குண்டாறு ஆகிய ஆறுகளை இணைப்பதற்கான திட்ட அறிக்கை ரூ.5,166 கோடிக்குத் தயாரிக்கப்பட்டு வெள்ள மேலாண்மைத் திட்டத்தின்கீழ்ச் செயல்படுத்த மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.
- வைகை, குண்டாறு, பெண்ணையாறு, பாலாறு, செய்யாறு மற்றும் அவற்றின் கிளை ஆறுகளின் குறுக்கே 249 இடங்களில் ரூ. 400 கோடி மதிப்பீட்டில் நிலத்தடிநீரைச் செறிவூட்டத் தடுப்பணைகள் கட்டப்படவுள்ளன.
- நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ் அடையாறு உப வடிநிலத்திலுள்ள 140 ஏரிகள் 177.81 கி.மீ. நீளம் வரத்துக்கால்வாய் ஆகியவற்றைப் புனரமைப்பதற்காக ரூ. 3,098.31 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுச் செயலாக்கத்தில் உள்ளது.

செய்யாறு – கிளியாறு உப வடிநிலத்திலுள்ள 453 ஏரிகள், 2 அணைக்கட்டுகள் மற்றும் 688.11 கி.மீ நீளம் வரத்துக்கால்வாய் ஆகியவற்றைப் புனரமைப்பதற்காக ரூ.8,488.97 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுச் செயலாக்கத்தில் உள்ளது. அமராவதி உப வடிநிலத்திலுள்ள 92 ஏரிகள் 10 அணைக்கட்டுகள் மற்றும் 257 கி.மீ. நீளம் வரத்துக்கால்வாய் ஆகியவற்றைப் புனரமைப்பதற்காக ரூ.128 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுச் செயலாக்கப்பட உள்ளன.

❖ ஆறுகள் மற்றும் நீரோடைகளின் குறுக்கே தடுப்பணைகள் அமைத்தல் மற்றும் ஏரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கசிவுநீர்க் குட்டைகள் மற்றும் நிலத்தடி நீர்ச் செறிவூட்டும் துளைகள் அமைத்தல் போன்ற 126 நீர்ச்செறிவுக் கட்டுமானங்களை, நிலத்தடி நீர்ச் செறிவூட்டும் பெருந்திட்டத்தின் கீழ் அமைக்க ரூ.60.50 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுப் பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

❖ 2011–12ஆம் ஆண்டில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.114.81 கோடி செலவில் அணைக்கட்டுகள் புனரமைத்தல், வெள்ளத்தடுப்புப் பணிகள், மதகுக் கதவணைகள் சரி செய்தல், படுகை அணைக்கட்டுதல், கால்வாய் மற்றும் வரத்துக் கால்வாய் சீரமைத்தல், பரிகைக்குழை பரண்கால் (Syphon Aqueduct) ஆகிய 16 பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

❖ உலக வங்கியின் நிதியுதவியுடன் 66 நீர்வள ஆதாரத்துறை மற்றும் 38 மின்சார வாரியத் துறை அணைகளை ரூ.745.49 கோடி மதிப்பில் புனரமைக்க அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் (DRIP) செயலாக்கப்படவுள்ளது.

❖ பதின்மூன்றாம் நிதிக்குழுவின் மானிய நிதி உதவித் திட்டத்தின்கீழ் 50 கடலோரப் பாதுகாப்புப் பணிகளுக்காக ரூ.199.93 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுச் செயலாக்கத்தில் உள்ளது.

- 674 மரபு சார்ந்த நீர்நிலைகளைப் புனரமைக்கும் பணிகளுக்காகப் பதின்மூன்றாம் நிதிக்குழுவின் மானிய நிதி உதவித் திட்டத்தின்கீழ் ரூ.200 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுச் செயலாக்கத்தில் உள்ளது.
- தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தஞ்சாவூர், திருவாரூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் ஏரிகள் மற்றும் அணைக்கட்டுகளை புனரமைத்தல் மற்றும் ஆற்றுப்படுகை மட்டச்சுவர் கட்டுதல் ஆகிய 6 பணிகளுக்கு ரூ.3.45 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுச் செயலாக்கத்தில் உள்ளது.
- கடலூர் மாவட்டத்தில் உள்ள வெலிங்டன் நீர்த்தேக்கம், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள திருக்கோவிலூர் அணைக்கட்டு மற்றும் குண்டாறு, சித்தாறு, கருப்பாநதித் திட்டங்களின் கால்வாய்கள் மற்றும் மதகுகளைப் பாசனப்பரப்பு மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் ரூ.14.41 கோடி மதிப்பீட்டில் 24,016.7 எக்டேர் ஆயக்கட்டு பயன்பெறும் விதமாகப் புனரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டன.
- சென்னைப் பெருநகர நீர்வழித்தடங்களில் கொட்டப்பட்டுள்ள குப்பைக் கூளங்கள், கழிவுகள், செடி கொடிகள் மற்றும் அனைத்துத் தடங்கல்களை அகற்றும் பணிகள் ரூ.361.73 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டன.
- காவிரி இடது கரையில் வலுவிழந்த கரை, தடுப்புச்சுவர் மற்றும் கான்கீரிட் தளம் வலுப்படுத்தும் திட்டத்திற்கு ரூ.1.60 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுச் செயலாக்கத்தில் உள்ளது.
- திருவள்ளூர் மாவட்டம், பூண்டி சத்தியமூர்த்தி சாகர் நீர்த்தேக்கத்தில் "ஸ்டாப் லாக்" அவசர காலக் கதவுகளை நிறுவும் பணி ரூ.2.06 கோடி செலவில் அனைத்து வகையிலும் முழுமையான அளவில் முடிக்கப்பட்டது.
- பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையத்தின் மூலமாக 2,820 பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு இவ்வாண்டில் 118 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.
- 6 நீர்த்தேக்கங்களில், வண்டல் படிவு குறித்த ஆய்வு மேற்கொள்ள ரூ.35 இலட்சத்திற்குத் தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- புதிய வீராணத்தை மேம்படுத்த ரூ.106.35 கோடி மதிப்பீட்டில் கரைகளைப் பலப்படுத்துதல், கால்வாய்களை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

- ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புக் குழுமத் திட்டத்தின்கீழ் சென்னை மாநகரில் பெரிய வடிகால்களான பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம் – அரும்பாக்கம் வடிகால், கூவம் மற்றும் அடையாறு ஆகியவற்றைச் சீரமைக்கும் பணிகள் ரூ.633.03 கோடி மதிப்பீட்டில் நீர்வள ஆதாரத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- வறட்சி பாதித்த 51 ஒன்றியங்களிலுள்ள 338 மானாவாரி ஏரிகளைச் சீரமைத்துப் புதுப்பித்து, நிலைநிறுத்துவதற்கான (RRR) திட்ட மதிப்பீடு ரூ.220 கோடிக்குத் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட மதிப்பீடுகள் அரசால் அமைக்கப்பட்ட மாநிலத் தொழில் நுட்ப ஆலோசனைக் குழுவினரின் பரிசீலனை மற்றும் பரிந்துரை பெறப்பட்டு மத்திய அரசின் உதவி பெற்றுச் செயல்படுத்தப்படும்.
- திருவள்ளூர் மாவட்டத்தில், ஆரணியாற்றின் ஏ.என்.குப்பம் அணைக்கட்டின் முன் நீர் மற்றும் பின் நீர்ப் பாதைகளின் வெள்ளப்பாதுகாப்பு மற்றும் லட்சுமிபுரம் அணைக்கட்டின் பின் நீர்ப் பாதையிலிருந்து புலிகாட் முகத்துவாரம் வரை வெள்ளப் பாதுகாப்புப் பணிகள் ரூ.12.41 கோடி திட்ட மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதன் மூலம் திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி மற்றும் கும்மிடிப்பூண்டி வட்டங்களிலுள்ள சுமார் 29,382 மக்களும் 30 கிராமங்களும் பாதுகாக்கப்படுகின்றனர்.
- கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் வெள்ளாறு வடிநிலத்தின் வெள்ளப் பாதுகாப்புப் பணிகள் ரூ.164.32 கோடி திட்ட மதிப்பீட்டில் 12 தொகுப்புகளாக முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் சுமார் 4,02,539 மக்கள் மற்றும் 124 கிராமங்கள் பாதுகாக்கப்படுகின்றன.
- கடலூர் மாவட்டத்தில் பண்ருட்டி மற்றும் கடலூர் நகரங்களைப் பெண்ணையாறு, கெடிலம், உப்பனாறு, பரவனாறு மற்றும் தெற்கு மலட்டாற்றின் வெள்ளத்திலிருந்து பாதுகாக்கும் பணி ரூ.68.41 கோடி திட்ட மதிப்பீட்டில் முடிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 74,471 மக்களும் மற்றும் 122 கிராமங்களும் பாதுகாக்கப்படுகின்றன.
- திருவள்ளூர் மாவட்டத்தில் கொசஸ்தலையாற்றில் நாப்பாளையத்திலிருந்து கடல் முகத்துவாரம் வரை வெள்ளப் பாதுகாப்புப் பணிகள் ரூ.14.50 கோடி திட்ட மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் பொன்னேரி வட்டத்தில் உள்ள சுமார் 10,711 மக்கள் மற்றும் 16 கிராமங்கள் பாதுகாக்கப்படுகின்றன.

- தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் ரூ.375.90 கோடி மதிப்பிலான வெள்ளத் தடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் காவேரி டெல்டா கடைமடைப் பகுதிகளில் பருவ நிலை மாறுதலால் ஏற்படக்கூடிய தாக்கங்களைச் சமாளிக்கவும், வடிகால் வசதிகளை மேம்படுத்தவும், வெள்ள மேலாண்மைப் பணிகளுக்காகவும் ஆசிய வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன் ரூ.1,560 கோடி மதிப்பீட்டிலான திட்டம் சுமார் 3 இலட்சம் ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும் விதமாகச் செயல்படுத்தப்படவுள்ளது.
- திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், காவேரியாற்றின் வலதுகரையில் அமைந்துள்ள மேலணைக்கட்டின் முக்கொம்புப் பூங்காவில் ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் செயற்கை நீர்வீழ்ச்சி மற்றும் நீரூற்று அமைக்கபடவுள்ளது.
- இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், பார்த்திபனூர் மதகணை அருகே உள்ள தியாகி இம்மானுவேல் சேகரன் நினைவிடத்திற்கு ரூ.2.74 கோடி மதிப்பீட்டில் இருவழிச் சாலை அமைக்கப்படவுள்ளது.
- திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், வடசென்னை கடற்கரைப் பகுதியில் கடலரிப்பைத் தடுக்க ரூ.58.4 கோடி மதிப்பீட்டில் தூண்டில் வளைவுகள் மற்றும் கடலரிப்புத் தடுப்புக் கற்சுவர் கட்டப்படவுள்ளது.
- சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், லாடநேந்தல் கிராமத்தின் அருகே வைகை ஆற்றின் குறுக்கே ரூ.12.85 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டப்படவுள்ளது.
- ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், காளிங்கராயன் வாய்க்கால் ரூ.50 கோடி மதிப்பீட்டில் சீரமைத்து நவீனப்படுத்தப்படவுள்ளது.
- தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கண்ணாத்தான்குடி மேலையூர் கிராமம் சிங்கநேரி ஏரி ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்படவுள்ளது.
- முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில் தமிழ்நாட்டின் நலனைப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது

விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு விலையில்லா கறவை மாடுகள் மற்றும் ஆடுகள்

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர்
திரு. **டி.கே.எம். சின்னையா** அவர்கள்

- விலையில்லாக் கறவைமாடு வழங்கும் திட்டம் 21 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 2011–2012 ஆம் ஆண்டில், 12,000 பயனாளிகளுக்குக் கறவைமாடுகள் வழங்கப்பட்டுள்ளன.
- விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டம் 31 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 2011–2012ஆம் ஆண்டில், 1,00,000 பயனாளிகளுக்கு மொத்தம் 4,00,000 வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

- மாநிலத் தீவன அபிவிருத்தித் திட்டம் / தீவன அபிவிருத்தி விரைவுத் திட்டத்தின்கீழ் இறவையில் அதிக மகசூல் தரக்கூடிய தீவனப்பயிர் சாகுபடித் திட்டம் 8,000 ஏக்கர் பரப்பில் செயல்படுத்தப்பட்டது. மேலும், 1,930 ஏக்கரில் ரூ.4.10 கோடி செலவில் நீர் தெளிப்பான் கருவிகள் பல்லாண்டுத் தீவனப்பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகளின் நிலங்களில் நிறுவப்பட்டு வருகின்றன.
- காரீஃப் பருவத்திற்கு 10,288 எண்ணிக்கையில் தீவனச் சிறுதளைகளும், ராபி பருவத்திற்கு 8,053 எண்ணிக்கையில் தீவனச் சிறுதளைகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- மாநில உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் கட்டடங்களைப் புதுப்பித்தல், உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல், பழுது பார்த்தல் மற்றும் அறைகலன்கள் வழங்குதல் போன்ற பணிகளுக்காக ரூ.25 கோடி ஒதுக்கப்பட்டு அதன் மூலம் மொத்தம் 428 கால்நடை நிலையங்களில் 90விழுக்காடு வேலைகள் முழுமையடைந்துள்ளன.
- கால்நடை மருத்துவமனை மற்றும் மருந்தகங்களை மேம்படுத்தும் (ESVHD) திட்டத்தின் கீழ் ரூ.8.96 கோடி ஒதுக்கப்பட்டு 24 கால்நடை நிலையங்கள் புதிதாக நிறுவுதல் பணி மற்றும் 90 கால்நடை நிலையங்கள் வலுப்படுத்தல் பணி முடிவடையும் நிலையில் உள்ளன.

- நபார்டு வங்கி மூலம் 360 கால்நடை நிலையங்களுக்குப் புதிய நிரந்தரக் கட்டடம் கட்டவும், 12 கால்நடைப் பண்ணைகளின் மேம்பாட்டிற்காகவும் ரூ.122.24 கோடி ஒப்பளிக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- 843 கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்களை நிரப்ப வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பெயர்ப் பட்டியல் பெறப்பட்டு முதுநிலை மற்றும் இனச் சுழற்சி முறையில் பணி நியமனம் வழங்கும் நிலையில் உள்ளது.

- உறைவிந்துக் குச்சிகளைப் பாதுகாக்கவும், வீரியம் குறையாமல் இருப்பதை உறுதி செய்யவும் திரவ நைட்ரஜன் உற்பத்தி செய்யும் ஆலை தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையில் நிறுவிட ரூ.5.50 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கையில் உள்ளது.

- ஈச்சங்கோட்டை அயலினக் கால்நடைப் பெருக்கப் பண்ணையின் உறைவிந்து உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி அளவினை உயர்த்துவதற்கு அங்கே ஒரு பொலிகாளை தாய் நிலையம் ரூ.8.50 கோடி செலவில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- எருமை வளர்ப்புத் திட்டம் மூலமாக மகளிருக்கு பொருளாதார மேம்பாடு அளிக்கும் திட்டத்தின்கீழ், இதுவரை, 495 பயனாளிகளுக்கு 14 மாவட்டங்களில் ரூ.91.33 இலட்சம் செலவில் கன்றுடன் கூடிய எருமை, அடர் தீவனம் மற்றும் காப்பீடு 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

- வெள்ளாடு வளர்ப்பினை மேம்படுத்தி அதன் மூலம் விலங்கினப் புரதத்தை அதிகரிக்கும் திட்டத்தின்கீழ், ரூ.1.60 கோடி ஒதுக்கீட்டில் 15 மாவட்டங்களில் தலா 4 சுயஉதவிக்குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிலும் 9 நபர்களுக்கு 10 வெள்ளாடுகள், தீவனம், கொட்டகைக் காப்பீடு மற்றும் உபகரணங்கள் போன்றவை 540 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ், இதுவரை ரூ.10.47 கோடி செலவில் 4.78 இலட்சம் கால்நடைகளுக்குச் செயற்கைமுறைக் கருவூட்டலும், 2,672.5 எக்டேரில் தீவனப்பயிர் சாகுபடியும், 843 அசோலா தீவனப்பயிர் வளர்ப்பு மாதிரிப் பயிற்சி வகுப்புகள், 1,793 மலடு நீக்கச் சிகிச்சை முகாம்கள், 4.33 இலட்சம் செம்மறியாடுகள் மற்றும் 1.43 இலட்சம் கிடேரி கன்றுகளுக்குக் குடற்புழு நீக்கம், 3,050 விவசாயிகளுக்குப் பட்டறிவுப் பயணங்கள், 1,031 கலந்தாய்வுக் கூட்டங்கள் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- ரூ.2.31 கோடி ஒதுக்கீட்டில் 385 வட்டங்களில் 5,500 கால்நடைப் பாதுகாப்புத் திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு 6.44 இலட்சம் விவசாயிகளின் 59.28 இலட்சம் கால்நடைகள் பயனடைந்துள்ளன.

❖ சினைப்பருவ ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ் சினைப்பிடிப்புத் திறனை அதிகரிக்கும் வகையில் 10,108 பசுக்கள் தேர்வு செய்யப்பட்டு ரூ.1.04 கோடி செலவில் சினைப்பருவ ஒருங்கிணைப்பு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

❖ கிராமப்புறப் புழக்கடைக் கோழி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், 7 மாவட்டங்களில் 2,100 பயனாளிகளுக்கு 94,500 கோழிக்குஞ்சுகள் ரூ.46.50 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

❖ கோழிகளின் உயிர்க் கொல்லியான கோழிக் கழிச்சல் நோயிலிருந்து பாதுகாப்பு வழங்கும் வகையில் 40 இலட்சம் கோழிகளுக்குக் கோழிக் கழிச்சல் நோய்த் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

❖ கால்நடைகளை நோய்த் தாக்குதலிலிருந்து பாதுகாக்க மொத்தம் ரூ.13.30 கோடி செலவில் 165.52 இலட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசியும், 40 இலட்சம் ஆடுகளுக்கு ஆட்டுக் கொல்லி நோய்த் தடுப்பூசியும், 25.61 இலட்சம் கால்நடைகளுக்கு அடைப்பான் தடுப்பூசியும், 2.84 இலட்சம் கால்நடைகளுக்குச் சப்பை நோய்த் தடுப்பூசியும், 4.8 இலட்சம் கால்நடைகளுக்குத் தொண்டை அடைப்பான் தடுப்பூசியும், 2.68 இலட்சம் ஆடுகளுக்கு ஆட்டம்மைத் தடுப்பூசியும் போடப்பட்டுள்ளன.

❖ மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 8 மாவட்டங்களில் ரூ.77.65 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 59 ஏக்கர் விவசாயிகளின் நிலங்களில் தீவன அபிவிருத்தியும், 935 பயனாளிகளுக்குக் கிரிராஜா கோழிகளும், 30 பயனாளிகளுக்கு வெள்ளாடுகளும், 190 பயனாளிகளுக்குச் செம்மறியாடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

❖ புதிதாகத் தொடங்கி வைக்கப்பட்ட 11 உதவி இயக்குநர் அலுவலகங்களிலும், 11 உதவி இயக்குநர்கள், கண்காணிப்பாளர்கள், உதவியாளர்கள், தட்டச்சர்கள், ஓட்டுனர்கள்,

இரவுக் காவலர்கள் மற்றும் 22 இளநிலை உதவியாளர்கள் பதவி ஏற்படுத்தப்பட்டுப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், 54 தினக்கூலிப் பணியாளர்கள் கால்நடைப் பராமரிப்பு உதவியாளர்களாக முறையான பணியின்கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

❖ திருநெல்வேலியில் ரூ.12.59 கோடி நிதி ஒதுக்கீட்டிலும், தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் ரூ.16.33 கோடி நிதி ஒதுக்கீட்டிலும் புதிதாக இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரிகள் அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

❖ ஒசூரில் பன்னாட்டுத் தரத்தில் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மை நிலையம் அமைத்திட, ஒசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையின் 80 ஏக்கர் நிலத்தைத் தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

❖ தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் பி.டெக் (கோழி உற்பத்தித் தொழில்நுட்பம்), எம்.வி.எஸ்.சி (உயிர்ப்புள்ளியியல்), எம்.எப்.எஸ்.சி. (உயிர்ப்புள்ளியியல்), பி.எச்.டி., (வனவிலங்கு அறிவியல்), எம்.ஃபில் (பருவநிலை மாற்றம் மற்றும் மீன்வளம்), எம்.எஸ்சி (உயிர்த்தகவலியல்), எம்.எஸ்.சி (உயிர்ப்புள்ளியியல்) எம்.டெக் (உணவு பதனிடும் தொழில்நுட்பம்) ஆகிய எட்டுப் புதிய பாடத்திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

❖ தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் கால்நடை மருத்துவர்களை நவீனச் சிகிச்சை முறைகளில் பயிற்றுவிக்கக் கணினிவழி கல்வித் திட்டத்தின் மூலம் எட்டு முதுநிலைப் பட்டயப் படிப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

❖ வளர்ந்து வரும் பால் பண்ணைத் தொழில், கோழிப் பண்ணைத் தொழில் மற்றும் கால்நடை சார்ந்த பிற தொழில் பிரிவுகளில் பணி செய்யத் திறன் பெற்ற பணியாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்யவும், பல்வேறு மட்டங்களில் பள்ளிப் படிப்பை முடித்து மேற்படிப்பைத் தொடர இயலாத மாணவர்களுக்கு வேலை வாய்ப்பை அதிகரிக்கும் வகையில், 18 வகையான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் இந்த ஆண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளன.

❖ நவீன அறிவியல் முறையில் கால்நடைப் பண்ணைத் தொழில்களை மேற்கொள்ளவும், வேலையற்ற இளைஞர்கள் சுய வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொள்ள ஏதுவாகவும் 14 வகை குறுகிய காலப் பல்வேறு பண்ணை சார் பயிற்சித் திட்டங்கள் இந்த ஆண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளன.

❖ கிராமப்புறங்களில் பள்ளிப்படிப்பை முடித்து கால்நடை மருத்துவப் பட்டப்படிப்புப் பயிலும் மாணவர்களுக்கு, கால்நடை மருத்துவப் பாடங்களைத் தமிழிலேயே வழங்கிடக்

கால்நடை மருத்துவத்தின் முதலாம் ஆண்டுப் பாடங்கள் அனைத்தும் முதன் முதலாகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இந்த ஆண்டு வெளியிடப்பட்டுள்ளன.

❖ திண்டுக்கல், தஞ்சாவூர் மற்றும் திருவாரூரில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் மாவட்ட அளவிலான பயிற்சி மையங்களுக்கு நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

❖ தமிழக அரசின் விலையில்லா ஆடு, மாடுகள் வழங்கும் திட்டப்பயனாளிகளுக்கு அறிவியல் முறையில் கறவை மாடு மற்றும் ஆடு வளர்ப்புக் குறித்த பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

❖ தானே புயலால் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டத்தில் கால்நடை வளர்க்கும் விவசாயிகளுக்கு ஏழு டன் கோ 4 பசுந்தீவனம், ஒரு டன் தாது உப்புக் கலவை, 500 கிலோ கறவை மாட்டுத்தீவனம் மற்றும் 100 கிலோ தீவனக்கட்டிகளையும், 2,500 கோழிக் குஞ்சுகளுக்கு வாய்வழித் தடுப்பூசி மருந்துகளும் விலையில்லாமல் வழங்கப்பட்டுள்ளன.

❖ கால்நடைப் பண்ணையாளர்கள், வேலையற்ற இளைஞர்கள் மற்றும் கால்நடை வளர்ப்பில் விருப்பமுள்ளோர்களுக்கென 898 நிலைய மற்றும் புறநிலையப் பயிற்சித்திட்டங்கள் நடத்தப்பட்டு மொத்தம் 60,272 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

❖ இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் வளர்ச்சி நிதி உதவியுடன் ரூ.94.7 இலட்சத்தில் ஒரு புதிய மாணவியர் விடுதி கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்ப நிலையத்தில் கட்டப்பட்டுள்ளது.

❖ தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ்க் “கால்நடை அறிவியல் பல்தொழில்நுட்பப் பயிற்சிகள் மையம்” குறித்த திட்டம் ரூ.1.02 கோடி ஒதுக்கீட்டில் 24.03.2012 அன்று தொடங்கப்பட்டுள்ளது.

❖ தமிழக அரசின் “உழவர் பெருவிழா” நிகழ்ச்சிகளில் மாவட்டப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் வாயிலாக இதுவரை 161 கிராம மக்களுக்குத் தேவைப்படும் கால்நடைப் பண்ணைத் தொழில் குறித்த தொழில்நுட்பச் சேவைகளை அளித்துள்ளது.

ஆராய்ச்சித் திட்ட சாதனைகள்

❖ கோழிகளைத் தாக்கும் நுண்ணுயிரிகளுக்கு எதிரான மேம்படுத்தப்பட்ட மற்றும் ஊக்குவிக்கப்பட்ட தடுப்பூசிகள் தயாரித்தல் எனும் திட்டத்தினை ரூ.2.50 கோடியில் கால்நடை உயிர்த்தொழில்நுட்பவியலின் உயராய்வுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்திட புது தில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் அனுமதி வழங்கியுள்ளது.

❖ ரூ.36.20 இலட்சத்தில் நன்னீர் மீன் வளர்ப்பு (விறால் உற்பத்தி); ரூ.95.25 இலட்சத்தில் பால் மற்றும் பால் பொருள்கள் பதப்படுத்துதல்; ரூ.95 இலட்சத்தில் அவசரச் சிகிச்சைப் பிரிவு மற்றும் ரூ.50 இலட்சத்தில் இறைச்சிக் கோழி மற்றும் முட்டைக் கோழி உற்பத்தி எனும் நான்கு திட்டங்களைச் செயலாக்கக் கல்வித் திட்டத்தின்கீழ் செயல்படுத்திட புது தில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் அனுமதி வழங்கியுள்ளது.

❖ ரூ.2.24 கோடியில் செம்மறி ஆடுகளின் இனப்பெருக்க வளத்தைப் பெருக்குவதற்கான உயிர்த் தொழில்நுட்ப மையத்தினை உருவாக்குவதற்கென மத்திய அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை அனுமதி வழங்கியுள்ளது.

❖ தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.1.42 கோடி நிதியுதவியிலான "மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான வாழ்வாதாரத் தொழில் பயிற்சி மையம் உருவாக்குதல்" என்ற புதிய திட்டம், 2012ஆம் ஆண்டிற்குத் தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், தூத்துக்குடி மீன்வளக் கல்லூரியில் ஒரு வாழ்வாதாரத் தொழில் பயிற்சி மையம் நிறுவப்படும்.

❖ புதுதில்லி அறிவியல் தொழில்நுட்பத் துறையின் அறிவியலுக்கான சமபங்கு, மேம்பாடு மற்றும் வளர்ச்சிப் பிரிவு, ரூ.8.46 இலட்ச நிதியுதவியிலான "மதிப்புக் கூட்டலில் உள்நாட்டு மீன் பிடிப்போரின் மேம்பாடு" குறித்த புதிய திட்டத்தை இரண்டு ஆண்டுக் கால அளவிற்குத் தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மீன் பதப்படுத்துதல் தொழில்நுட்பத் துறைக்கு வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், நன்னீர் மீன்களின் மதிப்புக் கூட்டலில் சாதனைத் தொழில் முனைவோர்களை உருவாக்குவதாகும்.

❖ பல்கலைக்கழகம் பொங்கல் பண்டிகையை ஒட்டிக் 'கால்நடை மற்றும் மீன்வள வார'க் கொண்டாட்டங்களைத் தமிழகத்தின் அனைத்து மையங்கள் மூலமாகவும், கண்காட்சி, தொழில் நுட்பக் கருத்தரங்குகள், கால்நடைச் சிகிச்சை முகாம்கள், சிறப்புப் பயிற்சிகள் ஏற்பாடு செய்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது.

❖ மாநிலத்தின் பல பகுதிகளிலும் கால்நடைத் தொழில் நுட்ப மண்டலக் கண்காட்சிகள் நடத்த முடிவு செய்யப்பட்டு, முதலாவது பல்கலைக்கழக மண்டலக் கண்காட்சி ஸ்ரீரங்கத்தில் 24.02.2012 முதல் 26.02.2012 வரை நடத்தப்பட்டது.

❖ தமிழகத்தின் கால்நடைப் பண்ணையாளர்கள் மற்றும் மீனவர்களுக்குப் பல்கலைக்கழகத்தின் பயிற்சி மையங்கள் மூலமாகப் பல்வேறு தலைப்புகளில் 898 நிலைய மற்றும் களப்பயிற்சிகள் நடத்தப்பட்டதன் மூலம் 60,273 பயனாளர்கள் நவீனத் தொழில் நுட்பங்களைப் பற்றிய விழிப்புணர்வு பெற்றனர்.

தொழில் துறையில் புதுயுகம்

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்

திரு. **பி. தங்கமணி** அவர்கள்

❖ அசோக் லேலண்ட்–நிஸான், டெய்ம்லர், இந்தியா யமஹா மோட்டார் லிமிடெட், எய்சர் லிமிடெட் மற்றும் பிலிப்ஸ் கார்பன் பிளாக் லிமிடெட் ஆகிய நிறுவனங்களுடன் 14.05.2012 அன்று ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இத்திட்டங்களின் மொத்த முதலீடு ரூ.5,700 கோடியாகும். இதன்மூலம் 9,500 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும்.

❖ கொச்சி–பெங்களூரு குழாய் தொடரமைப்புத் திட்டத்தின் உள்கட்கட்டமைப்பினை ரூ.1,000 கோடி முதலீட்டில் நிறுவவும், சேலத்திலிருந்து கடலூர் வரை ரூ.500 கோடி முதலீட்டில் குழாய் தொடரமைப்பினைச் செயற்படுத்தவும் மிதக்கும் திரவநிலை எரிவாயு முனையம் ஒன்றினை ரூ.2,500 கோடி முதலீட்டில் தென்மாவட்டக் கடலோரப் பகுதியில் உருவாக்கவும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் கெயில் நிறுவனம் 10.05.2012 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டன. இத்திட்டத்தின்மூலம் அடுத்த ஐந்தாண்டுகளில் ரூ.10,000 கோடி முதலீடு ஈர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- டி.வி.எஸ். நிறுவனம் ரூ.770 கோடி முதலீட்டில் ஒசூரில் உள்ள தனது நிறுவனத்தை விரிவாக்கம் செய்ய முடிவெடுத்துள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாகவுள்ளது.
- தமிழக அரசு எடுத்துவரும் தொடர் முயற்சிகளின் விளைவாக 28 தொழில் முன்னணி நிறுவனங்கள் மொத்தம் சுமார் ரூ.36,000 கோடி அளவிற்கு முதலீடுகள் செய்ய முன்வந்துள்ளன.
- ஃபோர்டு இந்தியா நிறுவனம் தமிழ்நாட்டில் ஏற்கெனவே முதலீடு செய்யப்பட்ட ரூ.4,500 கோடி முதலீடு தவிர, மேலும் ரூ.750 கோடி முதலீடு செய்வதாக உறுதியளித்துள்ளது. இப்புதிய முதலீட்டினால் கூடுதலாக 400 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு உருவாகும்.
- தமிழ்நாட்டில் முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ள ஜப்பான் நாட்டு நிறுவனங்களுக்கு ஆதரவு அளிக்கும்பொருட்டு, வர்த்தக ஆதரவு மையம் ஒன்றினைச் சென்னையில் அமைப்பதற்காக, தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி மையத்திற்கும் ஜப்பான் வெளி வர்த்தக அமைப்புக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் 10.01.2012 அன்று கையெழுத்தாகியது.

❖ சிங்கப்பூர் நாட்டைச் சார்ந்த அசெண்டாஸ் நிறுவனமும் ஜப்பான் நாட்டைச் சார்ந்த இரு குழு நிறுவனங்களும் இணைந்து சென்னைக்கு அருகில் பழைய மகாபலிபுரம் சாலையில் ஒருங்கிணைந்த தொழில் நகரியம் ஒன்றினை 1,500 ஏக்கர் பரப்பளவில், சுமார் 3,500 கோடி ரூபாய் முதலீட்டில், 5 ஆண்டுக் கால அளவுக்குள் அமைத்திட முடிவு செய்துள்ளன. இந்தத் தொழில் நகரியத்தில் அமையவுள்ள தயாரிப்புப் பிரிவு மண்டலம் (Manufacturing Zone) மூலமாகக் கூடுதலாக ரூ.15,000 கோடி முதலீடும், சுமார் 40,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். இதற்காக, தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி மையத்திற்கும், அசெண்டாஸ் மற்றும் ஜப்பானியக் குழு நிறுவனங்களுக்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியது.

❖ ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை மொத்தம் ரூ.165 கோடி செலவில் நவீனமயமாக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதேபோன்று அரியலூர் சிமெண்ட் ஆலையில் ரூ.350 கோடி செலவில் ஆண்டொன்றுக்கான உற்பத்தித் திறனை 5 இலட்சம் டன்னிலிருந்து 15 இலட்சம் டன்னாக அதிகரிப்பது தொடர்பாக திட்ட மேலாண்மை ஆலோசகரை நியமிப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

❖ ரூ.200 கோடி மூலதனத்தில் நாளொன்றுக்கு 100 டன் மெல்லிழைக் காகிதம் (Tissue Paper) தயாரிக்கும் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் புதிய திட்டத்திற்கு அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மூலமாக சுண்ணாம்புச் சேறு மற்றும் சாம்பல் துகள்கள் போன்ற வீணாகும் பொருள்களைக் கொண்டு நாளொன்றுக்கு 600 மெட்ரிக் டன் சிமெண்ட் தயாரிக்கும் திட்டத்தை ரூ.67.46 கோடி முதலீட்டில் செயல்படுத்த அரசின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

❖ திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில் நொய்யல் ஆற்றுப் பாசனப் பகுதியில் சாயக் கழிவு நீரினால் மாசுபட்ட நிலங்களில் உவர்தன்மையைத் தாங்கி வளரக்கூடிய கூழ்மர வகைகளை 1,000 ஏக்கர் பரப்பில் பயிரிட, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திட்டம் நல்லமுறையில் செயற்படும்போது, ஒவ்வொரு ஆண்டும் 3,000 முதல் 5,000 ஏக்கர் வரை விரிவாக்கம் செய்யப்படும். இத்திட்டத்தில் பங்கு கொள்ளும் விவசாயிகளுக்குத் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் ஏக்கர் ஒன்றுக்கு, ஆண்டொன்றுக்கு ரூ.4,000/– என்ற குத்தகைத் தொகையை 6 ஆண்டுகளுக்கு வழங்கவுள்ளது.



- டாமின் கிரானைட் மணலி தொழிற்சாலையில் 27.12.2011ஆம் தேதி கிரானைட் நினைவுச் சின்னங்கள் உற்பத்தி தொடங்கி வைக்கப்பட்டது. திறந்த வெளி விலைப்புள்ளி மூலம் இத்தொழிலில் அனுபவமுள்ள நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்து ஏற்கெனவே இருந்த இயந்திரங்களைக் கொண்டு கிரானைட் நினைவுச் சின்னங்களைத் தயாரித்து வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யவும் அந்நியச் செலவாணியை ஈட்டவும் வழிவகை செய்யப்பட்டது.
- சென்னை மணலியில் உள்ள டாமின் கிரானைட்ஸ் தொழிற்சாலையினை ரூ.12 கோடி மதிப்பீட்டில் நவீனமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- கரும்பிற்கான ஆதாய விலை டன் ஒன்றிற்கு ரூ.2,000/– என்று இருந்ததை 2011–12ஆம் ஆண்டிற்கான கரும்பு அரைவைப் பருவத்திற்கு டன் ஒன்றிற்கு ரூ.2,100/– (போக்குவரத்துக் கூலி உட்பட) என உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.
- தோஷிபா–ஜேஎஸ்டபிள்யூ நிறுவனத்தின் 1,000 மெகா வாட் உற்பத்தித்திறன் கொண்ட பிறழ்நிலை நீராவி டர்பைன் ஜெனரேட்டர் கட்டமைப்பு ஒன்று மணலியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 12.02.2012 இல் தொடங்கி வைக்கப்பட்டது. இந்நிறுவனம் இதுவரை ரூ.650 கோடி முதலீடு செய்து, 370 நபர்களைப் பணியமர்த்தியுள்ளது.

- தமிழகம் ஒட்டுமொத்த வளர்ச்சியை அடையவேண்டும் என்பதற்காக, அடுத்த 10 ஆண்டுகளுக்குள் இந்தியாவில் எதிர்பார்க்கப்படுகின்ற மொத்த உற்பத்தி வளர்ச்சியைக் காட்டிலும் 20 சதவீதம் அதிகமாக, அதாவது, ஆண்டொன்றுக்கான மாநில மொத்த வளர்ச்சி 11 சதவீதமாக அல்லது அதற்கும் மேலாக இருக்க வேண்டும் என்பதை நோக்கில் கொண்டு “தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023” ஆவணம் 22.03.2012 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.
- ஒரகடத்தில் ரூ.4,000 கோடி மதிப்பீட்டில் டெய்ம்லர் இந்திய நிறுவனத்தின் வர்த்தக வாகனங்கள் உற்பத்தித் தொழிற்சாலை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 18.04.2012 அன்று துவக்கப்பட்டது. இதுவரை இந்நிறுவனம் ரூ.2,500 கோடி முதலீடு செய்துள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம்

- இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர், சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தலாம் என முடிவு செய்தது.
- இத்திட்டத்தின் கீழ் வண்ணாரப்பேட்டையிலிருந்து சென்னை விமான நிலையம் வரையில் வழித்தடம் –1ம் (23 கி.மீ.) சென்னை சென்ட்ரலிலிருந்து புனித தோமையார்மலை வரையில் வழித்தடம் –2ம் (22 கி.மீ) தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- உயர்த்தப்பட்ட வழித்தடங்கள் மற்றும் மெட்ரோ நிலையங்களின் கட்டுமானப் பணிகள் 60 சதவீதமும், நிலத்தடி மெட்ரோ நிலையங்கள் மற்றும் தொடர்புடைய சுரங்கப்பாதைகளின் கட்டுமானப் பணிகள் 20 சதவீதமும் முடிவுற்றுள்ளன.
- இரயில் பெட்டிகள், சமிக்ஞை மற்றும் தொலைத்தொடர்பு உள்ளிட்ட முக்கிய அமைப்புகளின் வடிவமைப்புப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

முனைப்பான முன்னேற்றம் பெறும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர்
டாக்டர் **எஸ். சுந்தரராஜ்** அவர்கள்

- மூடப்பட்டிருந்த ஈரோடு, தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை 10.6.2011–இல் திறக்கப்பட்டு உற்பத்தியைத் தொடங்கியது.
- திருப்பூர் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படும் மாசுடன் கூடிய சாயக்கழிவு நீரைச் சுத்திகரிப்பு செய்வதற்கு அனைத்துச் சுத்திகரிப்பு நிலையங்களுக்கும் ரூ.200 கோடி வட்டியில்லாக் கடனாக அளிக்கப்பட்டது.

- தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கும் வகையில், பொங்கல் 2012 – விலையில்லா வேட்டி, சேலைத் திட்டத்தின் கீழ்த் தேவைப்படும் 170.84 இலட்சம் சேலைகள் மற்றும் 169.75 இலட்சம் வேட்டிகள் ரூ.350 கோடி மதிப்பில் தயாரிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.
- ரூ.9.64 கோடி கூடுதல் செலவில் நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் நெசவுக் கூலியினை வேட்டி ஒன்றுக்கு ரூ.16/–லிருந்து ரூ.18.40/– ஆகவும், சேலை ஒன்றுக்கு ரூ.28.16/–லிருந்து ரூ.31.68/– ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் மாத ஓய்வூதியம் ரூ.400/– லிருந்து ரூ.1,000/–ஆக உயர்த்தப்பட்டு 18,646 பேர்களும், குடும்ப மாத ஓய்வூதியம் ரூ.550/–லிருந்து ரூ.1,000/–ஆக உயர்த்தப்பட்டு 1,549 பேர்களும் பயனடையும் வகையில் ஆண்டிற்கு ரூ.19.11 கோடி செலவிடப்படும்.
- ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காத் திட்டத்தின் கீழ்த் தமிழகத்தில் அமைக்கப்பட்டு வரும் அனைத்து ஜவுளிப் பூங்காக்களுக்கும் அவற்றின் திட்டத் தொகையில் 9 விழுக்காடு அளவிற்கு ரூ.9 கோடிக்கு மிகாமல் மாநில அரசின் நிதியுதவி அளிக்கப்படுகிறது.
- கரூர் ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு மாநில அரசின் நிதியுதவியாக ரூ.9 கோடி வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.
- பள்ளி மாணவ–மாணவியருக்கு விலையில்லாச் சீருடைகள் வழங்கும் திட்டத்தின் கீழ் கோ–ஆப்டெக்ஸ் மூலம் 137.27 இலட்சம் மீட்டர் சீருடைத்துணிகள் வழங்கப்பட்டன.
- முதியோர் ஓய்வூதியம் பெறுவோர்க்கு விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் 2011ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகைக்கென 16.28 இலட்சம் சேலைகளும் 5.50 இலட்சம் வேட்டிகளும் வழங்கப்பட்டன. 2012ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கென 17.13 இலட்சம் சேலைகளும் 5.61 இலட்சம் வேட்டிகளும் வழங்கப்பட்டன.
- கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் துவக்க தினத்தை முன்னிட்டு 17.03.2012 முதல் 02.04.2012 வரை "2 வாங்கினால் 1 இலவசம்" என்ற திட்டத்தினை முதன்முதலாக நடைமுறைப்படுத்தி, இதுவரை இல்லாத அளவிற்கு ரூ.34.84 கோடி அளவிற்குச் சில்லறை விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- இந்தியாமுழுவதும் உள்ள கோ–ஆப்டெக்ஸ்சின் 203 விற்பனை நிலையங்கள் மூலம், இதுவரை இல்லாத வகையில் ரூ.217.91 கோடி அளவிற்குச் சில்லறை விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- வாடிக்கையாளர்கள் வசதியுடன் கூடிய சூழலில் துணி வகைகளை வாங்கும் நோக்கில், பெருநகரங்களாகிய சென்னை, (பாண்டிபஜார்) (பன்னாட்டு ஏற்றுமதி இரகங்கள் விற்பனை நிலையம்), மும்பை (தாதர்), பெங்களூரு (மல்லேஸ்வரம்) மற்றும் ஈரோடு (நேதாஜி வீதி) ஆகிய இடங்களில் நவீனமயமாக்கப்பட்ட குளிர்சாதன வசதியுடன் கூடிய விற்பனை நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டன.

கதர் மற்றும் கிராமத்தொழில்கள் உற்பத்தி அதிகரிப்பு

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத்தொழில்கள் துறை அமைச்சர்

திரு. **பூ. செந்தூர்பாண்டியன்** அவர்கள்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

- கதர் பருத்தி, பாலிவஸ்திரா மற்றும் பட்டு உற்பத்தி ரூ.5.04 கோடி மதிப்பிலும், கிராமத் தொழில்கள் உற்பத்தி ரூ.11.39 கோடி மதிப்பிலும் செய்யப்பட்டுள்ளது.
- கதர் விற்பனை ரூ.14 கோடி மதிப்பீட்டிலும், கிராமத் தொழில்கள் விற்பனை ரூ.14.16 கோடி மதிப்பீட்டிலும் செய்யப்பட்டுள்ளது.
- அலுவலர்களுக்கு 6ஆவது ஊதியக் குழுவின் 3ஆவது தவணை நிலுவைத் தொகை ரூ.3.97 கோடிக்கு அனுமதி ஆணையும், நீதிமன்றத் தீர்ப்பின்படி 20 கைமுறைக் காகித அலகுத் தொழிலாளர்களுக்கு ரூ.6 இலட்சமும் அனுமதித்து ஆணை வழங்கப்பட்டது. 71 சோப்பு அலகுத் தொழிலாளர்களுக்குக் காலமுறை ஊதிய விகிதம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- பனைத் தொழிலாளர்கள் நலனுக்காகவும், பனைப் பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகரிக்கவும், பனைப்பொருட்களுக்குப் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திடவும் தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியத்திற்கு ரூ.1 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.
- 13,238 பனைத் தொழிலாளர்களுக்கு பதநீர் இறக்கும் உரிமம் அளிக்கப்பட்டுள்ளது.

பட்டு வளர்ச்சித் துறை

- பட்டு விவசாயத்திற்குச் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க வழங்கப்பட்டு வந்த மானியம் 75 சதவீதத்திலிருந்து 100 சதவீதமாக அதிகரிக்கப்பட்டு 1,000 பட்டு விவசாயிகள் பயனடைகிறார்கள்.

- மல்பரி சாகுபடி, சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவுதல், புழுவளர்ப்பு மனை அமைத்தல், புழுவளர்ப்புத் தளவாடங்கள் வழங்குதல், பட்டு பல்நோக்கு மையம் அமைத்தல் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு மையம் அமைத்தல் போன்றவைக்காக 12,404 விவசாயிகளுக்குத் திட்ட உதவிகளாக ரூ.13.48 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- பட்டுக் கூடு உற்பத்தி 8,157 மெட்ரிக் டன்னிலிருந்து 9,685.241 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது.

- காஞ்சிபுரம் அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகத்தில் 75.922 மெட்ரிக் டன்னாக இருந்த கச்சாப்பட்டு வர்த்தகம் 81.378 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது.

- 2010–11இல் ரூ.25.22 கோடியாக இருந்த பூம்புகார் நிறுவன விற்பனை 2011–12ஆம் ஆண்டில் ரூ.27.50 கோடியாக உயர்ந்துள்ளது.

- தமிழ்நாட்டின் 15 முக்கிய கைத்திறத் தொழில்களுக்குப் பூம்புகார் மாவட்டக் கைத்திறன் விருது 2011–12இல் புதிதாக உருவாக்கப்பட்டு 15 பெண்கள் உள்பட 75 பேருக்கு தலா ரூ.5,000 வழங்கப்பட்டது.

- பூம்புகார் கண்காட்சிகள் 2011–2012இல் 180 இடங்களில் நடத்தப்பட்டன.

- பூம்புகார் நிறுவனம், 2011–12ஆம் ஆண்டில் (தணிக்கை செய்யப்படாத நிலை) ரூ.64 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

- பூம்புகார் கழகம் தன் கைவினைஞர்களுக்கு 100 விழுக்காடு அளவிற்கு ஊதிய உயர்வு அளித்துள்ளது. 90 நபர்கள் பயனடைந்துள்ளனர்; உற்பத்தி அதிகரித்துள்ளது.

- புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட "கைவினைஞர் தொழில் முனைவராகிறார்" திட்டத்தின் கீழ் 130 விண்ணப்பங்கள் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு, கடன் வழங்க அனுப்பப்பட்டு கடன் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

- சென்னையில் ரூ.50 இலட்சம் செலவில் கைத்திறன் அருங்காட்சியகம் கட்டப்பட்டு வருகிறது.

சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகள் மேம்பாடு

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்
திருமதி. **எஸ். கோகுல இந்திரா** அவர்கள்

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் சுற்றுலாவை மேம்படுத்த கீழ்க்கண்ட புதிய திட்டங்களை அறிவித்துள்ளார்கள். அனைத்துச் சுற்றுலா வசதிகளையும் ஒரே இடத்தில் வழங்கும் சுற்றுலாச் சிறப்புப் பூங்காக்கள் ஏழு மாவட்டங்களில் ஊரகச் சுற்றுலாத் தொகுப்புகள்/தமிழ்நாட்டில் நான்கு சுற்றுலாச் சுற்றுகளை மேம்படுத்துதல்/திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம்/ சாலையோர வசதிகள்/சுகாதாரக் கழிப்பறை விழிப்புணர்வு/கடல் வழிச் சுற்றுலா, வான்வழிச் சுற்றுலா மற்றும் இதர சுற்றுலாக்களை மேம்படுத்தும் திட்டங்கள் செயற்படுத்தப்படும்.
- கிழக்குக் கடற்கரைச் சாலை மற்றும் தென்மாவட்டங்களில் சுற்றுலாத் தலங்களை அழகுபடுத்துதல் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டிற்காக சிறப்புச் சுற்றுலா திட்டம், ரூ.500 கோடி மதிப்பீட்டில், ஆசிய வளர்ச்சி வங்கிக் கடன் உதவியுடன் செயற்படுத்தப்படும். இச்சிறப்புத் திட்டம் ஒவ்வொரு கட்டமாக 2012–2017 ஆகிய ஐந்தாண்டுக் காலத்தில் முழுமையாக நிறைவேற்றப்படும். திட்டப்பணிகளுக்கான ஒப்பந்தம் 2.4.2012 அன்று ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் தமிழக அரசிடையே கையெழுத்திடப்பட்டது.
- தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை தயாரிப்பதற்காகத் தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படைக் கட்டமைப்பு நிதிச் சேவைகள் நிறுவனத்தை ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளது.
- ஸ்ரீரங்கம், மன்னார்குடி, கொல்லிமலை, ஸ்ரீவாஞ்சியம், ஏலாக்குறிச்சி, திருச்சுழி, திருக்கோஷ்டியூர், சிவகங்கை, மணமேல்குடி, ஆய்குடி, தூத்துக்குடி, இருக்கன்குடி, செட்டிநாடு, இராமேஸ்வரம், திருக்கடையூர் ஆகிய 15 இடங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.11.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- சுற்றுலாச் சாலை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.10 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு தூத்துக்குடி, கோயம்புத்தூர், ஈரோடு, தருமபுரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், கடலூர்,

காஞ்சிபுரம், விருதுநகர், சிவகங்கை ஆகிய பத்து மாவட்டங்களிலுள்ள சுற்றுலாத் தலங்களில் சாலை மேம்பாட்டுப் பணிகள் மாநில நிதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

❖ மத்திய அரசு நிதி உதவியுடன், ஜவ்வாது மலை, தஞ்சாவூர், ஏற்காடு, குற்றாலம், சென்னை (இசைக்கல்லூரி), முட்டுக்காடு, சமண புனிதத்தலங்கள் ஆகிய ஏழு சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ரூ. 23.82 கோடி ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளன.

❖ கல்லணை, வைகை அணை, திருவானைக்காவல், ஜேடர்பாளையம் ஆகிய பகுதிகளின் மேம்பாட்டிற்காக மத்திய அரசு முதல் தவணை நிதியாக ரூ.13.45 கோடி விடுவித்துள்ளது.

❖ ஸ்ரீவில்லிபுத்தூர், பவானிசாகர், கோயம்புத்தூர், வால்பாறை, ஆழியாறு, டாப்ஸ்லிப், மதுரை, ஸ்ரீரங்கம், மலையடிப்பட்டி, கரைவெட்டி ஆகிய பகுதிகளில் சுற்றுலா மேம்பாட்டிற்காக, மத்திய அரசு நிதி ஒப்பளிப்புக் கோரி, இந்தியச் சுற்றுலா அமைச்சகத்திற்கு ரூ.34.60 கோடிக்குக் கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

❖ லண்டன் நகரில் நடைபெற்ற உலக சுற்றுலாச் சந்தை 2011, பெர்லின் நகரில் நடைபெற்ற சர்வதேசச் சுற்றுலாக் கண்காட்சி 2012 ஆகிய சர்வதேசச் சுற்றுலா விழாக்களில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை பங்கேற்று, சுற்றுலாப் பயணிகளுக்குத் தமிழ்நாடு சுற்றுலா குறித்த புதிய ஆவணப் படம், "பென் டிரைவ்" வடிவில் வழங்கப்பட்டது.

❖ தமிழ்நாட்டில் மருத்துவச் சுற்றுலா, நலவாழ்வுச் சுற்றுலா ஆகியவற்றின் மேம்பாட்டிற்காக மைய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

❖ நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடியில் புதுப்பிக்கப்பட்டுள்ள டென்மார்க் ஆளுநர் மாளிகை பராமரிப்பு மற்றும் நிதி ஆதாரங்களை நிர்வகிக்க அறங்காவலர் குழு உருவாக்கப்பட்டுள்ளது.

❖ 2012–2013இல் சுற்றுலாத் துறைக்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிப்பதற்காகவும், ஊடக ஆலோசனைக்காகவும் ஆலோசகரைத் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

❖ தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்குப் பின்வரும் பணிகளுக்கான ஆலோசனை அமைப்பாக தமிழ்நாடு நகர்ப்புற கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது.

(i) தமிழ்நாடு சுற்றுலா வரைவு கொள்கை தயாரித்தல்

(ii) தமிழ்நாடு சுற்றுலாத் தொலைநோக்குத் திட்டம் தயாரித்தல்

(iii) கிழக்குக் கடற்கரைச் சாலையைச் சிறப்பு சுற்றுலாப் பகுதியாக மேம்படுத்தத் திட்டம் தயாரித்தல்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

❖ ஆடி மாதம் 108 அம்மன் திருக்கோவில்களைத் தரிசிக்கும் வகையில் ஆன்மிகச் சுற்றுலாத் திட்டம் 18.7.2011இல் தொடங்கப்பட்டது.

❖ மதுரை நாகனா குளத்தில் படகு சவாரி தொடங்கப்பட்டது.

❖ முதலியார் குப்பம் படகுக் குழாமில் 32 பேர் அமரக்கூடிய சொகுசுப் படகு சவாரி புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளது.

❖ பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதமாக பின்வரும் 10 சுற்றுலாப் பயணத்திட்டங்கள் 2012–2013ஆம் ஆண்டில் புதிதாகத் தொடங்கப்பட உள்ளன.

அ) நகரத்தார் கோவில்கள் சுற்றுலா.

ஆ) காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட திவ்யதேசக் கோவில்கள் சுற்றுலா.

இ) திருக்கடையூர் கோவில் சுற்றுலா.

ஈ) திருவுடை அம்மன், வடிவுடை அம்மன், கொடியிடை அம்மன் கோவில்கள் சுற்றுலா.

உ) மதுரை மாநகரில் உள்ள கோவில்கள் சுற்றுலா.

ஊ) திருச்சி மாநகரில் உள்ள கோவில்கள் சுற்றுலா.

எ) குற்றாலத்தைச் சுற்றியுள்ள கோவில்கள் சுற்றுலா.

ஏ) ஏலகிரி மலைச் சுற்றுலா.

ஐ) கொல்லி மலைச் சுற்றுலா.

ஒ) சுதந்திரப் போராட்டத் தலங்கள் சுற்றுலா

தூய்மையான சுற்றுச்சூழல் பேண புதிய முயற்சிகள்

மாண்புமிகு சுற்றுச்சூழல்துறை அமைச்சர்
திரு. **பி.வி.ரமணா** அவர்கள்

சுற்றுச்சூழல் மற்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்

- பிளாஸ்டிக் குவியல்களைச் சேகரிக்கவும், தூளாக்கும் இயந்திரங்களுடன் சேகரிப்பு மையங்கள் அமைக்கவும் நகராட்சிகளுக்கு ரூ.80 இலட்சம், பேரூராட்சிகளுக்கு ரூ.1.20 கோடி, ஊராட்சிகளுக்கு ரூ.80 இலட்சம் மற்றும் சென்னை மாநகராட்சிக்கு ரூ.1.20 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.
- பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு சாலைகளைச் சீரமைக்க நகராட்சிகளுக்கு ரூ.13.89 கோடி, பேரூராட்சிகளுக்கு ரூ.18 கோடி, ஊராட்சிகளுக்கு ரூ. 9 கோடி மற்றும் சென்னை மாநகராட்சிக்கு ரூ.9.11 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 446.50 கி.மீ தரமான பிளாஸ்டிக் சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.
- சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்த ரூ. 32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மக்கிப் போகாத பிளாஸ்டிக் பொருள்களை மக்கள் பயன்படுத்துவதைத் தடுப்பது பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த சுற்றுச்சூழல் துறைக்கு ரூ.50 இலட்சமும் உள்ளாட்சிகளுக்கு ரூ. 1 கோடியும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

- மாசுக் கட்டுப்பாடு ஒப்புதலுக்காக இணைய தளம் மூலம் 274 தொழிற்சாலைகள் ஒப்புதலுக்காக விண்ணப்பித்துள்ளன.
- திருப்பூரில் 20 பொது சுத்திகரிப்பு நிலையங்களில் கழிவுநீர் வெளியேறுவதில் பூஜ்ய நிலையினை உறுதி செய்து இயக்குவதற்காக சாயப்பட்டறைகளுக்கு ரூ.200 கோடி வட்டியில்லாக் கடன் அனுமதிக்கப்பட்டுள்ளது. 18 பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ரூ.179.34 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- புதிய தொழில் நுட்பத்துடன் கூடிய 11 பொதுச் சுத்திகரிப்பு நிலையங்களைச் சோதனை அடிப்படையில் செயற்பட அனுமதித்ததால், கடந்த 2011 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் உயர்நீதிமன்ற ஆணைப்படி மூடப்பட்ட 315 சாயப்பட்டறைகள் சோதனை அடிப்படையில் செயற்படத் துவங்கியுள்ளன.
- திருப்பூர் சாயப்பட்டறை கழிவுகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, நொய்யல் ஆற்றுப்பாசன ஆயக்கட்டுதாரர்கள் பாதுகாப்புச் சங்கத்தின் மூலம் இழப்பீடு வழங்குவதற்கு ஏதுவாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு முன்பணமாக ரூ.75 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- கடந்த 2011 ஜனவரியில் 5600 மி.கி/லி. ஆக நீரில் கலந்திருந்த திடப்பொருட்களின் அளவு சுத்திகரிப்பு இல்லாத சாயப்பட்டறைகள் மூடப்பட்டதால் 2100–2300 மி.கி/லி. ஆகக் குறைந்துள்ளது.
- நொய்யல் ஆறு மற்றும் காளிங்கராயன் வாய்க்கால் நீரின் தரத்தினைத் தொடர்ந்து கண்காணிக்க ரூ.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.
- கரூர் மாவட்டத்தில் அமராவதி ஆற்றில் மாசினை ஏற்படுத்திய 451 சாயப்பட்டறைகள் மற்றும் ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் மாசினை ஏற்படுத்திய 483 சாயப்பட்டறைகள் மூடப்பட்டுள்ளன. கழிவுநீர் வெளியேற்றுவதில் பூஜ்ய நிலை உள்ள தொழிற்சாலைகள் மட்டும் இயங்க அனுமதிக்கப்படுகின்றன.
- வேலூர் மாவட்டத்திலுள்ள தோல் பதனிடும் நிலையங்களில் கழிவு நீர் வெளியேற்றத்தில் பூஜ்யநிலையை எய்த தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ மாணவியரின் கல்வி மேம்பாட்டுக்காகக் கூடுதல் நிதி உதவி

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்

திரு. **ந. சுப்ரமணியன்** அவர்கள்

- 1,059 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் கட்டடங்கள் பழுது பார்த்தல் / அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல் மற்றும் கூடுதல் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல் போன்றவைகளுக்காக ரூ.76.33 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- சுய தொழில் தொடங்கும் நபர்களுக்கு தாட்கோ மூலம் வழங்கப்படும் திட்ட அலகுத் தொகை ரூ.7.50 இலட்சம் என உயர்த்தி அதில் 30 விழுக்காடு அல்லது ரூ.2.25 இலட்சம் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படுகிறது.
- ஆதிதிராவிடர் தொழில் முனைவோரை ஊக்குவித்து உயர்த்துவதற்கு கலந்தாலோசனை மையம் (counselling centre) ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- வாடகைக் கட்டடங்களில் இயங்கும் 93 விடுதிகளில், 42 விடுதிகள் கட்டும் பணி ரூ.30 கோடி செலவில் துவங்கப்பட்டுள்ளது. 7 விடுதிகளுக்குப் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு இனங்களின் கீழ் பழைய கட்டடத்தை இடித்துப் புதிய கட்டடம் கட்டும் பணி துவங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 44 விடுதிகள் ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் கட்டப்படவுள்ளன.
- ஆதிதிராவிடர் பள்ளி மாணவ மாணவியருக்கு வழங்கப்படும் மாத உணவுப்படி ரூ.650 ஆகவும், அதே போன்று கல்லூரி மாணவ மாணவியருக்கு ரூ.750 ஆகவும், உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- 2011–2012இல் 8 ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளிகளும், 8 உயர்நிலைப் பள்ளிகளும், 2 அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட நடுநிலைப் பள்ளிகளும்,

2 அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட உயர்நிலைப் பள்ளிகளும் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

❖ 779 பள்ளிகளில் கழிவறை வசதிகளை ஏற்படுத்துவதற்காக, சிறப்பு மானியமாக ரூ.38.95 கோடி வழங்கப்பட்டுள்ளது.

❖ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியர்களுக்கு மிதி வண்டிகள் வழங்குவதற்காக ரூ. 43 கோடி வழங்கப்பட்டுள்ளது.

❖ பழங்குடியினரை மேம்படுத்துவதற்கென்றே பழங்குடியினர் நலனுக்கென ரூ.246 கோடி பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை மொத்த ஆண்டுத் திட்டத்தில் 1.05 சதவீதம் ஆகும். மேலும், அரசமைப்புச் சட்டத்தின் 275(1) பிரிவின்படியும் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ரூ.10.76 கோடியில் அழிந்து வரும் நிலையிலுள்ள பண்டைய பழங்குடியினர்கள் நலத் திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

❖ தாட்கோ நிறுவனத்திற்குப் புத்துணர்வு அளிக்கும் வகையில் பங்கு மூலதனமாக முதற்கட்டமாக ரூ.13.26 கோடி தாட்கோ நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

❖ தாட்கோவால் பரிந்துரைக்கப்பட்டுத் திரைப்படத் துறையில் பயிற்சி முடித்த 43 மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

❖ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையுடன் இணைந்து மீனம்பாக்கம் அரசு ஆதிதிராவிடர் நல மேனிலைப் பள்ளியிலும், சென்னையில் கன்னிகாபுரம் அரசு ஆதிதிராவிடர் நலப் பெண்கள் மேனிலைப் பள்ளியிலும் தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சியும், கருத்தரங்கு விழிப்புணர்வு முகாம்களும் நடத்தப்பட்டன.

❖ தற்போது தமிழ்நாட்டில் 1,294 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் உள்ளன. இவை போதுமானதாக இல்லை என்பதால் 25 புதிய விடுதிகள் இந்நிதியாண்டில் துவங்கப்படவுள்ளன.

❖ 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதலாவது இடம் பெறும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் /கிறித்தவ ஆதிதிராவிட மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையை ரூ.6,000/– ஆகவும், அதேபோல, 10ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையை ரூ.2,000/–, ரூ.1,000/– மற்றும் ரூ.500/– ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

❖ 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்தவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவர்களில் முதல்

1,000 பேருக்கும், மாணவிகளில் முதல் 1,000 பேருக்கும் அவர்களது மேல் படிப்பைத் தொடர்ந்து படித்திட முதலமைச்சரின் தகுதிப் பரிசுத் தொகைத் திட்டத்தின்கீழ் ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.3,000/–வீதம் 5 ஆண்டுகளுக்கு உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

❖ அண்ணல் காந்தி நினைவு பரிசுத்தொகைத் திட்டத்தின்கீழ் 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மதிப்பெண் பெறும் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு முதலாண்டுக்கு ரூ.2,000/–ம் அடுத்து வரும் ஐந்தாண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1,500/– எனவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

❖ உயர்கல்வி சிறப்பு உதவித்தொகைத் திட்டத்தின்கீழ், விடுதிகளில் தங்கி, இளங்கலைப் பட்டப்படிப்பு தொழிற்பயிற்சி பயிலும் மாணவ மாணவியருக்கு ரூ.7,500/–ம், முதுகலை மற்றும் தொழில்நுட்பக்கல்வி பயிலும், மாணவ மாணவியருக்கு ரூ.8,000/–ம் வழங்கப்பட்டுள்ளது.

❖ 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில், 95 விழுக்காட்டிற்கு மேல் தேர்ச்சி எய்தும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் உண்டு உறைவிட உயர்நிலை / மேனிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களை ஊக்கப்படுத்தும் வகையில், ரூ.10,000/– ஊக்கப்பரிசாக வழங்கப்பட்டுள்ளது. அதேபோல, 100 விழுக்காடு தேர்ச்சி

எய்தும் முதுகலைப் பட்டதாரி / பட்டதாரி பாட ஆசிரியர்களுக்கு ஊக்கப்பரிசாக ரூ.5,000/– வழங்கப்பட்டுள்ளது.

- மைய அரசின் கல்வி உதவித் தொகை பெற இயலாத, கிறித்தவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ மாணவியர்க்கு, 10ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான சிறப்பு உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் (State Post-Matric Scholarship), விடுதியில் தங்காது கல்வி பயிலும் மாணவ மாணவியர்க்கு வழங்கப்படும் பராமரிப்புப்படி மாதம் ஒன்றிற்கு ரூ.100/– முதல் ரூ.175/– வரையும், விடுதியில் தங்கிப்பயிலும் மாணவ மாணவியர்க்கு மாதம் ஒன்றிற்கு ரூ.175/– முதல் ரூ.350/– வரையும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- ஆதிதிராவிடர் / பழங்குடியினர் பள்ளி விடுதிகளில் உள்ள ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் கிறித்தவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவிகளுக்கு சோப்பு, எண்ணெய் மற்றும் சில்லரைச் செலவினங்களுக்காக வழங்கப்பட்ட தொகை ரூ.25/–லிருந்து மாதம் ஒன்றிற்கு ரூ.50/–ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், கல்லூரி விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ / மாணவியருக்கு ரூ.35/–லிருந்து ரூ.75/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- ஆதிதிராவிட / பழங்குடியின நல விடுதிகளில் மாணவ, மாணவியர்களுக்குக் கூடுதலாக 1,500 இருக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு, அரசு முன்னுரிமை அளிக்கிறது. அவர்களுக்குத் திறன் வளர் பயிற்சிகள், தொழில் முனைவோர் ஆவதற்கான பயிற்சிகள், வேலை வாய்ப்புகள் தொடர்பான பயிற்சி அதிகம் உள்ள தொலைத் தொடர்பு பயிற்சிகளைத் தாட்கோ மூலம் அளிக்க மாநில சிறப்பு நிதியுதவித் திட்டத்தின் கீழ் ரூ.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் சுமார் 25,000 இளைஞர்கள் பயன் அடைகிறார்கள்.

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவியர்களின் கல்வி மேம்பாட்டுக்காகவும் இடைநிற்றலைத் தவிர்க்கவும் தொடர்ந்து கல்வி பயிலும் எண்ணத்தை ஊக்குவிக்கவும் கூடுதலாக ரூ.32 கோடி பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

முன்னோக்கிச் செல்லும் போக்குவரத்துத்துறை

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்
திரு. **வி. செந்தில் பாலாஜி** அவர்கள்

❖ ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களுக்குப் போதிய போக்குவரத்து வசதிகளை உருவாக்கும் வகையில் 250 புதிய பேருந்து வழித்தடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

❖ சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி, போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் மாற்றுத் திறனாளிகளுக்கு டிசம்பர் 3ஆம் தேதி, ஊதியத்துடன் கூடிய சிறப்புத் தற்செயல் விடுப்பு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

❖ சென்னை மாநகரத்தில், போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், "மோனோ ரயில்" திட்டத்தை முதற்கட்டமாக 57 கி.மீ தூரத்திற்கும் இரண்டாம் கட்டமாக 54 கி.மீ தூரத்திற்கும் செயற்படுத்த முதற்கட்டச் செலவினமாக, ரூ.2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ அரசுப் போக்குவரத்தை மேம்படுத்தும் நோக்கில், 3,000 புதிய பேருந்துகள் வாங்கப்படவுள்ளன. மேலும், முதல்முறையாக 1,432 பழைய பேருந்துகளுக்கு ரூ.97.58 கோடி செலவில் புதிய கூண்டு அமைக்கப்படவுள்ளது.

❖ தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள நிலங்களை அரசு மற்றும் தனியார் கூட்டாண்மை மூலம் மேம்படுத்தி வருவாய் ஈட்டிட 11 பேருந்துப் பணிமனைகளில் அடுக்குமாடி வணிக வளாகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

❖ சென்னை மாநகரில் வேளச்சேரி, பாடியநல்லூரிலும் கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூரிலும், கடலூர் மாவட்டம் நெய்வேலியிலும், புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியிலும், கந்தர்வகோட்டையிலும், இளுப்பூரிலும், கரூர் மாவட்டம்

அரவக்குறிச்சியிலும் தேனி மாவட்டம் குமுளியிலும் திருநெல்வேலியிலும் புதிய பணிமனைகள் அமைக்கப்படவுள்ளன.

- ❖ சங்கரன் கோவிலிலிருந்து சென்னைக்கு நேரடியாகப் புதிய வழித்தட பேருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ❖ கோயம்பேடு பேருந்து நிலைய ஓய்வறையில் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் ஓய்வெடுக்க ரூ.17 இலட்சம் செலவில், 223 இரண்டு அடுக்கு இரும்புக் கட்டில்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ❖ அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் ஓய்வெடுக்க 115 ஓய்வு அறைகள் ரூ.41.65 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.
- ❖ அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும், சிப்பஞ்சல் மற்றும் தூதஞ்சல் சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ❖ அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு அதிநவீன 5,000 புவிநிலைக்காட்டி (Global Positioning System) வசதி கொண்ட கையடக்க மின்னணுப் பயணச் சீட்டுக் கருவிகள் ரூ.18.74 கோடி செலவில் வாங்கப்படவுள்ளன.
- ❖ பயணிகளின் சிரமத்தைக் குறைக்கும் வகையில் 'எங்கிருந்தும் எப்பொழுதும்' என்ற அடிப்படையில் மின்னணுப் பயணச்சீட்டு முன்பதிவு செய்யும் முறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 03.10.2011 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.
- ❖ அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு ஏற்படும் வருவாய் இழப்பைத் தடுக்கும் வகையில் கழிவு செய்யப்பட்ட பேருந்துகளை மின்னணுத் தொழில் நுட்பத்தின் மூலம் ஏலமிடும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

❖ தொலைதூரப் பயணிகளின் நலனைக் கருத்தில் கொண்டு 37 பயணவழி உணவகங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

❖ பொறியியல் மற்றும் பொறியியல் சாராத சாலைப் பாதுகாப்புப் பணிகளைச் செயற்படுத்த ரூ.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ உயர் பாதுகாப்புப் பதிவெண் பலகை, இணைய தளம் மூலம் வாகனங்களுக்கு வரி மற்றும் கட்டணம் வசூல் செய்தல் மற்றும் விரைவுக்க அட்டை நடைமுறைப்படுத்துதல் போன்ற திட்டங்களைச் செயற்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

❖ திருவள்ளூர் மாவட்டம், பெத்திக்குப்பத்தில் ஒருங்கிணைந்த சோதனைச் சாவடியை அமைப்பதற்கென ரூ.79.77 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ கள்ளக்குறிச்சி, வேடச்சந்தூர், பாலக்கோடு, ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களில் புதிய பகுதி அலுவலகம் துவக்கப்பட்டுள்ளதுடன் தாம்பரம், திண்டிவனம் ஆகிய இரண்டு இடங்களில் உள்ள பகுதி அலுவலகங்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

❖ விருதுநகர், செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, இராசிபுரம் ஆகிய இடங்களில் கட்டப்பட்ட புதிய அலுவலகக் கட்டடங்களும் இராணிப்பேட்டை, வாணியம்பாடி ஆகிய இடங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஓட்டுநர் தேர்வுத்தளங்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

- செங்குன்றம், அரியலூர், விருத்தாசலம், காங்கேயம் குளித்தலை ஆகிய வட்டார போக்குவரத்து மற்றும் பகுதி அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் மற்றும் ஓட்டுநர் தேர்வுத்தளம் கட்டுவதற்கு ரூ.5.64 கோடி ஏற்பளிப்பு செய்துள்ளது.
- கும்மிடிப்பூண்டியில் 15 கோடி ரூபாய் செலவில் சர்வதேச தரத்தில் ஓட்டுநர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்.
- 45 வயதுக்கு மேற்பட்ட அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களுக்கு ஆண்டுதோறும் முழு உடல் பரிசோதனை.
- கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 338 நபர்களுக்குப் பணி நிரந்தரம்.
- பணி ஓய்வு பெற்ற 2,316 தொழிலாளர்களுக்குப் பணிக்கொடையாக ரூபாய் 47 கோடியே 71 இலட்சம்.
- ஜூன் 2012 முடிய ஓய்வு பெறவுள்ள 4,688 ஊழியர்களுக்குப் பணிக் கொடையாக ரூபாய் 96 கோடியே 57 இலட்சம்.
- அரசு போக்குவரத்துக் கழகங்களில் ஓட்டுநர், நடத்துனர், தொழில்நுட்பப் பணியாளர்களென 16 ஆயிரத்து 661 காலி பணியிடங்களை நிரப்புதல்.
- மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையில் காலியாகவுள்ள 569 காலிப் பணியிடங்களை நிரப்புதல்.
- புவி இருப்பிட முறைமை வசதி கொண்ட கையடக்க மின்னணு பயணச்சீட்டுக் கருவி அனைத்துப் பேருந்துகளிலும் அறிமுகம் செய்தல்.
- 300 கிலோ மீட்டர் தூரம் மற்றும் அதற்கு மேல் இயங்கும் பேருந்துகள் அனைத்தும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் மட்டுமே இயக்கப்படுதல்.
- அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்காக ஸ்ரீரங்கத்தில் புதிய பொதுமேலாளர் அலுவலகம் அமைத்தல்.
- கூடுதல் கண்காணிப்பு மற்றும் பராமரிப்பு கருதி 25 புதிய பணிமனைகள் அமைத்தல்.

மீனவர் நலம் காக்க முன்னோடித் திட்டங்கள்

மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர்
திரு. **கே.ஏ. ஜெயபால்** அவர்கள்

- கடல் மீன்பிடிப்பில் ஈடுபடும் மீனவர்களுக்குக் கடலில் மீன்பிடிக்கத் தடை செய்யப்பட்ட 45 நாட்களுக்கு மீன்பிடித் தடைக் கால நிவாரண உதவியாக வழங்கப்பட்ட தொகையினை ரூ.1,000/–லிருந்து ரூ.2,000/–ஆக உயர்த்தப்பட்டு 1,58,158 மீனவக் குடும்பங்களுக்கு நிவாரண உதவித்தொகையாக ரூ.31.64 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- கடல் மீன்பிடி குறைந்த காலத்தில் மீனவக் குடும்பங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்டும் விதமாக மீனவக் குடும்பம் ஒன்றுக்கு ஒட்டுமொத்தமாக ரூ.4,000 நிவாரணத்தொகை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்கள். இந்தப் புதிய திட்டத்தின் படி 1,58,481 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.63.39 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- மீன்வள மேம்பாட்டிற்காக புதிய மீன்வள அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் மீன்வள அறிவியல் தொழிற்கல்வி மையம், நாகப்பட்டினத்திலும் மற்றும் பொன்னேரியிலும் தொடங்கப்படவுள்ளன.
- தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ் 1,99,362 மீனவர்களுக்கு ரூ.23.82 கோடியும் மற்றும் 1,59,407 மீனவ மகளிருக்கு ரூ.19.10 கோடியும் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.
- விசைப்படகுகள் மற்றும் இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளைச் சூரை மீன் பிடிப்பிற்கு ஏற்றவாறு மாற்றியமைக்க ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 70 மீனவர்களுக்குப் பணியாணை வழங்கப்பட்டுள்ளது.
- ஆழ்கடல் மீன் பதப்படுத்தும் கப்பல் மற்றும் தாய் கப்பல் திட்டத்திற்கான ஆய்வு மேற்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து அறிக்கையைப் பெறுவதற்கு தேசிய

மற்றும் உலகளவில் நாளிதழ்களில் விளம்பரப்படுத்தப்பட்டு கருத்துரு பெறப்பட்டுள்ளன. மேலும், ஒரு முன்னோடித் திட்டத்தைச் செயற்படுத்த நிதியுதவி பெறுவதற்குத் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் கருத்துரு ஒன்றை தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்திற்கு அனுப்பியுள்ளது.

❖ பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்கும் திட்டத்தின்கீழ் 2011–12 ஆம் ஆண்டு ரூ.7 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதுவரை 1,222 வெளிப்பொருத்தும்/ உட்பொருத்தும் இயந்திரங்கள் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன.

❖ தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியின் மூலம் சென்னை மீன்பிடித் துறைமுகத்தை மேம்படுத்துவதற்காக ரூ.12.07 கோடி ஒதுக்கப்பட்டு முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது.

❖ தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியின் மூலம் புதுக்கோட்டை மாவட்டம் ஜகதாப்பட்டினம் மீன் இறங்கு தளம் மற்றும் கடலூர் மாவட்டம் முடசலோடை மீன்பிடி இறங்கு தளத்தை மேம்படுத்துவதற்கு முறையே ரூ.53.26 இலட்சம் மற்றும் ரூ.25.67 இலட்சம் ஒதுக்கப்பட்டு முதற்கட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

❖ சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் சென்னை மீன்பிடித் துறைமுகத்தை மேம்படுத்துவதற்காக (ட்ராலர் வார்ப் சீரமைப்பிற்கு) ரூ.4.16 கோடி ஒதுக்கப்பட்டு, பணிகள் நடைபெறுகின்றன.

❖ மணக்குடியில் புதிய மீன்பிடித் துறைமுகம் கட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

- தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நீர்த்தேக்கங்களில் கூண்டுகளில் மீன் வளர்ப்பதற்கு ரூ.3.34 கோடி நிதி ஒதுக்கப்பட்டு ஆரம்பக்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கடலில் 17 இடங்களில் செயற்கை மீன்உறைவிடங்கள் அமைத்தல், வழிகாட்டு விளக்குகளை கடலோரக் கிராமங்களில் அமைத்தல், 50 சதவீத மானியத்தில் மீன்குஞ்சுப் பொறிப்பகங்களை அமைப்பதற்கு மீன் வளர்ப்பவர்களுக்கு நிதியுதவி அளித்தல், உள்நாட்டு நீர்நிலைகளில் மீன்வளங்களைப் பாதுகாப்பதற்கு ரோந்துப்பணிக்கு 45 FRP படகு வாங்குதல், சூரைமீன் பிடிப்பதற்கு FRP படகு வாங்குதல், பரங்கிப்பேட்டையில் உள்ள ஒருங்கிணைந்த கடல் உயிரின மாதிரிப் பண்ணையினை மேம்படுத்துதல் ஆகிய திட்டங்களுக்கு ரூ.8.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ரூ.85.85 இலட்சம் செலவினத்தில் கடலோர மாவட்டங்களிலுள்ள 1,300 கடலோர மீனவர்களுக்கு வெளிமாநிலங்களில் பயிற்சியளித்தல்.

- உள்நாட்டு மீன்வள அலுவலகங்களுக்குத் தொலைத் தொடர்பு வசதிகள் பகுதி – II திட்டத்தின் கீழ் ரூ.6.30 இலட்சத்தில் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

- மீன்குஞ்சு வளர்ப்பதை ஊக்குவிக்கும்பொருட்டு தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 50 விழுக்காடு மானியம் ஒருவருக்கு ரூ.1.50 இலட்சம் வீதம் 13 நபர்களுக்கு ரூ.19.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- உள்நாட்டு மீன்வளத்தினைப் பெருக்கிட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் மூலம் 159 எக்டர் பரப்பளவில் மீன்பண்ணை அமைக்க 152 மீன்வளர்ப்போர்க்கு ரூ.1.33 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

- மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அலங்கார மீன்வளர்ப்பு மேற்கொள்ள உட்கட்டமைப்பு வசதிகள், மற்றும் பயிற்சிக்காக ரூ.42.92 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் பண்ணைக் குட்டைகளில் மீன்வளர்ப்பு, மிதவைக் கூண்டுகளில் மீன்குஞ்சு வளர்ப்பு, நவீன மீன் அங்காடி அமைத்தல் மற்றும் அலங்கார மீன்வளர்ப்பு அலகுகள் அமைத்தல் போன்ற பணிகளுக்காக ரூ.2.59 கோடி மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் திருவள்ளூர் மாவட்டம், பெரியமாங்கோடு மற்றும் தூத்துக்குடி மாவட்டம், திரேஸ்புரம் முதலிய மீனவக் கிராமங்களில் முறையே ரூ.4.72 கோடி மற்றும் ரூ.7.03 கோடி திட்ட மதிப்பீட்டில் மீன் இறங்கு தளம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டு நடைபெற்றுவருகிறது.

அறிவார்ந்த சமுதாயம் உருவாக்கிட கல்விக்கு முக்கியத்துவம்

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர்
திரு. **என். ஆர். சிவபதி** அவர்கள்

- மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களின் இடைநிற்றலைக் குறைப்பதற்காக 2011–12ஆம் கல்வியாண்டிலிருந்து 10ஆம் வகுப்பிற்கு ரூ.1,500–ம், 11ஆம் வகுப்பிற்கு ரூ.1,500 மற்றும் 12ஆம் வகுப்பிற்கு ரூ.2,000மும் சிறப்பு ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 18,54,686 மாணவ மாணவியர் பயன்பெறுவர்.

- 2011–2012 ஆம் கல்வியாண்டில், அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் 81,02,128 மாணவ / மாணவியருக்கு ரூ. 94.76 கோடி செலவில் காலணிகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

- ஆசிரியர்களின் பயிற்சித் தேவைகளை மட்டும் கருத்தில் கொள்ளாமல் மாணவர்கள் பாடப்புத்தகங்களுக்கு அப்பாலும் கல்வி அறிவு பெறக்கூடிய வகையில் சென்னையில் டிபிஐ வளாகத்தில் ஒருங்கிணைந்த அறிவுசார் பூங்கா அமைப்பது குறித்து உரிய ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- 2011–12 ஆம் கல்வி ஆண்டில் 100 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் மேனிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டன. நிலை உயர்த்தப்பட்ட 100 பள்ளிகளுக்கு 9 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் வீதம் 900 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

- 2011–12ஆம் கல்வியாண்டில், 3,565 இடைநிலை ஆசிரியர், 9,735 பட்டதாரி ஆசிரியர் மற்றும் 1,590 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இவை தவிர தொடக்கக் கல்வி இயக்ககத்தின் கீழ் உள்ள பள்ளிகளில் 1,886 இடைநிலை ஆசிரியர், 1,242 பட்டதாரி ஆசிரியர் மற்றும் 7 உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களும், பள்ளிக் கல்வி இயக்ககத்தின் கீழுள்ள பள்ளிகளில் 1,305 முதுகலை ஆசிரியர், 3,816 பட்டதாரி ஆசிரியர், 846 சிறப்பு ஆசிரியர் மற்றும் 25 வேளாண்மை தொழிற்கல்வி ஆசிரியர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டன.

- 2011–12ஆம் கல்வியாண்டில் புதிதாகத் தரம் உயர்த்தப்பட்ட 710 உயர்நிலைப் பள்ளிகளில் 3,550 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் தரம் உயர்த்தப்பட்ட 65 நடுநிலைப்பள்ளிகளுக்கு 195 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

- உடற்கல்வி, ஓவியம், தொழிற்கல்வி ஆகியவற்றுக்காக ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேனிலைப் பள்ளிகளில் 16,549 பகுதி நேர ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- 2012–2013 ஆம் கல்வியாண்டில் அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒன்று முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ மாணவியருக்கும் ஒரே மாதிரியான புத்தகப் பைகள், கற்றலுக்குத் தேவையான கணித உபகரணப்பெட்டி, வண்ணப்பென்சில்கள் மற்றும் புவியியல் வரைபடங்கள் ரூ.136.50 கோடி செலவில் வழங்குவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 92,28,374 மாணவ மாணவியர் பயன்பெறுவர்.

- மாணவர்களின் புத்தகச் சுமையைக் குறைக்கும் நோக்கத்துடன் அடுத்த கல்வியாண்டு(2012–2013) முதல் முப்பருவப் பாடத்திட்டத்தினை ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை நடைமுறைப்படுத்தவும், 2013–2014 ஆம் கல்வியாண்டில் 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளுக்குத் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை செயல்முறைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதற்கான விழிப்புணர்வுப் பயிற்சிகள் கல்வித் துறை அலுவலர்களுக்குத் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது.

- கிராமங்கள் தோறும் நூலகங்கள் செம்மையாகச் செயலாற்றிட மாவட்ட நூலகங்களில் காலியாகவுள்ள 1,353 நூலகர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

- அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் 2009–10ஆம் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்பட்ட 831 நடுநிலைப் பள்ளிகளுக்குத் தலைமையாசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

- பள்ளிக் கல்வித்துறையில் பணிபுரியும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியருக்கான கல்வித் தகுதி பெற்றுள்ள பள்ளிக் கல்வித் துறை அமைச்சுப் பணியாளர்களுக்கு, பதவி உயர்வில் 2 விழுக்காடு முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- மாணவர்கள் நலன் கருதி 2012 ஜூன்/ஜூலை தேர்வுப் பருவம் முதல் மார்ச்/ஏப்ரல் தேர்வு எழுதும் மாணவர்களில் அனைத்துப் பாடங்களையும் தேர்ச்சி பெறாதவர்களும் தேர்வெழுத வழி செய்யப்பட்டுள்ளது.

- அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நடத்தப்படும் மேனிலை மற்றும் எஸ்.எஸ்.எல்.சி., பொதுத்தேர்வுகளை எழுதும் மாணவ மாணவியருக்கு மதிப்பெண் சான்றிதழ்கள் மார்ச் 2012 முதல் மேனிலை மற்றும் இடைநிலைத்தேர்வுகள் எழுதும் தேர்வரின் புகைப்படம் மற்றும் கூடுதல் இரகசியக் குறியீட்டுடன் வழங்கப்பட உள்ளன.

- 8ஆம் வகுப்புப் பொதுத்தேர்வினை முடிக்காமல் 18 வயதிற்கு மேற்பட்டவர்களில் வேலையில் உள்ளோர் / வேலை தேடுவோர், பதவி உயர்வு, கருணை அடிப்படையில் பணிநியமனம், பதவி உயர்வில் முன்னுரிமை, ஓட்டுநர் உரிமம் பெறுதல் எனப் பலவகைப் பயன்பாட்டிற்காகவும், அவர்களுக்கு 8ஆம் வகுப்புச் சான்றிதழ் பெறவேண்டிய நிலை உள்ளதால் நிறுத்தப்பட்ட தனித்தேர்வருக்கான 8ஆம் வகுப்புப் பொதுத்தேர்வினை இனிவருங் காலங்களில் தொடர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- தமிழக அரசால் குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட விதிகள் இயற்றப்பட்டு 15.11.2011 அன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது. இச்சட்டத்தின்படி 6 முதல் 14 வயதுள்ள மாணவர்களுக்கு வாழ்விடத்திற்கு அருகாமையிலுள்ள பள்ளிகளின் மூலம் கட்டாயத் தொடக்க கல்வியினை இலவசமாக வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- அனைவருக்கும் பள்ளி வசதி அளிக்கும் பொருட்டு மிகக் குறைந்த எண்ணிகையிலான குழந்தைகள் உள்ள குடியிருப்புப் பகுதி, நகர்ப்புறக் குழந்தைகள், சாலையோரக் குழந்தைகள், வீடில்லாக் குழந்தைகள், மலைவாழ் பகுதி குழந்தைகளுக்காக மூன்று உண்டு உறைவிடப் பள்ளிகள் கோயமுத்தூர் மாவட்டத்தில் தொடங்கப்பட்டு 150 மாணவர்கள் பயின்றுவருகின்றனர்.

- புதியதாக, கணினி வழிக்கற்றல் மையங்கள் 810 அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் நிறுவப்பட்டு, 2,430 கணினிகள் மற்றும் கணினி சார்ந்த பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

- 960 நடுநிலைப் பள்ளிகளிலுள்ள கணினி மையங்களுக்கு (ஒரு பள்ளிக்கு ஒன்று வீதம்) ஒளிஉரு படிவக் கருவி (Multimedia Projector) வழங்கப்பட்டுள்ளது.

- 2,250 நடுநிலைப் பள்ளிகளில் இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- மாணவ மாணவியரின் திறமையையும் ஆற்றலையும் வளப்படுத்துவதற்கு அவர்களின் சிந்திக்கும் ஆற்றலை வளப்படுத்துவது மிகவும் அவசியம் என்பதனைக் கருத்தில் கொண்டு 7 முதல் 17 வயதுள்ள பள்ளி செல்லும் மாணவ மாணவியர் பயன்பெறும் வகையில் தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் சதுரங்க விளையாட்டு 2012–13 ஆம் கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- ‘‘சுத்தம் மற்றும் சுகாதாரமான சுற்றுச்சூழல்" பள்ளிக்கூடங்களில் அமையப்பெற அரசு உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில் 2,999 துப்புரவுப் பணியிடம் மற்றும் 2001 காவலர் பணியிடம் ஆகமொத்தம் 5,000 ஆசிரியரல்லாத பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

- ஸ்மார்ட் வகுப்புகள் மூலம் கற்றல் கற்பித்தல் மிகச் சிறப்பாக அமையும் என்பதால் வகுப்பறை முழுவதும் கணினி முறையில் பயன்பெறும் வகையில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம் வட்டத்தில் 5 அரசு மேனிலைப் பள்ளிகளில் இத்திட்டத்தினைத் தொடங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

- தற்போதுள்ள கல்வி முறையில் உள்ள குறைகளைக் கண்டறிந்து, அவற்றை சரி செய்து, கல்வித் தரத்தை மேம்படுத்த உரிய பரிந்துரைகளை அரசுக்கு வழங்க மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் வல்லுநர் குழு ஒன்று அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

- ஆசிரியர்களின் கற்பிக்கும் திறனை மேம்படுத்தும் வகையில் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனமாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- 11 மாவட்டங்களில் உள்ள கல்வியில் பின்தங்கிய 26 ஒன்றியங்களில், 26 மாதிரிப் பள்ளிகள் துவங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- 2012–13ஆம் கல்வியாண்டில் அரசு / அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ மாணவியருக்கு முப்பருவ முறையில் வருடத்திற்கு மூன்று முறையும், 9 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு ஆண்டிற்கு ஒருமுறையும் ரூ.106.436 கோடி செலவில் விலையில்லா நோட்டுப் புத்தகங்கள் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 81,02,128 மாணவ மாணவியர்கள் பயன்பெறுவர்.

- ❖ வேறெந்தத் துறைகளுடனும் ஒப்பிட இயலாத சாதனையாக 2012–13 ஆம் ஆண்டைய வரவு செலவுத் திட்ட அறிக்கையில் பள்ளிக் கல்வித் துறையின் தொலைநோக்கான அனைவருக்கும் கல்வி என்ற இலக்கினை அடைய ரூ.14,552.82 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் வளர்ச்சித் துறை

தமிழ் மொழி தழைத்தோங்கவும், தமிழ் மொழியை ஆட்சிமொழியாகவும், தமிழ் கலாச்சாரம் ஆரோக்கியமாக வளர்ச்சி பெறவும் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி கீழ்க் குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டு வருகிறது.

உலகெலாம் தமிழ்

- ❖ திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் கவிதைகள் சீன, அரபு மொழிகளில் ரூ 3.20 கோடி மதிப்பில் மொழிபெயர்த்தல்.
- ❖ தமிழர் மரபு மீட்கப்பட்டு சித்திரைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டது.
- ❖ அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு மாத ஓய்வூதியம் ரூ 2,000 ஆக உயர்வு.
- ❖ தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கு சீருந்து மற்றும் கருவிகள் வாங்க ரூ 9.25 இலட்சம் வழங்கல்.

புதிய விருதுகள்

- ரூ 5 இலட்சம் மதிப்பில் 'தமிழ்த்தாய் விருது' மதுரை தமிழ்ச்சங்கத்திற்கு வழங்கப்பட்டது.
- கபிலர் விருது ரூ 1 இலட்சமும் தங்கப்பதக்கமும் தமிழறிஞருக்கு வழங்கப்பட்டது.
- உவேசா விருது ரூ 1 இலட்சமும் தங்கப்பதக்கமும் தமிழறிஞருக்கு வழங்கப்பட்டது.

திருவள்ளுவர் திருநாள்

- திருவள்ளுவர், பாரதியார், பாரதிதாசன், திருவிக, கிஆபெ விசுவநாதம் ஆகிய விருதுகள் (ஒவ்வொரு விருதுக்கும் ரூ 1 இலட்சம் பரிசுத் தொகை, தங்கப்பதக்கம்) தமிழறிஞர்களுக்கு வழங்கப்பட்டது.

மாணவ, மாணவியருக்குப் பரிசு

- கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளுக்கு மாவட்ட அளவில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியருக்கு முதல் பரிசு ரூ 10,000 ஆகவும், இரண்டாம் பரிசு ரூ 7,000 ஆகவும் உயர்வு. மாநில அளவிலான போட்டிகளுக்கு முதல் பரிசு ரூ 15,000 ஆகவும், இரண்டாம் பரிசு ரூ 12,000 ஆகவும், மூன்றாம் பரிசு ரூ 10,000 ஆகவும் உயர்வு.
- நூல் வெளியிட நூலாசிரியருக்கு ரூ 50,000 நிதியுதவி.
- 1330 குறட்பாக்களையும் ஒப்பித்த 36 மாணவர்களுக்கு ரூ 10,000 வீதம் ரூ 3.60 இலட்சம்.

நல்கை

- தமிழ்ப் பல்கலைக்கழகத் தனித்தன்மையை மீட்டெடுக்க ரூ 11.60 கோடி.
- உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ரூ 2 கோடி.
- ஆசியவியல் ஆய்வு நிறுவனத்திற்கு ரூ 4.57 இலட்சம்.
- குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்திற்கு ரூ 1.67 இலட்சம்.

ஆட்சிமொழி

- ரூ 11.20 இலட்சம் மதிப்பில் அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சிமொழிக் கருத்தரங்கம் மற்றும் பயிலரங்கம்.

.செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள்

- ரூ 10 இலட்சம் மதிப்பில் இளந்தமிழ் எழுத்தாளர்களுக்குப் பயிற்சிப் பட்டறை.
- ரூ 9.30 இலட்சம் மதிப்பில் ஆட்சி மொழிப் புத்தாக்கப் பயிற்சி.
- ரூ 1 கோடி மதிப்பில் மின்எண்மத்தில் அரிய தமிழ் நூல்கள்.
- ரூ 5 இலட்சம் மதிப்பில் தமிழ் வளர்ச்சித் துறைக்குத் தனி வலைத்தளம்.
- ரூ 50 இலட்சம் மதிப்பில் தமிழ் பற்றி அயலக அறிஞர்களின் கருத்துக்களைத் தொகுத்து வெளியிடல்.
- ரூ 1 கோடி மதிப்பில் அறநெறிக் கருவூலம்.
- ரூ 50 இலட்சம் மதிப்பில் பொன்மொழி அகராதி.
- உலகத் தமிழ்ச் சங்கப் பணியமைப்புக்காக ரூ 51இலட்சம்.
- ரூ 10.50 இலட்சம் மதிப்பில் தமிழ்வளர்ச்சி உதவி இயக்குநர்களுக்கு ஜீப்புகள்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

- தமிழகத்தில் செயற்கை இழை தடகள ஓடுபாதை, வளைகோல் பந்து மைதானம், பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம், விளையாட்டு விடுதி, சிறப்பு விளையாட்டு விடுதி ஆகிய விளையாட்டுக் கட்டமைப்புகள் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. வெகு விரைவில் அவை கட்டி முடிக்கப்படும்.
- சர்வதேச மற்றும் தேசியப் போட்டிகளில் பதக்கம் வெல்லும் விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத் தொகை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய (SDAT) ஊக்கத் தொகை, மாநில பாரதியார் மற்றும் குடியரசுதின போட்டிகளில் வென்றவர்களின் பரிசுத் தொகை, நலிவடைந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர்களின் ஓய்வூதியத் தொகை உயர்த்தப்பட்டுள்ளது.
- முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் தடகளம் மற்றும் குழு விளையாட்டுகளில் நடத்திட ஆணை வழங்கப்பட்டுள்ளது.
- தினப் பயிற்சித் திட்டம், வார இறுதித் பயிற்சித் திட்டங்கள் செயற்படுத்திட ஆணை வழங்கப்பட்டுள்ளது.
- அனைத்து மாவட்டங்களிலும் ஒரு கிராமத்தில் கிராம வளர்ச்சி மையம் அமைக்கப்படும்.

- மாற்றுத் திறனாளிகளுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசுத்தொகை வழங்கப்பட்டது.

- மத்திய அரசின் பைக்கா திட்டம் தமிழகத்தில் மாநில அரசின் பங்குத் தொகையுடன் செயற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் தேசிய அளவிலான போட்டிகளில் தமிழக அணி 16 விளையாட்டுக்களில் பங்கு பெற்று ஒட்டுமொத்த சாம்பியன் பிரிவில் 13 தங்கம், 12 வெள்ளி மற்றும் 17 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று தேசிய அளவில் இரண்டாம் இடத்தை வென்றது.

- விளையாட்டில் சிறந்த இளம் வீரர் / வீராங்கனைகளுக்கு முதன்மை நிலை விளையாட்டு மையம் அமைக்கப்படுகிறது. உலகத் திறனாளர்களைக் கண்டறியும் திட்டத்தில் 3,240 திறமைமிக்கவர்களுக்கு தலா ரூ.6,000 ஊக்க உதவித் தொகை வழங்கப்படுகிறது.

- ஒரு கோடி ரூபாய் அரசு மானியத்தில் சென்னை ஓபன் டென்னிஸ் போட்டிகள் மற்றும் ஸ்குவாஷ் போட்டிகள் சிறப்பாக நடத்தப்பட்டன.

- 12 சிறந்த விளையாட்டு வீரர்களுக்கும், 2 சிறந்த பயிற்றுநர்களுக்கும், 2 சிறந்த உடற்கல்வி ஆசிரியர்களுக்கும் முதலமைச்சர் விருது வழங்கப்பட்டது.

- ஜார்கண்டில் நடைபெற்ற 34ஆவது தேசியப் போட்டியில் பதக்கம் வென்ற வீரர்களுக்கு ரூ.30 இலட்சம் ஊக்கத்தொகை வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

தேசிய மாணவர் படை

- தேசிய மாணவர் படை மாணவ மாணவியருக்கான தமிழக அரசு ஊக்கத்தொகையினை 100 முதுநிலை மாணவ மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.200/– வீதம் பத்து மாதங்களுக்கும், 100 இளநிலை மாணவ மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/– வீதம் பத்து மாதங்களுக்கும் மொத்தம் ரூ.3 இலட்சம் ஒப்பளித்து ஆணை வெளியிட்டுள்ளது.

- குடியரசு தின முகாம்களுக்கான செலவுத்தொகையை ரூ.31.50 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சமாக உயர்த்தி ஆணை வெளியிட்டுள்ளது.

- தேசிய மாணவர் படை கப்பற்படை அலகு மிதவைப் பயணப் போட்டிக்கான நிதி ஒப்பளிப்பு ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து ரூ. 2 இலட்சமாக உயர்த்தி ஆணை வெளியிட்டுள்ளது.

- தேசிய மாணவர் படை மாணவர்களுக்குச் சிற்றுண்டிப் படியினை ஒரு மாணவருக்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ.3/–லிருந்து ரூ.10/– ஆக உயர்த்தி ஆணை வெளியிட்டுள்ளது.

- முதலமைச்சரின் அணி வகுப்பு விழாவிற்கான செலவுத் தொகையை ரூ.2.50 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாக உயர்த்தி ஆணை வெளியிட்டுள்ளது.

நாட்டு நலப்பணித் திட்டம்

- நாட்டு நலப்பணித் திட்ட மாணவத் தொண்டர்கள் 89,133 யூனிட் இரத்தத்தை இலவசமாக வழங்கியுள்ளார்கள்.

- நாட்டு நலப்பணித் திட்ட மாணவத் தொண்டர்கள் 4,87,653 மரக் கன்றுகளை நட்டுள்ளனர்.

- எழுத்தறிவில்லாத 95,155 நபர்களுக்கு நாட்டு நலப்பணித் திட்ட மாணவத் தொண்டர்கள் எழுத்தறிவு அளித்துள்ளார்கள்.

- மாணவத் தொண்டர்களின் பல்வேறு செயற்பாடுகளால் தத்தெடுக்கப்பட்ட கிராமங்களில் உருவாக்கப்பட்ட உத்தேச சொத்தின் மதிப்பு ரூ. 6.10 கோடி ஆகும். இத்திட்டத்தின் மூலம் பயனடைந்தோர் எண்ணிக்கை 4,18,500.

❖ இது மட்டுமன்றி சிறப்பு முகாம்களின்போது, நாட்டு நலப்பணித் திட்ட மாணவத் தொண்டர்கள், அரசு அவ்வப்போது அறிவிக்கும் நலத் திட்டங்கள் மக்களைச் சென்றடையும் வகையில் தெருமுனைக் கூட்டங்கள் வாயிலாகவும் நாடகங்கள் வாயிலாகவும் விளக்குகின்றனர்.

கலை மற்றும் பண்பாடு

❖ திருவையாறு அரசு இசைக்கல்லூரிக்கு முதல் தளம் கட்டுவதற்கு ரூ.61.60 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

❖ திருநெல்வேலி மண்டல கலை பண்பாட்டு மையத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.99.90 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

❖ அரசு இசைக்கல்லூரிகள், அரசு கவின்கலைக் கல்லூரிகள், மாமல்லபுரம் அரசு கட்டட மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி ஆகியவற்றின் பயன்பாட்டிற்குத் தளவாடப் பொருட்கள் வாங்க ரூ.39.65 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

❖ தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கலைவிழாக்கள் நடத்தவும், கலை நிகழ்ச்சிகளை ஆவணமாக்குவதற்கான சாதனங்கள் வாங்கவும் ரூ.33.40 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

❖ நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் இவ்வாண்டு கூடுதலாக 500 நலிந்த கலைஞர்களுக்கு மாதம் ரூ.1,000/– வீதம் நிதியுதவி வழங்க ரூ.40 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

❖ 17 அரசு இசைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.200/–வீதம் கல்வி உதவித்தொகை வழங்க ரூ.19.92 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றங்களின் சார்பாக கோடை முகாம் நடத்திட ரூ.3 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றங்களின் சார்பாக மாரிக்கால மற்றும் கோடைக்கால முகாம் நடத்திட ரூ.3.60 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

❖ கலை பண்பாட்டுத் துறை சார்பாக மாவட்டங்கள் தோறும் கலை விழாக்கள் மற்றும் கலை பயிற்சிகள் நடத்த ரூ.12 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

❖ சென்னை தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரியிலுள்ள மாணவியர் விடுதியைப் புனரமைக்க ரூ.8.95 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றங்களின் சார்பாகக் கோடைக்கால முகாமில் மாநில அளவிலான கைவினைக் கலைப்பயிற்சி அளிக்கும் பொருட்டு ரூ.1.20 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றங்களில் வறிய நிலையில் பயிற்சி பெறும் பரத நாட்டிய சிறார்களுக்கு இலவசமாக பரத நாட்டிய அரங்கேற்றம் நடத்திட ரூ.50,000/– நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- கோயம்புத்தூர் தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரிக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.90,90,900/– நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றங்களின் சார்பாக திறமையுள்ளோரைத் தேர்வு செய்வதற்காக இளந்திரு தெரிவுப் போட்டிகள் நடத்திட ரூ.97,193/– நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பாக திறம்படைத்த இளங்கலைஞர்களுக்கு ஊக்கமளிக்கும் திட்டத்தின் கீழ் அரசின் நல்கையாக ஒரு இலட்சம் ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- ஒரிசா மாநிலத்தில் புவனேஸ்வர் மாவட்டம், உதயகிரியில் தேசிய கரவேளா திருவிழா நடத்த ரூ.75,000/– நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் திட்டம் மற்றும் நிருவாகப் பணிகளுக்கென அரசின் நல்கையாக ரூ.30 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தின் நலத்திட்டத்திற்கு ரூ.5 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்குத் தற்காலிக உதவி மக்கள் தொடர்பு அலுவலர் பணியிடம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டது.

தொல்லியல்

- மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையிலும் தரங்கம்பாடி டேனிஷ் கோட்டையிலும் இடிதாங்கிகள் அமைப்பதற்கு ரூ.15.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- தொல்லியல் துறையின் பொறியியல் பிரிவிற்கு 6 எண்ணியல் படக்கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.3 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- தஞ்சாவூர் அரண்மனை வளாகத்தில் உள்ள 4 வரலாற்றுச் சின்னங்களுக்குக் கண்காணிப்புக் கேமிரா மற்றும் ஒலிபெருக்கி இணைப்புப் பொருத்துவதற்கு ரூ.1.60 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை தலைமையகம் மற்றும் மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை, தஞ்சாவூர் இராசராசன் அகழ்வைப்பகம் முதலியவற்றிற்குத் தீயணைப்புக் கருவிகள் வாங்குவதற்கு ரூ.2.60 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- காஞ்சிபுரம் மாவட்டம் செய்யூர் தாலுகா, ஆலம்பறையில் உள்ள ஆலம்பறைக் கோட்டையில் அகழாய்வுப் பணிகள் மேற்கொள்வதற்காக ரூ.2.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள் மற்றும் திருப்பூர் மாவட்டக் கல்வெட்டுகள் தொடர்பாக இரண்டு கல்வெட்டியல் புத்தகங்கள் வெளியிடுவதற்கு ரூ.1.35 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- தொல்லியல் துறையில் வலைதளத்தினை மேம்படுத்துதல் மற்றும் தோற்ற நிலை சுற்றுலா மற்றும் ஜிஐஎஸ் (GIS) அமைத்தல் பணிக்காக ரூ.28 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- பதின்மூன்றாவது நிதிக்குழு மானியத்தின் பரிந்துரையின்படி மாநில சிறப்புத் தேவை மானியத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள ஐந்து தொன்மையான கோயில்களின் பராமரிப்புப் பணிகளுக்காக ரூ.18.35 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

அருங்காட்சியகங்கள்

- சென்னை அரசு அருங்காட்சியகத்தில் அச்சுக் கட்டைகள் காட்சிப்படுத்த காட்சிப்பெட்டிகள் அமைப்பதற்கும், மின்வசதிகள் செய்வதற்கும் ரூ.6.5 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை அரசு அருங்காட்சியகத்திற்கு மடிக் கணினி மற்றும் நிழற்படப்பிரிவிற்குக் குடை விளக்கு வாங்குவதற்கு ஒரு இலட்சம் ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை அரசு அருங்காட்சியக விலங்கியல் பிரிவில் பெயர்ப்பலகைகள் / அட்டைகள் பொருத்துவதற்கு ஒரு இலட்சம் ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை அரசு அருங்காட்சியக விலங்கியல் பிரிவில் உட்புறம் ஒளியூட்டப்பட்ட காட்சியமைப்பு மற்றும் பெரிதுபடுத்தப்பட்ட படங்கள் பொருத்துவதற்கு ரூ.1.5 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- புவியியல் காட்சிக்கூடக் கையேடு தயாரிப்பதற்கு ஒரு இலட்சம் ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- மரவகைப்பாடுகள் மற்றும் உரிக்கார் நாயக்கர் சமுதாயம் மற்றும் கலாச்சாரப் பண்பாடுகள் பற்றிய புத்தகங்கள் வெளியிடுவதற்கு ரூ.1.75 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை அரசு அருங்காட்சியக விலங்கியல் பிரிவில் விலங்கியல் காட்சிக்கூடங்கள் பற்றிய தகவல் மடிப்பேடு தயாரிப்பதற்கு ரூ.2 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை அரசு அருங்காட்சியகத் தாவரவியல் பிரிவில் அச்சுக் கட்டை நிழற்படங்களைப் புத்தகமாக வெளியிடுவதற்கு ஒரு இலட்சம் ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை அரசு அருங்காட்சியகம் நீங்கலாக மற்ற மாவட்ட அரசு அருங்காட்சியகங்களை அனைத்துப் பள்ளி மாணவர், மாணவியர்கள் மட்டும் நுழைவுக்கட்டணமின்றிப் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள மரபுரிமை வாய்ந்த கிழக்குப்புற சுற்றுச் சுவர் அமைக்கக் கூடுதலாக ரூ.3.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை அருங்காட்சியகத்தில் “நடமாடும் அருங்காட்சியகம்” அமைத்திட ரூ.30 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

குறைந்த கட்டணத்தில் அதிக சேனல்களை வழங்கும் அரசு கேபிள் டி.வி.

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்
திரு. முக்கூர் **என். சுப்பிரமணியன்** அவர்கள்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் நிகழ்நிலைப் பதிவு

❖ 10 மற்றும் 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் வேலைவாய்ப்புப் பயிற்சி அலுவலகத்தில் பதிவு செய்திடும் பொழுது ஏற்படும் கூட்டத்தினைத் தவிர்த்திட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மாணவர்கள் தாங்கள் படித்த பள்ளியிலேயே இணையத்தின் வாயிலாக மதிப்பெண் பட்டியல் பெற்ற 15 நாட்களுக்குள் தங்களது கல்வித் தகுதிகளைப் பதிவு செய்து, வேலைவாய்ப்புப் பயிற்சித் துறை அலுவலகத்திலிருந்து பதிவு செய்ததற்கான அட்டையை, தங்களுடைய தகுதிநிலை மாறாமல் பெற்றுக்கொள்ள ஆணையிட்டார்கள். இந்தப் புதிய முயற்சியின் காரணமாக சுமார் 12 இலட்சம் மாணவர்கள் 2011ஆம் ஆண்டில் பயன் பெற்றனர்.

தமிழ்நாடு மாநிலத் தரவு மையம்

❖ தமிழ்நாடு மாநிலத் தரவு மையம், தேசிய மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் மின் ஆளுமைத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான அடிப்படை வசதிகளை வழங்குவதில் முக்கியத் தூணாக விளங்குகிறது. இத்திட்டத்திற்கு 5 ஆண்டு கால செயல்பாட்டிற்காக மத்திய மற்றும் மாநில அரசின் கூட்டுப் பங்குத் தொகையாக ரூ.60.80 கோடி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

❖ அரசுத் துறைகளின் இணையப் பதிவுகள்/செயற்பாடுகள் தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தின் மூலம் பதிவேற்றம் செய்யப்படுகிறது. இப்பதிவுகளை அனைத்துத் துறைகள் / பொதுச் சேவை மையங்கள் / குடிமக்கள் பயன்படுத்த இயலும்.

❖ தமிழ்நாடு மாநிலத் தரவு மையம், 01.08.2011 அன்று வெற்றிகரமாகத் தனது செயலாக்கப் பணிகளைத் தொடங்கியது. தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் , சென்னை மெட்ரோ ரயில் திட்டம், தமிழகத் தேர்தல் ஆணைய வாக்காளர் பட்டியல் திட்டம், விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர், மடிக்கணினி வழங்கும் திட்டம் போன்ற அரசாங்க இணையப் பதிவுகள்/செயற்பாடுகள் இம்மாநிலத் தரவு மையம் வாயிலாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இந்திய நாட்டில் தரவு மையங்களை வெற்றிகரமாக நிறுவிய சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

மாவட்ட மின் ஆளுமைச் சங்கம்

❖ மின் மாவட்டத் திட்டங்களை அனைத்து மாவட்டங்களிலும் செயற்படுத்தும் பொருட்டு மாவட்டங்களில் மின் ஆளுமைச் சங்கங்கள் அமைக்க ஆணை வெளியிடப்பட்டது.

மின் ஆளுமைக்கான முதலமைச்சரின் உயரிய விருது

❖ மின் ஆளுமையின் மூலம் அரசின் சேவைகளை திறம்பட மக்களுக்கு கொண்டுசெல்ல பாடுபடும் துறைகள் மற்றும் மாணவர்களிடையே மின்ஆளுமை

குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் புதுமையான மென்பொருள் உருவாக்குகின்ற போட்டி நடத்தி அதில் வெற்றிபெறும் மாணவர்களுக்கும் "மின் ஆளுமைக்கான முதலமைச்சரின் உயரிய விருது" ஆண்டுதோறும் வழங்கப்படும் என ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன் லிமிடெட்

❖ முந்தைய அரசினால் 4.10.2007 அன்று தொடங்கப்பெற்ற அரசு கேபிள் டிவி நிறுவனம் செயலற்ற நிலையில் இருந்தது. அரசு கேபிள் டிவி நிறுவனத்தை உயிர்ப்பித்து மீண்டும் செயற்பாட்டிற்குக் கொண்டு வந்து கேபிள் சேவையை நியாயமான கட்டணத்தில் வழங்கவேண்டும் என்று பொதுமக்களிடம் பெருத்த எதிர்ப்பார்ப்பு இருந்து வந்தது. மேதகு ஆளுநர் அவர்கள் தமிழக சட்டமன்றத்தில் 3.6.2011அன்று ஆற்றிய உரைக்கிணங்க, இந்நிறுவனத்தின் பெயர் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன் லிமிடெட் என மாற்றம் செய்யப்பட்டதுடன், இந்த அரசால் இந்நிறுவனத்திற்கு ரூ.3 கோடி நிதியுதவி கடனாக வழங்கப்பட்டு புனரமைக்கப்பட்டுப் புத்துயிரூட்டப்பட்டது.

நிறுவனத்தின் சாதனைகள்

❖ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 30.8.2011 அன்று சட்டமன்றத்தில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மாதம் ரூ.70/– என்ற கட்டணத்தில் தனது கேபிள் டிவி சேவையைப் பொதுமக்களுக்கு கேபிள் ஆப்பரேட்டர்கள் மூலம் வழங்கும் என அறிவிப்பு வெளியிட்டார்கள்.

❖ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2.9.2011 அன்று தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கேபிள் டிவி சேவையைத் தொடங்கி வைத்தார்கள்.

❖ 2.9.2011 அன்று தனது சேவையைத் தொடங்கியபோது இந்நிறுவனத்தின் மூலம் இணைக்கப்பட்ட சந்தாதாரர்களின் எண்ணிக்கை 4.94 இலட்சங்கள் என இருந்தது. தற்பொழுது 30.4.2012 வரையில் இணைக்கப்பட்ட சந்தாதாரர்களின் எண்ணிக்கை 46.29 இலட்சங்கள் எனவும் இந்நிறுவனத்தின் இணைப்பு பெற்றுள்ள ஆப்பரேட்டர்களின் எண்ணிக்கை 21,123 எனவும் உயர்ந்துள்ளது. இந்நிறுவனத்தின் சந்தாதாரர்களின் எண்ணிக்கையை ஒரு கோடி என உயர்த்துவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

❖ இந்நிறுவனம் தற்பொழுது கட்டணமில்லாச் சேனல்கள், கட்டணச் சேனல்கள் மற்றும் உள்ளூர் சேனல்களுடன் சேர்த்து மொத்தம் 100 சேனல்கள் வரை பொதுமக்களுக்கு வழங்கி வருகிறது.

அயராத உழைப்பால் புதுயுகம் படைக்கும் செய்தித்துறை

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர்
திரு. **கே.டி. ராஜேந்திரபாலாஜி** அவர்கள்

செய்தி–மக்கள் தொடர்பு

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உறுதியான தலைமையின் கீழ், செய்தி–மக்கள் தொடர்புத் துறை கடந்த ஓராண்டில் அரசின் திட்டங்களையும், சாதனைகளையும் மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதில் கீழ்க் குறிப்பிட்டுள்ள செயல்பாடுகளால் முன்னணி வகிக்கிறது.

மக்கள் தொடர்பு

- ❖ அனைத்து ஊடகங்களுக்கு வீடியோ காட்சிகள் மற்றும் புகைப்படங்களை உடனுக்குடன் அனுப்பி வைக்க ரூ 78 இலட்சம் செலவில் ஊடக மையம்.
- ❖ ரூ 82 இலட்சம் மதிப்பில் நவீன டிஜிட்டல் புகைப்படக் கருவிகள்.
- ❖ ரூ 2.26 கோடி மதிப்பில் 34 புதிய வாகனங்கள்.
- ❖ மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் ரூ 70 இலட்சம் செலவில் புதுப்பித்தல்.

- ❖ பழைய புகைப்படச்சுருள்கள் டிஜிட்டல் முறையில் பாதுகாப்பு.
- ❖ ரூ 68 இலட்சம் மதிப்பில் அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் டிஜிட்டல் திரை அமைப்பு.

திரைப்படப்பிரிவு

- ❖ 12 வீடியோ செய்தி மலர் மற்றும் 12 குறும்பாடல்கள் வெளியீடு.
- ❖ ரூ 75 இலட்சம் மதிப்பில் செய்திப் படங்கள் டிஜிட்டல் முறையில் பாதுகாப்பு.
- ❖ 9ஆவது சென்னை–சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு ரூ 25 இலட்சம் நிதி உதவி.

அரசுப் பொருட்காட்சி

- ❖ ஒவ்வொரு ஆண்டும், 9 மாவட்டங்களில் அரசுப் பொருட்காட்சிகள்.
- ❖ அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் மாவட்டத் தலைநகரங்களிலும் புகைப்படக் கண்காட்சிகள்.

- ❖ அனைத்து மாவட்டங்களிலும் பல்துறைப் பணிவிளக்கக் கண்காட்சி மற்றும் புகைப்படக் கண்காட்சிகள்.
- ❖ தலைமைச் செயலகத்தில் ரூ 14 இலட்சம் மதிப்பில் புதுப்பிக்கப்பட்ட புகைப்படமாடம்.

பத்திரிகையாளர் நலன்

பத்திரிகையாளர் நலனில் எப்பொழுதும் அக்கறை காட்டும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி இத்துறை பல நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

- ❖ பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ 5,000லிருந்து ரூ 6,000ஆக உயர்வு.
- ❖ பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் ரூ 2,500லிருந்து ரூ 3,000ஆக உயர்வு.
- ❖ சென்னையில் ரூ 39 இலட்சம் மதிப்பில் சென்னை நிருபர்கள் சங்கக் கட்டடம்.
- ❖ ரூ 20 இலட்சம் மதிப்பில் தலைமைச் செயலக செய்தியாளர் அறை புதுப்பிப்பு.
- ❖ 127 பத்திரிகையாளர்களுக்குக் குறைந்த விலையில் வீட்டு மனைகள்.

நினைவகங்கள்

- தருமபுரியில் ரூ 40 இலட்சம் மதிப்பில் தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம்.
- ரூ 69 இலட்சம் மதிப்பில் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் மணிமண்டபம்.
- திண்டுக்கல்லில் ரூ 69 இலட்சம் மதிப்பில் சுதந்திரப் போராட்ட வீரர் கோபால்சாமி நாயக்கர் நினைவகம்.
- சீர்காழியில் ரூ 1. 51 கோடியில் தமிழிசை மூவர் மணிமண்டபம்.
- புரட்சித் தலைவர் எம்ஜிஆர் பேரறிஞர் அண்ணா மற்றும் அண்ணல் காந்தியடிகள் ஆகியோரின் நினைவு மண்டபங்கள் ரூ20.90 கோடி மதிப்பில் புனரமைப்பு.
- சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மற்றும் சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் ஆகியோருக்கு சென்னையில் மணிமண்டபங்கள் அமைக்க ஆணை.
- சேலம் மாவட்டம் சங்ககிரியில் சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலைக்கு நினைவுச் சின்னம் அமைக்க ஆணை.
- மணிமண்டபங்கள் மற்றும் கலையரங்கப் பராமரிப்புக்கு 32 புதிய பணியிடங்கள் உருவாக்கம்.

திருவுருவச் சிலைகள்

- கன்னியாகுமரி மாவட்டம் களியக்காவிளையில் மொழிப்போர் தியாகி சிதம்பரநாதனுக்கு ரூ 8.75 இலட்சம் செலவில் திருவுருவச் சிலை.
- மொழிப்போர் தியாகி கீழப்பழுவூர் சின்னச்சாமிக்கு திருச்சியில் ரூ 9 இலட்சம் செலவில் சிலை.
- கவிமணி தேசிக விநாயகம்பிள்ளைக்கு கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரத்தில் சிலை.
- மெரினாக் கடற்கரையில் அண்ணல் காந்தியடிகளின் சிலை புனரமைப்பு.
- சென்னையில் உள்ள காமராஜர் நினைவு இல்லம் மற்றும் கன்னியாகுமரியில் உள்ள காமராஜர் மணிமண்டபம் புதுப்பிக்க ஆணை.

பிறந்தநாள் விழாக்கள்

- அன்னை தெரசாவின் நூற்றாண்டு நிறைவு விழா.
- இரட்டைமலை சீனிவாசன் பிறந்த நாள் அரசு விழாவாக முதன் முறையாகக் கொண்டாடப்பட்டது.
- தென்னிந்தியத் திரையுலக முதல் பெண் இயக்குநர் நடிகை டி.பி.இராஜலட்சுமியின் நூற்றாண்டு விழாக் கொண்டாட ஆணை.
- இதேபோன்று சிறப்புமிக்க பெருந்தலைவர்களின் பிறந்த நாள் விழாக்களையும் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது.

அரங்கங்கள்

- ❖ கும்பகோணம் மகாமகம் கலையரங்கம் ரூ 63 இலட்சம் மதிப்பில் புதுப்பிப்பு.
- ❖ கலைவாணர் அரங்கம் பிரம்மாண்டமான அளவில் கட்ட நடவடிக்கை.

எம்ஜி ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்

- ❖ ரூ 1.50 கோடி மதிப்பில் குளிர் சாதன வசதியுடன் நவீன படப்பிடிப்புத் தளம்.
- ❖ ரூ 15 இலட்சம் மதிப்பில் நவீன டிஜிட்டல் திரைப்படக் கருவி.
- ❖ மாணவர்கள் குறும்படம் தயாரிக்க உதவித்தொகை ரூ 15 ஆயிரமாக உயர்வு.
- ❖ ரூ 9.5 கோடி செலவில் புதிதாக அனிமேசன் பாடப்பிரிவு.
- ❖ ரூ 1.54 கோடி மதிப்பில் முன்காட்சித் திரையரங்கினை நவீனப்படுத்துதல்.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்

என்ற பொய்யாமொழிக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு எடுத்திட்ட சிறப்பான நடவடிக்கைகளால், கால வளர்ச்சிக்கு ஏற்ற நவீன வழிமுறைகளை எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை தனது அச்சுப் பணிகளில் விரைவாகவும், முறையாகவும் செயல்பட்டு வருகிறது.

அரசு அச்சகங்கள் நவீனமயம்

- ❖ அரசு மைய அச்சகத்தினை நவீனமயமாக்கிட ரூ 9.50 கோடி நிதி.

தொழிலாளர் நலன்

- ❖ அரசு அச்சகங்களில் பணிபுரியும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு இரவு நேரப்படி மாதம் ரூ 750 ஆக உயர்வு.
- ❖ பணியாளர்களுக்கு மாதச் சிற்றுண்டிப்படி ரூ.200 ஆக உயர்வு.
- ❖ பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் மனமகிழ் மன்றத்திற்கு வழங்கப்படும் ஆண்டுத்தொகை ரூ.2 இலட்சம் ஆக உயர்வு .
- ❖ மாதஈடுசெய்ப்படி ஒன்றிற்கு ரூ 150 ஆக உயர்வு.
- ❖ உயர்நீதிமன்ற அச்சகப் பணியாளர்களுக்கு மாதம் ரூ 300 சிறப்பு ஊதியம்.
- ❖ நூல் கட்டுநர் இடர்ப் படி மாதம் ரூ 200 ஆக உயர்வு.

திருநங்கையர் நலன்

- ❖ அரசு இதழில் கட்டணமில்லாமல் திருநங்கைகளுக்குப் பெயர் மாற்றம்.

சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை

❖ தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முதன்முறையாக சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை உருவாக்கம்.

மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்ஸி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டம்

❖ 30.06.2011 அன்றைய நிலையில் அரிசி பெறத் தகுதியுடைய பயனாளிகளின் எண்ணிக்கை 1.85 கோடி குடும்ப அட்டைதாரர்கள்.

❖ 14.05.2012 வரை மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்ஸி மற்றும் கிரைண்டர் வழங்கப்பட்டுப் பயனடைந்த பயனாளிகள் எண்ணிக்கை 16.73 இலட்சம்.

❖ பயனாளிகளுக்கு வசதியாக மின்விசிறி, மிக்ஸி மற்றும் கிரைண்டர் பழுதுபார்க்க 1,033 சேவை மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

❖ இத்துறையின் செயற்பாட்டிற்காக அனைத்து மாவட்டங்களிலும் 32 துணை ஆட்சியர் உட்பட 839 பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மலைப்பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு மின்காந்த அடுப்பு வழங்கும் திட்டம்

❖ நீலகிரி மாவட்டம் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் ஆகிய மலைப்பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு மின்விசிறிகளுக்குப் பதிலாக மின்காந்த அடுப்பு வழங்கப்படுகிறது.

- 2011–12ஆம் ஆண்டில் 34,000 குடும்ப அட்டைதாரர்களுக்கு மின்காந்த அடுப்புகள் வழங்கப்பட உள்ளன. இதுவரை 25,351 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாணவ/மாணவியருக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம்

- 14.05.2012 வரை 2.31 இலட்சம் மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு 1.91 இலட்சம் மடிக்கணினிகள் தகுதியுடைய தொழில்நுட்பக்கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் கலை/அறிவியல் கல்லூரிகளில் இறுதி ஆண்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

- மடிக்கணினிகள் பராமரிக்கத் தேவையான சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- மக்கள் நலன் பெறும் நலத்திட்ட உதவிகள் நாள்தோறும் வழங்கப்படுகின்றன.

தொழிலாளர் நலம் காக்கும் திட்டங்கள்

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்
திரு. **எஸ்.டி. செல்லபாண்டியன்** அவர்கள்

- அனைத்து மாவட்டங்களிலுள்ள சட்ட அமலாக்க அலுவலர்கள் மற்றும் மாவட்ட சிறப்புத் தடுப்புப் படைகள் மூலம், குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றும் வகையில் 95,655 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 23 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டு, ரூ.2,60,000/– அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

- 2011–12ஆம் கல்வியாண்டில், தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின் கீழ் மருத்துவம், பொறியியல் மற்றும் கலை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயின்று வரும் முன்னாள் குழந்தைத் தொழிலாளர் 214 பேர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை ரூ.250/–லிருந்து ரூ.500/–ஆகத் தற்போது உயர்த்தப்பட்டு அவர்களது கல்விக் காலம் முழுமைக்கும் வழங்கப்படுகிறது.

- பீடித் தொழிலாளர்கள் வீடு கட்டிக்கொள்ளும் வகையில், வீடுகட்ட ஆகும் மொத்த செலவுத் தொகை ரூ.45,000/–இல் மத்திய அரசின் சார்பில் ரூ.40,000/–மும் தொழிலாளியின் பங்குத் தொகையான ரூ.5,000/–ஐ மாநில அரசு மானியமாகவும் வழங்கி வருகிறது. மாநில அரசு தனது பங்குத் தொகையை ரூ.5,000/–லிருந்து ரூ.60,000/–மாக உயர்த்தி வழங்கியுள்ளது. இதன்படி ஒரு வீட்டின் மொத்தக் கட்டுமானச் செலவு ஒரு இலட்சம் ரூபாயாகும்.

- தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் மூலம் 25,392 தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்குப் பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் மொத்தம் ரூ.1.05 கோடி செலவிடப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் கீழ் சென்னையில் செயற்பட்டு வரும் 'ஜீவா இல்லம்' (தொழிலாளர் பிரதிநிதிகள் தங்கும் விடுதி), ரூ.30 இலட்சம் செலவில் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

❖ 17 அமைப்புசாரா நல வாரியங்களில் 55,28,706 தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும் 18,71,659 பயனாளிகளுக்குப் பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் மொத்தம் ரூ.460.24 கோடி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

❖ 4,71,513 பயனாளிகளுக்கு ரூ.102.06 கோடி நல உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் 3,64,086 தொழிலாளர்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

❖ அமைப்பு சாரா நல வாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு நலத்திட்டங்களை மின்னணுப் பரிமாற்றம் மூலம் வங்கிகள் வழியாக வழங்கும் முன்னோடித் திட்டம் திருவள்ளூர், காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, கோவை, தூத்துக்குடி கன்னியாகுமரி ஆகிய 6 மாவட்டங்களில் 1.12.2011 முதல் செயற்பட்டு

வருகிறது. மேற்கண்ட ஆறு மாவட்டங்களிலுள்ள முன்னோடி வங்கிகளைத் தொடர்பு கொண்டு தொழிலாளர்களுக்கு இருப்பில்லா வங்கிக் கணக்கு தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்து 60 வயது நிறைவடைந்த தொழிலாளர்களுக்கு மாத ஓய்வூதியம் ரூ.500/– லிருந்து ரூ.1,000/– ஆக உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. 9,682 ஓய்வூதியதாரர்கள் பயனடைந்துள்ளனர்.

❖ 2,199 புதிய தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டதன் விளைவாக 47,360 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

❖ அமலாக்க அலுவலர்களின் தீவிர நடவடிக்கையின் விளைவாக 2,162 தொழிற்சாலைகளில் 40,891 தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

❖ குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் 1,602 தொழிலாளர்கள் பயனடையும் வகையில் ரூ. 80.92 இலட்சம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

❖ சட்ட விதி மீறல்கள் காணப்பட்ட நிருவாகத்தினர் மீது பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் 5,746 வழக்குகள் தொடரப்பட்டு ரூபாய் 2.34 கோடி நீதிமன்ற அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

❖ பட்டாசு, இரசாயனம், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மற்றும் சாயப்பட்டறைகளில் விபத்து நிகழ்வுகளைக் கட்டுப்படுத்திப் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகளை எடுத்துரைத்திட ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பு பிரச்சாரக் குழுக்கள் 4,392 தொழிலாளர்கள் பயனடையும் வகையில் 73 பிரச்சார முகாம்களை நடத்தியுள்ளது.

❖ தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையைச் சார்ந்த மாவட்ட அளவிலான அலுவலர்கள் தொழிலாளர்களுக்கும் நிருவாகத்தினருக்கும் பாதுகாப்பான முறையில் பணிபுரியும் முக்கியத்துவம் குறித்துக் கற்பிப்பதற்காகத் தொழிற்சாலை வளாகத்திலேயே கட்டணம் ஏதுமின்றி 22,725 தொழிலாளர்கள் பயனடையும் வகையில் 496 பயிற்சி வகுப்புகளைத் தமிழில் நடத்தியுள்ளனர்.

- ❖ அண்மைக் காலத்தில் தொழிற்சாலைகளில் 57 விபத்துகள் நிகழ்ந்துள்ளன. அவற்றில் 21 விபத்துகள் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் நடைபெற்றுள்ளன. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது கணிசமாகக் குறைந்துள்ளது. ஆனால் எதிர்காலத்தில் விபத்துகளை முழுமையாகத் தடுத்திடும் நோக்கில் சிவகாசியில் பாதுகாப்புப் பயிற்சி மையம் 28.4.2012 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

- ❖ பழைய சீருந்துகளுக்குப் பதிலாக புதியதாக 14 சீருந்துகள் வாங்குவதற்கு ரூ. 75 இலட்சம் நிதி ஒதுக்கீடும், கணினி சார்ந்த பொருட்கள் மற்றும் இதர கருவிகள் வாங்குவதற்கு ரூ. 2.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை நவீனப்படுத்தப்பட்டும், வலுப்படுத்தப்பட்டும் உள்ளது.

- ❖ கட்டுமானத் தொழிலில் உள்ள தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்பு மற்றும் நல விதிகளை உறுதி செய்திடும் வகையில் கட்டுமானம் மற்றும் இதர கட்டடத் தொழிலாளர்கள் சட்டம் மற்றும் விதிகளின் கீழ் அமலாக்க அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்ட தொழிற்சாலைகள் ஆய்வகத்துறை அலுவலர்கள் 929 கட்டுமான நிறுவனங்களைப் பதிவு செய்துள்ளனர்.

- ❖ பாதுகாப்புச் செயற்திறனை மேம்படுத்திட தொழிற்சாலை நிருவாகங்களை ஊக்கப்படுத்திடும் நோக்கில் ஒவ்வொரு ஆண்டும் 90 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாநில பாதுகாப்பு விருதுகளின் முதல் பரிசின் விருதுத் தொகை மதிப்பு ரூ.2,500/–லிருந்து ரூ.5,000/–ஆகவும், 90 நிறுவனங்களுக்கு வழங்கப்படும் இரண்டாவது பரிசின் விருதுத் தொகை மதிப்பு ரூ.1,500/–லிருந்து ரூ.4,000/– ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

- ❖ ஆன்லைன் முறையில் பத்தாம் வகுப்புத் தேர்ச்சி பெற்ற 7,02,962 மாணவ மாணவியரும், மேனிலை வகுப்பு (+2) தேர்ச்சி பெற்ற 4,79,717 மாணவ, மாணவியரும் வேலை வாய்ப்பகங்களுக்கு நேரில் செல்லாமல் அவரவரது பள்ளிகளிலேயே பதிவு செய்து பயன்பெற்றனர்.

- ❖ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.15 கோடி செலவில் முதற்கட்டமாக பத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

- தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் ஏழை எளிய மாணவர்களுக்கு ஆண்டுதோறும் இரண்டு சீருடைகளும், ஒரு இணை காலணியும் விலையின்றி வழங்கிட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- ரூ. 8 கோடி செலவில் இதுவரை 31,502 வேலையில்லா இளைஞர்களுக்குப் பல்வேறு குறுகிய காலப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.
- கடலூர் அரசு மகளிர் தொழிற்பயிற்சி நிலையத்திற்குத் தனிக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.2.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- மதுரை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, சென்னை அயனாவரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை மற்றும் கோயம்புத்தூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் ஆயுர்வேதப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.
- சிவகாசி, திருச்சி, சேலம், வேலூர் மற்றும் ஓசூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் யோகாசனப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.
- 8,666 தொழிலாளர்களின் வசதிக்காகக் கன்னியாகுமரி மாவட்டம் தக்கலையில் '3 மருத்துவர் வகை' மருந்தகமும், மணவாளக் குறிச்சியில் '2 மருத்துவர் வகை' மருந்தகமும் அமைக்க அரசு ஆணை வெளியிட்டுள்ளது.
- சென்னை அயனாவரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் ஓமியோபதி பிரிவு துவக்கி வைக்கப்பட்டுள்ளது. யுனானி பிரிவு விரைவில் துவக்கி வைக்கப்படும்.
- பத்து தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் சித்த மருத்துவப் பிரிவுகளைத் தொடங்க அரசு ஆணை வழங்கியுள்ளது.
- அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 189 பதிவுதாரர்களுக்கு அயல்நாட்டில் பணி வழங்கியுள்ளது.

மக்கள் நலம் பேணும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
டாக்டர் **வி.எஸ். விஜய்** அவர்கள்

❖ "முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்" என்ற புதிய காப்பீட்டுத் திட்டம் தொடங்கப்பட்டு, ஆண்டு வருமானம் ரூ.72,000/– த்திற்குக் குறைவாக உள்ள ஒரு குடும்பத்திற்கு ஆண்டொன்றிற்கு ஒரு இலட்சம் வரையிலும் சில குறிப்பிட்ட சிகிச்சைகளுக்கு ரூ.1.50 இலட்சம் வரையிலும் காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. இப்புதிய திட்டத்தில் 1,016 உயிர் காக்கும் சிகிச்சைகள் சேர்க்கப்பட்டு 98 அரசு மருத்துவமனைகளும் 699 தனியார் மருத்துவமனைகளும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

❖ இத்திட்டத்தில் 10.05.2012 வரை 48,868 நபர்கள் ரூ.124.09 கோடி செலவில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

❖ கருவுற்ற தாய்மார்கள் தங்களின் ஊட்டச்சத்து நிலையை உயர்த்தவும், சுகாதார நிலையை மேம்படுத்தவும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் நிதியுதவி ரூ.12,000/–ஆக உயர்த்தப்பட்டு, 6.50 இலட்சம் பயனாளிகளுக்கு ரூ. 515.05 கோடி வழங்கப்பட்டுள்ளது.

❖ மக்களின் தேவைக்கேற்ப ரூ.7.71 கோடி செலவில் 20 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களும் திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் தொகுதியில் ரூ. 1.14 கோடி செலவில் மூன்று புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

❖ 38 ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

❖ நகரப்பகுதிகளில் 75 புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்திட அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 60 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேவையான பணியாளர்கள் மற்றும் உபகரணங்களுடன் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநரின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளன.

❖ 1,539 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணி நேர மகப்பேற்றுச் சேவைத் திட்டம் செயற்பாட்டில் உள்ளது. தடையில்லா மகப்பேற்றுச் சேவை அளிக்கும் வகையில் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் மூன்று செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். கிராம மக்களுக்கு எப்பொழுதும் மகப்பேற்றுச் சேவை கிடைக்கும் வகையில் 73 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் அனைத்து 1,612 சுகாதார நிலையங்களும், 24 மணி மகப்பேற்றுச் பிரசவ சேவையை வழங்கி வருகிறது.

- ரூ.3.92 கோடி செலவில் ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையை மேம்படுத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

- ஆரம்ப சுகாதார நிலையங்களின் மேம்பாட்டிற்காக ரூ.41.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டு இவ்வாண்டு செப்டம்பர் மாத இறுதியில் பணிகள் நிறைவடையும். மேலும் 8 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் மகப்பேறு மற்றும் குழந்தைகள் துறைகளை மேம்படுத்த ரூ.56 கோடி தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் கட்டுமானப்பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

- புது தில்லி அனைத்து இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தில் உள்ள வசதிகளுக்கு இணையான வசதிகள் கொண்ட பன்முக உயர் சிறப்பு மருத்துவமனை ஒன்றை சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் நிறுவ அரசு திட்டமிட்டுள்ளது. பொது மக்கள் உயர் சிறப்பு சிகிச்சை வசதியை அவர்களுக்கு அருகில் உள்ள மையத்திலேயே பெறுவதை இந்தச் சிறப்பு மருத்துவமனை உறுதி செய்யும். தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, இந்தச் சிறப்பு மருத்துவமனை மக்களின் பயன்பாட்டிற்காக விரைவில் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. “அ” பகுதி கட்டடத்தைப் பன்முக உயர்சிறப்பு மருத்துவமனையாக மாற்ற ரூ.26.92 கோடிக்கு நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. உபகரணங்கள் வாங்க, ரூ. 80 கோடி வழங்கப்பட்டு கொள்முதல் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

- சுகாதாரத் துறைக்கு எனத் தனியாக மருத்துவப் பணிகள் தேர்வு வாரியம் ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்தப் புதிய வாரியம் அனைத்து மருத்துவம் சார்ந்த காலிப் பணியிடங்களை வேலைவாய்ப்பகம் மூலம் நிரப்ப நடவடிக்கை எடுக்கும்.

- மிகப்பெரிய அளவில் செயற்படுத்தப்படும் நடமாடும் மருத்துவமனைத் திட்டத்தில் ரூ.29.36 கோடி செலவில் தற்போதுள்ள 385 வாகனங்கள் கூடுதல் பணியாளர்கள், ஆய்வக வசதிகள் மற்றும் இதர பரிசோதனை வசதிகளுடன் வலுப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. திட்டமிட்ட பயண அட்டவணைப்படி தொலைதூரக் கிராமங்களுக்கு மருத்துவ குழுக்கள் சென்று சேவை செய்யும்.

- கிராமப்புற வளரிளம் பெண்களுக்கும் மற்றும் பெண் சிறை கைதிகளுக்கும் விலையில்லா சானிட்டரி நாப்கின்கள் மாநிலம் முழுவதும் வழங்க அரசால் அறிவிக்கப்பட்டு, இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ரூ.44.21 கோடி வழங்கப்பட்டுள்ளது. நாட்டிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் மாநில நிதியிலிருந்து மாநிலம் முழுவதும் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

- உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்துக் கட்டுப்பாட்டு நிருவாகம் என்ற புதிய துறையை அரசு ஏற்படுத்தி ரூ.86.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- மேலும், 60 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவப் பிரிவுகளை ரூ.2.20 கோடி செலவில் ஏற்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது.

- அனைத்து மாவட்டத் தலைமை மருத்துவமனைகளுக்கும் உயிர் காக்கும் உபகரணங்கள் ரூ.55 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

- திருச்சி அண்ணல் காந்தி நினைவு அரசு மருத்துமனையை சுமார் ரூ.100 கோடி மதிப்பீட்டில் சிறப்பு சிகிச்சை மையமாக மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டமாக கட்டடம் கட்டுவதற்காக 13ஆவது நிதிக்குழுவின் நிதியிலிருந்து அரசு

ரூ.53.97 கோடி நிதி வழங்கியுள்ளது. கட்டடப்பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

❖ பொது சுகாதாரத் துறைக்கு ரூ.14 கோடி செலவில் 367 புதிய வாகனங்கள் வழங்கப்படவுள்ளன.

❖ ரூ.3.96 கோடி செலவில் கோவை, திருப்பூர், விருதுநகர் அரசு மருத்துவமனைகளில் கூடுதல் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டன.

❖ ரூ. 1.30 கோடி செலவில் 30 மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனைகளில் ரத்தசெல் பகுப்பாய்வு மையங்கள் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

❖ 27 அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைகளுக்கு ரூ.4.05 கோடி செலவில் Operating Laparoscopy கருவி மற்றும் 4 அரசு மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளுக்கு ரூ. 7 கோடி செலவில் சி.டி.ஸ்கேன் கருவி வழங்கிட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

❖ தடுப்பூசிச் சேவையை மருத்துவமனைகளில் வழங்குவது மட்டுமின்றி, அனைத்துக் கிராமங்களிலும் உள்ள குழந்தைகள் பயனடையும் வகையில் ஒவ்வொரு புதன்கிழமையும், கிராம சுகாதார செவிலியர் மூலமாகத் தடுப்பூசி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. மத்திய அரசு பெண்டாவேலண்ட் தடுப்பூசியை அறிமுகப்படுத்த தமிழகத்தைத் தேர்வு செய்துள்ளது. இத்திட்டம் தமிழகத்தில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

❖ கிராமப்புற பெண்களிடையே ஆரோக்கியமான நடைமுறைகளைக் கடைபிடிப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்த கிராமப்புற பெண்கள் நலவாழ்வு என்ற புதிய திட்டத்தை ரூ.2 கோடியே 70 இலட்சம் செலவில் செயற்படுத்த அறிவிக்கப்பட்டுள்ளது.

❖ தொலைதூர கிராமங்களில் வசிக்கும் ஏழை, எளிய மக்களுக்கு உயர் மருத்துவ ஆலோசனை கிடைக்கும் வகையில், 5 கோடி ரூபாய் செலவில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் Tele Medicine வசதிகள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

❖ அவசரகால சிசேரியன் அறுவை சிகிச்சை மற்றும் ரத்தம் செலுத்தும் வசதியுடன் 24 மணி நேரமும் இயங்கும் வகையில் சுகாதார மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் ஒரு மையம் வீதம் 42 இரண்டாம் நிலை தாய் – சேய் நல மையங்கள் ஏற்படுத்தவும், தேர்ந்தெடுக்கப்பட்ட 31 துணை சுகாதார நிலையங்களில் 24 மணி நேர மகப்பேற்றுச்சேவை வழங்கும் வகையில் முதல் நிலை தாய் – சேய் நல மையங்கள் ஏற்படுத்தவும் ஆணையிடப்பட்டுள்ளது.

புனிதப் பயணங்களுக்கு புதிய நிதியுதவி

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர்

திரு. **அ. முஹம்மத்ஜான்** அவர்கள்

- ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் 05.07.2011 முதல் ஓராண்டுக் காலத்திற்கு திருத்தியமைக்கப்பட்டது.
- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்குத் தற்போது அளிக்கப்பட்டு வரும் 50 விழுக்காடு இடஒதுக்கீட்டினை வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் தொடர்ந்து கடைபிடிக்க 11.07.2011 அன்று அரசு ஆணை வெளியிட்டது.
- கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு வழங்கப்படும் ஆண்டுப் பராமரிப்பு மானியம் நான்கு இலட்சம் ரூபாயிலிருந்து ஒரு கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது. 51 தமிழாசிரியர் பணியிடங்கள் புதிதாக உருவாக்கப்பட்டன. மேலும், கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் நடைபெறும் ஒன்பது பள்ளிகள் நிலை உயர்த்தப்படவுள்ளன.
- பிரமலைக் கள்ளர் வகுப்பு மாணவர்களுக்காக மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் 15 பள்ளிகளில் ஆங்கில வழி பாலர் வகுப்புகள் (LKG) தொடங்கப்பட்டுள்ளன.
- கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை ரூ.10,000/–, ரூ.7,000/– மற்றும் ரூ.5,000/– என உயர்த்தப்பட்டுள்ளன.
- அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியரை அரசுப் பொதுத் தேர்வில் 95 விழுக்காடு மற்றும் அதற்கு அதிகமாக தேர்ச்சி பெறச்செய்யும் உயர்நிலை / மேனிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்குத் தலா ரூ.10,000/– பரிசுத்தொகை மற்றும் நற்சான்றிதழ் வழங்கும் புதிய திட்டத்தினை 2011–2012 ஆம் கல்வியாண்டு முதல் செயற்படுத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

❖ ரூ.40 இலட்சம் செலவில் இரு கள்ளர் சீரமைப்பு மேனிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக் கூடங்கள் கட்டவும், 9 கள்ளர் சீரமைப்பு மேனிலைப் பள்ளிகளுக்கு ரூ.19.77 இலட்சம் செலவில் ஆய்வக உபகரணங்கள் வழங்கவும், 8 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு ரூ.46 இலட்சம் செலவில் கழிப்பறைகள் அமைக்கவும், 2 கள்ளர் சீரமைப்பு மேனிலைபள்ளிகளுக்கு ரூ.21.58 இலட்சம் செலவில் கூடுதல் வகுப்பறைகள் கட்டவும் ஆணையிடப்பட்டுள்ளது.

❖ 84 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்காக 64.48 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவ மாணவியருக்குத் தற்போது அளிக்கப்படும் மாத உணவுப்படி 450 ரூபாயிலிருந்து 650 ரூபாயாகவும், கல்லூரி மாணவ மாணவியருக்கு 550 ரூபாயிலிருந்து 750 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

❖ 25 கல்லூரி விடுதிகளும், இஸ்லாமிய சிறுபான்மையின மாணவியருக்கு 3 பள்ளி விடுதிகளும் தொடங்கப்பட்டுள்ளன.

❖ விடுதிகளில் கூடுதலாக 10 விழுக்காடு சேர்க்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

❖ 500 பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்குப் புதிய சமையல் பாத்திரங்கள் ரூ.50 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

❖ 50 பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்குப் புதிதாக அரைவை இயந்திரங்கள் ரூ.6.25 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

❖ மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கி 10 மற்றும் 12 ஆம் வகுப்புப் பயின்று அரசுப் பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்றால் வழங்கப்படும் பரிசுத் தொகையை ரூ.10,000/–, ரூ.7,000/– ரூ.5,000/– என உயர்த்தி வழங்கப்படுகிறது.

❖ பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் தங்கி 10 மற்றும் 12ஆம் வகுப்புப் பயின்று அரசுப் பொதுத் தேர்வில் மாநில அளவில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது மதிப்பெண்கள் பெறும் மாணவ மாணவியருக்கு மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ மாணவியருக்கு வழங்கப்படுவதைப் போன்று ரூ.10,000/–, ரூ.7,000/– ரூ.5,000/– என்ற அளவில் பரிசுகள் உயர்த்தி வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

- அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ மாணவியருக்கு வழங்கப்படும் மாதந்திர உணவு மானியம் ரூ.450/– லிருந்து ரூ.650/– ஆக உயர்த்தி வழங்கப்படுகின்றன.

- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கியுள்ள மாணவ மாணவியருக்குப் பல்வகைச் செலவினம் ரூ.50/– மற்றும் ரூ.75/– என உயர்த்தி வழங்கப்படுகின்றன.
- 70 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு எரிவாயு இணைப்புகள் (LPG) ரூ.28 இலட்சம் செலவில் வழங்கப்படவுள்ளன. 2 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளுக்கு ரூ.57.09 இலட்சம் செலவில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 2 பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிகளுக்கு ரூ.12 இலட்சம் செலவில் பாதுகாப்புச் சுவர் கட்டப்பட்டு வருகின்றன.
- 2011–2012 ஆம் ஆண்டு முதல் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலவிடுதிகளில் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகள் தங்கிப் பயிலும் வகையில், ஒவ்வொரு விடுதியிலும் தலா 5 இடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- பொதுப் பரிசுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டு ரூ.3,000/–, ரூ.2,000/–, ரூ.1,000/– என்பது ரூ.6,000/–, ரூ.4,000/–, ரூ.2,000/– என வழங்கப்படுகின்றன.
- 2011–2012 ஆம் ஆண்டில் அரசு, அரசு நிதி உதவி பெறும் மற்றும் பகுதியாக நிதி உதவிபெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயின்ற பிற்படுத்தப்பட்டோர்,

மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த 4,38,749 மாணவ, மாணவியருக்கு ரூ.112.08 கோடி செலவில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

- 2011–2012 ஆம் ஆண்டில் பல்வேறு கல்வி உதவித்தொகை திட்டங்களின் கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த 5,23,985 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.115.71 கோடி செலவிடப்பட்டுள்ளது.
- 2011–2012 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த 2,005 பயனாளிகளுக்கு ரூ.66.24 இலட்சம் செலவில் விலையில்லா தையல் இயந்திரங்களும், 2,293 பயனாளிகளுக்கு ரூ.85 இலட்சம் செலவில் விலையில்லா சலவைப் பெட்டிகளும் வழங்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு வழங்கப்படும் நிருவாக மானியம் 45 இலட்ச ரூபாயிலிருந்து, ஒரு கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- உலமாக்கள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 2,400–லிருந்து 2,600ஆக உயர்த்தப்பட்டும் 750 ரூபாயாக உள்ள மாதாந்திர ஓய்வூதியம் 1,000 ரூபாயாக உயர்த்தியும் வழங்கப்படுகிறது.
- வக்ஃப் வாரிய ஓய்வூதியதாரர்களுக்கு நிலுவையிலுள்ள ஓய்வூதியம் உள்ளிட்ட பணிக்கொடைகளை வழங்க ஒருமுறை மானியமாக மூன்று கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு வஃக்பு வாரியத்திற்கு, மசூதிகள் மற்றும் தர்காக்கள் புனரமைப்பிற்காக ரூ.60 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ் மாநில ஹஜ் குழுவிற்கு வழங்கப்பட்டுவரும் ஆண்டு நிருவாக மானியம் ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- இந்த அரசால் கொண்டுவரப்பட்ட புதிய திட்டமான கிறிஸ்தவர்கள் தங்களது புனிதத்தலமான ஜெருசலம் சென்றுவர நிதியுதவி அளிக்கும் திட்டத்திற்காக ஒரு கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 31.03.2012 வரை 22,382 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பயனாளிகளுக்கு ரூ. 43.23 கோடியும், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 31.03.2012 வரை சிறுபான்மையினத்தைச் சார்ந்த 5,459 பயனாளிகளுக்கு ரூ.14.07 கோடியும் கடனாக வழங்கப்பட்டுள்ளன.

பொற்காலம் படைக்கும் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்
திரு. **எம்.எஸ்.எம். ஆனந்தன்** அவர்கள்

இந்து சமய அறநிலையத் துறை

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையின் கீழ் புதிய சகாப்தம் படைத்து வரும் இந்து சமய அறநிலையத்துறை எண்ணற்ற புதிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அன்னதானத்திட்டம்

❖ 106 திருக்கோயில்களில் விரிவாக்கப்பட்டு 468 திருக்கோயில்களில் அன்னதானத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நாள் முழுதும் அன்னதானம்

❖ ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி மற்றும் பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில்களில் நாள்முழுவதும் அன்னதானத்திட்டம் செயல்படுத்திட நடவடிக்கை.

யானைகள் நலவாழ்வு முகாம்

❖ முதுமலை, தெப்பக்காட்டில் மீண்டும் "யானைகள் நலவாழ்வு முகாம்".

மின்கல மகிழுந்துகள்

❖ திருக்கோயில்களுக்கு வருகை தரும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர் வசதிக்காக ஸ்ரீரங்கம், பழனி, திருச்செந்தூர், திருத்தணி, திருவாரூர், திருவண்ணாமலை, திருவொற்றியூர், திருவானைக்காவல் ஆகிய திருக்கோயில்களில் மின்கல மகிழுந்துகள்.

குடமுழுக்குகள் மற்றும் திருப்பணி நிதியுதவித்திட்டங்கள்

❖ 1,006 திருக்கோயில்களுக்குத் திருப்பணி குடமுழுக்கு.

❖ திருக்குளத் திருப்பணிகளால் 364 திருக்குளங்கள் சீரமைப்பு.

❖ தொன்மையான 94 திருக்கோயில்களை மரபு மாறாமல் புனரமைக்க ரூ 22.50 கோடி நிதியுதவி.

❖ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பகுதியில் உள்ள திருக்கோயில்களைப் புதுப்பிக்க திருக்கோயில் ஒன்றுக்கு வழங்கப்படும் நிதியுதவி ரூ 25,000 லிருந்து ரூ 50,000 ஆக உயர்வு. 300 திருக்கோயில்களுக்கு ரூ 1.50 கோடி.

❖ திருக்கோயில்களின் 21 திருத்தேர்களை சீரமைத்துத் தேரோட்டம்.

ஒருகால பூஜைத் திட்ட நிதியுதவி உயர்வு

❖ ஒருகால பூஜைத் திட்டத்தில் ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் நிதியுதவி ரூ 25,000 லிருந்து ரூ 1 இலட்சமாக உயர்வு. பயனடைந்த திருக்கோயில்கள் 11,931.

திருக்கோயில்களின் சொத்துக்கள் மீட்பு

❖ ரூ 300 கோடி மதிப்புள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான 169 ஏக்கர் நிலங்களும், 18 கிரவுண்ட் மனைகளும், 29,133 சதுர அடி கட்டடங்களும் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்பு.

❖ 2,000 திருக்கோயில்களின் சொத்து விவரங்கள் மின் ஆளுமை மூலம் தொகுப்பு.

❖ திருக்கோயில் சொத்து விவரங்களைத் திறம்பட நிருவகிக்க 560 அலுவலர்களுக்கு ரூ 2.10 கோடி மதிப்பில் மடிக்கணினிகள்.

தவறான பட்டா மாற்றங்கள் மீட்பு

❖ தனியார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்ட 469 ஏக்கர் திருக்கோயில் நிலங்கள் திருக்கோயில்களின் பெயரில் மீண்டும் பட்டா மாற்றம்.

❖ தனியார் பெயரில் இருந்த 168 ஏக்கர் திருக்கோயில் நிலங்களின் பதிவுகள், கணினி சிட்டாவில் திருக்கோயில் பெயரில் மீண்டும் பதிவு.

திருக்கோயில் பணியாளர் நலத்திட்டங்கள்

❖ வருவாய் குறைந்த 1,349 திருக்கோயில்களின் 1,675 பணியாளர்களுக்கு ரூ.70 இலட்சம் சம்பள நிலுவைத்தொகை வழங்கப்பட்டது.

❖ அர்ச்சகர், ஓதுவார், இசைக்கலைஞர்கள் போன்றவர்களுக்கு ஓய்வூதியம், ரூ 750லிருந்து ரூ 1,000ஆக உயர்வு.

❖ 1996ஆம் ஆண்டுக்கு முன்பு பணி ஓய்வுபெற்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு “துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம்” விரிவாக்கம்.

புனித யாத்திரைக்கு நிதியுதவி

❖ 500 பக்தர்கள் மானசரோவர் மற்றும் முக்திநாத் புனிதத்தலங்களுக்குச்செல்ல, முறையே ரூ 40,000 மற்றும் ரூ10,000 மானியம்.

நூறாண்டு பேசும் ஓராண்டுச் சாதனை

"எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும் - இங்கு
இல்லாமை இல்லாத நிலை வேண்டும்
இதுதான் என்னுடைய இலட்சியம்!"

- செல்வி ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
புரட்சித் தலைவி
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
துரித நடவடிக்கைகளால்
செயலற்றுக்கிடந்த தமிழகம்
மீண்டும் புதுப்பொலிவுடன்
புத்தெழுச்சி பெற்றுள்ளது

பசியாறி மகிழ
விலையில்லா அரிசி

பெண்களுக்குத் திருமண நிதியுதவியுடன்
தாலிக்குத் தங்கம்

மகளிர் மனம்குளிர,
விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி

எளியோர் ஏற்றம் பெற
விலையில்லா கறவை மாடுகள்/ஆடுகள்

மாணவ, மாணவியர் கல்வியில் சிறக்க
விலையில்லா மடிக்கணினி

சூரிய மின்சக்தியுடன் பசுமை வீடுகள்

தரமான மருத்துவ சேவைக்கு

முதலமைச்சரின்
விரிவான
மருத்துவக் காப்பீடு

தமிழக அரசின் ஓராண்டுச் சாதனை

நூறாண்டு பேசும் 1 ஓராண்டுச் சாதனை

விலையில்லா அரிசி

- மாதந்தோறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு 20 கிலோ விலையில்லா அரிசி; அந்தியோதயா குடும்ப அட்டைதாரர்களுக்கு 35 கிலோ விலையில்லா அரிசி; பயன்பெறும் குடும்பங்கள் 1.86 கோடி

- தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முதன்முறையாக சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை உருவாக்கம்

தாலிக்கு தங்கம்

- படித்த 86,676 ஏழைப் பெண்களுக்கு திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கத்துடன் திருமண நிதி உதவியாக ரூ25,000

- பட்டம் அல்லது பட்டயம் பெற்ற 34,345 ஏழைப் பெண்களுக்கு திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கத்துடன் திருமண நிதி உதவியாக ரூ50,000

சமூகப் பாதுகாப்பு

- முதியோர், மாற்றுத் திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் கைம்பெண்களுக்கு வழங்கப்படும் மாத உதவித் தொகை ரூ500லிருந்து ரூ1000ஆக உயர்வு. பயனடைந்தோர் 26.82 இலட்சம் பேர்

விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி

- பெண்களின் கடும் பணிச்சுமையைக் குறைக்க விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறிகள்– பயனடைந்த குடும்பங்கள் 15.89 லட்சம்

சிறுபான்மையினர் நலன்

- உலமா ஓய்வூதியப் பயனாளிகளின் எண்ணிக்கை 2,400 லிருந்து 2,600 ஆக உயர்வு. மாத ஓய்வூதியத்தொகை ரூ750 லிருந்து ரூ1000 ஆக உயர்வு
- கிறித்தவர்கள் தங்களின் புனிதத் தலமான ஜெருசலேம் சென்று வர அரசு நிதி உதவி அளிக்கும் திட்டம் அறிமுகம். முதற்கட்டமாக 500 பயனாளிகளுக்கு ரூ1 கோடி ஒதுக்கீடு

நெசவாளர் நலன்

- புதிய ஜவுளிப் பூங்காக்களுக்கு ரூ9 கோடி மானியம்
- நெசவாளர்களுக்கான நெசவுக்கூலி, வேட்டிக்கு ரூ18.40 ஆகவும் சேலைக்கு ரூ31.68 ஆகவும் உயர்வு
- கைத்தறி நெசவாளர் முதியோர் மாத ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் ரூ1000 ஆக உயர்வு. 20,195 பேர் பயன் பெற்றுள்ளனர்
- மூடப்பட்ட ஈரோடு, தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை மீண்டும் திறப்பு
- திருப்பூர் பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு சாயக்கழிவு நீரை சுத்திகரிப்பு செய்ய ரூ200 கோடி வட்டியில்லா கடன்

மகளிர் நலன்

- அரசுப் பணிபுரியும் தாய்மார்களுக்கு மகப்பேறு கால விடுப்பு 6 மாதமாக உயர்வு
- இந்தியாவிலேயே முதன்முறையாக அனைத்து கிராமங்களிலும் உள்ள 10 லட்சம் வளர் இளம் பெண்களுக்கு விலையில்லா சானிடரி நாப்கின் (Sanitary Napkins)

விலையில்லா கறவை மாடுகள்/ஆடுகள்

- ஏழை எளிய மக்களின் குடும்பப் பொருளாதாரத்தை உயர்த்திட 12,000 பசுக்கள் 4 லட்சம் வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள்

- பால் கொள்முதல் விலை லிட்டருக்கு 2 ரூபாய் உயர்வு
- ஒசூரில் கோழியின வளர்ச்சி மற்றும் மேலாண்மை நிறுவனம் அமைக்க ஆணை

மாணவர் கல்வி நலன்

- 11 புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடக்கம்
- 65 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்வு.
- 710 நடுநிலைப் பள்ளிகள் உயர் நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர் நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் ரூ419.60 கோடி செலவில் நிலை உயர்வு
- 47 லட்சம் பள்ளி மாணவ, மாணவியருக்கு ரூ164.72 கோடி செலவில் இரண்டு ஜோடி சீருடைகள்
- 81.20 லட்சம் மாணவ, மாணவியருக்கு ரூ100 கோடி செலவில் விலையில்லா காலணிகள் வழங்க ஆணை
- 92.30 லட்சம் மாணவ, மாணவியருக்கு ரூ136.50 கோடி செலவில் புத்தகப் பை, கணித உபகரணப் பெட்டி, வண்ணப் பென்சில்கள் மற்றும் புவியியல் வரைபடங்கள் வழங்க ஆணை
- 1.57 லட்சம் முதல் தலைமுறை பட்டதாரி கல்லூரி மாணவ, மாணவியருக்கு ரூ299.28 கோடி கல்விக் கட்டணம் வழங்கப்படுகிறது
- இந்தியாவிலேயே முதன் முறையாக படித்த பள்ளியிலேயே ஆன்லைன் மூலம் 11.83 லட்சம் மாணவ, மாணவியர் வேலைவாய்ப்புப் பதிவு
- பள்ளிகளில் 9,487 இடைநிலை ஆசிரியர், 19,057 பட்டதாரி ஆசிரியர், 4,272 முதுகலை ஆசிரியர், 865 சிறப்பு ஆசிரியர், 775 தலைமை ஆசிரியர், 7,308 ஆசிரியரல்லாத பணியிடங்கள் ஆகமொத்தம் 41,764 பணியிடங்கள் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளன
- ஒரத்தநாடு மற்றும் திருநெல்வேலியில் கால்நடை மருத்துவக் கல்லூரிகள் அமைக்க அனுமதி
- 16,549 பகுதிநேர ஆசிரியர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டு நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன
- போடி, தர்மபுரி, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் புதிய 3 பொறியியல் கல்லூரிகள்

- அரசு கல்லூரிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ100 கோடி ஒதுக்கீடு
- இடைநின்றலை குறைக்க 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு படிக்கும் 18.54 லட்சம் மாணவ – மாணவியருக்கு முறையே ரூ1500, ரூ1500 மற்றும் ரூ2000 ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது

விலையில்லா மடிக்கணினிகள்

- 1.80 லட்சம் +2 மற்றும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கப்பட்டுள்ளன

நில அபகரிப்பு தடுப்புப் பிரிவு

- 39 நில அபகரிப்பு சிறப்புக் காவல் பிரிவு உருவாக்கம்
- நில அபகரிப்பு வழக்குகளை மட்டும் கையாள 25 சிறப்பு நீதிமன்றங்களுக்கு ரூ10.76 கோடி ஒதுக்கீடு
- 34,703 நில அபகரிப்பு புகார்கள் பெறப்பட்டு 1,299 நில அபகரிப்பாளர்கள் கைது செய்யப்பட்டு ரூ758 கோடி மதிப்பிலான நிலம் மீட்பு

ஆதிதிராவிடர் நலன்

- ஆதிதிராவிடர் பள்ளி மாணவ, மாணவியருக்கு மாத உணவுப்படி ரூ650 ஆகவும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு ரூ750 ஆகவும் உயர்வு.
- ஆதிதிராவிடர் நல விடுதிகளின் மேம்பாட்டுக்கு ரூ76.33 கோடி ஒதுக்கீடு
- ஆதிதிராவிடர் நலத் திட்டங்களுக்கு ரூ5,007 கோடி ஒதுக்கீடு
- சுயநிதி கல்வி நிறுவனங்களில் ஆதிதிராவிட/பழங்குடியின மாணவ, மாணவியருக்கு கட்டணக்குழு நிர்ணயித்த கற்பிப்புக் கட்டணம் உட்பட கல்வி கட்டணங்கள் அனைத்தையும் அரசே ஏற்க ஆணை

மீனவர் நலன்

- மீன்பிடித் தடைக்காலத்தில் மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூ1,000லிருந்து ரூ2,000 ஆக உயர்வு. 1.58 லட்சம் மீனவ குடும்பங்களுக்கு ரூ31.64 கோடி நிதியுதவி
- மீன் பிடிப்புக் குறைந்த காலத்தில் மீனவக் குடும்பங்களின் வருவாய் இழப்பை ஈடுசெய்ய குடும்பம் ஒன்றுக்கு ரூ4,000 நிவாரணத் தொகை வழங்கும் திட்டத்தில் 1.70 லட்சம் மீனவ குடும்பங்களுக்கு ரூ70 கோடி நிதியுதவி
- நாகப்பட்டினத்தில் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் அமைக்க அரசு ஆணை
- பொன்னேரி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் மீன்வளத் தொழில்நுட்ப நிலையங்கள் அமைக்க அனுமதி

பத்திரப்பதிவு

- பதிவுத் துறையில் சமாதானத் திட்டம் மூலம் சந்தை மதிப்பு நிர்ணயம் செய்ய நிலுவையில் இருந்த 23,804 சொத்து ஆவணங்கள் வழங்கப்பட்டன
- விற்பனை ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வை 6 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைப்பு

நிதிநிலை

- 2011–2012ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு முதல் முறையாக ஒரு லட்சம் கோடி ரூபாயைத் தாண்டியது

தொலைநோக்குத் திட்டம்

- தமிழகத்தில் வறுமையை ஒழிக்க, 11% பொருளாதார வளர்ச்சியை எட்டும் வகையில் 15 லட்சம் கோடி மதிப்பிலான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023"

காவலர் நலன்

- சென்னைப் பெருநகர காவல் ஆணையரகம் புதிதாக உருவாக்கம்
- இயற்கை எய்திய காவல் அலுவலர்களின் வாரிசுதாரர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண

நிதியிலிருந்து ரூ58 லட்சம் வழங்கப்பட்டது
- காவல் அலுவலர்களின் காப்பீட்டுத் தொகை ரூ1 லட்சத்திலிருந்து, ரூ2 லட்சமாக உயர்வு
- காவல் துறையில் காவல் பணியாளர்களுக்கான 36 ஆயுதப்படை மையங்களில் புற நோயாளிகள் மருத்துவச் சேவை மையங்கள் அமைக்க ரூ 1.01 கோடி நிதி
- பணிபுரியும் மற்றும் ஓய்வுபெற்ற காவல் துறையினருக்கு சிறப்பு அங்காடிகள் (Canteens) அமைக்கப்பட்டுள்ளன. இச்சலுகை தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை மற்றும் சிறைத்துறை சீருடைப் பணியாளர்களுக்கும் நீடிப்பு
- ரூ337.68 கோடி செலவில் காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகள்
- ஒவ்வொரு காவல் நிலையங்களிலும் பொதுமக்களின் பயன்பாட்டுக்காக 10 நாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளன
- காவல் துறையில் 13,320 பணியிடங்கள் நிரப்ப நடவடிக்கை

சாலை மேம்பாடு

- ரூ1,730 கோடி செலவில் 4,953 கி.மீ. சாலைகள் அகலப்படுத்தப்பட்டு, 274 பாலங்கள், சிறுபாலங்கள் புதுப்பிக்கப் பட்டுள்ளன

- ரூ985.87 கோடி செலவில் 6,035 கி.மீ. சாலைகள் பராமரிப்பு
- ரூ74.73 கோடி செலவில் 219.10 கி.மீ. சாலைகள் மேம்பாடு
- ரூ350 கோடி மதிப்பில் 7 இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் 5 ஆற்று பாலங்கள் கட்டப்பட்டுள்ளன

தமிழக அரசின் ஓராண்டுச் சாதனை

நூறாண்டு பேசும் 1 ஓராண்டுச் சாதனை

தானே புயல் நிவாரணம்

- தானே புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ரூ1,640 கோடி செலவில் உடனடி சீரமைப்பு
- தானே புயலால் பாதிக்கப்பட்ட 1 லட்சம் கான்கீரிட் வீடுகள் ரூ1000 கோடி செலவில் கட்ட ஆணை

கேபிள் டிவி

- தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி நிறுவனம் புனரமைக்கப்பட்டு 49.53 லட்சம் சந்தாதாரர்களுக்கு மாதந்தோறும் 70 ரூபாய் கட்டணத்தில் 100 சேனல்கள்

தொழில் வளர்ச்சி

- ரூ1,500 கோடி முதலீட்டில் யமஹா இருசக்கர வாகனத் தொழிற்சாலை அமைக்க ஒப்பந்தம்
- ரூ3,500 கோடி முதலீட்டில் பழைய மாமல்லபுரம் சாலையில் 1,500 ஏக்கரில் ஒருங்கிணைந்த தொழில் நகரியம்

- ஜப்பானிய முதலீட்டாளர்களுக்காக வர்த்தக ஆதரவு மையம் சென்னையில் அமைக்க ஒப்பந்தம்
- ரூ350 கோடி முதலீட்டில் எய்ச்சர் என்ஃபீல்டு புல்லட் இருசக்கர வாகனத் தொழிற்சாலை அமைப்பதற்கு ஒரகடத்தில் 50 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு
- ரூ200 கோடி முதலீட்டில் புகளூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் நாளொன்றுக்கு 100 டன் மெல்லிழைக் காகிதம் தயாரிக்க புதிய திட்டம்
- இந்தியாவிலேயே முதன் முறையாக இரும்பு, அயோடின் செறிவூட்டப்பட்ட உப்பு வெளிச்சந்தையில் விற்பனை
- கெயில் நிறுவனம் திரவ எரிவாயுக் குழாய் அமைக்க ரூ1,000 கோடி முதலீடு. சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் பயன்பெறும்
- திருவள்ளூர் மாவட்டம் காட்டுப்பள்ளி கிராமத்தில் திரவநிலை எரிவாயு இறக்குமதி முனையம் அமைக்க டிட்கோ நிறுவனமும், இந்தியன் ஆயில் நிறுவனமும் ஒப்பந்தம் செய்து கொண்டன

வருவாய்த்துறை

- விரைவுப் பட்டா மாறுதல் செய்யும் புதிய திட்டத்தில் 15.56 லட்சம் விண்ணப்பங்கள் முடிவு செய்யப்பட்டன
- 1.22 லட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன
- இயற்கை இடர்பாடுகளில் மனித உயிரிழப்பிற்கான நிவாரணத் தொகை ரூ2 லட்சமாகவும் மாடு ஒன்றுக்கு ரூ20,000 ஆகவும் ஆடு ஒன்றுக்கு ரூ2,000 ஆகவும் உயர்த்தப் பட்டுள்ளன
- இயற்கை இடர்பாடுகளில் உயிரிழக்கும் கோழிகளுக்கு நிவாரணத் தொகை ரூ100 ஆக உயர்வு
- ஒய்வூதியதாரர்களின் திருமணமாகாத / விவாகரத்தான / விதவை மகள்களுக்கு வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியம்

தமிழ் வளர்ச்சி

- சித்திரை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டாக மரபுப்படி அரசு விழாவாக கொண்டாடப்பட்டு சிறந்த தமிழ் அறிஞர்களுக்கும், சிறந்த தமிழ் அமைப்புக்கும் விருதுகள் வழங்கப்பட்டன
- அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் மற்றும் அவர்தம் மரபுரிமையருக்கு வழங்கப்பட்டுவரும் நிதி உதவி ரூ1,000லிருந்து ரூ2,000ஆக உயர்வு

- சிறந்த தமிழ் நூல்களுக்கு வழங்கப் படும் நிதி உதவியை ரூ25,000 லிருந்து ரூ50,000 ஆக உயர்வு. விண்ணப்பதாரர்களின் வருமான வரம்பு ரூ25,000 லிருந்து ரூ50,000 ஆக உயர்வு

திருக்கோயில்கள்

- முதுமலை, தெப்பக்காட்டில் திருக்கோயில் யானைகளுக்கு மீண்டும் சிறப்பு நலவாழ்வு முகாம்
- 1,006 திருக்கோயில்களுக்கு குடமுழுக்குத் திருப்பணிகள்
- 1,248 திருக்கோயில்கள் புனரமைப்பு
- 106 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் விரிவு செய்யப் பட்டு மொத்தம் 468 கோயில்களில் அன்னதானத் திட்டம் நடைபெறுகிறது
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கிராம கோயில்கள் புனரமைப்பு திட்டத்திற்காக வழங்கப்படும் நிதி ரூ25,000லிருந்து ரூ50,000 ஆக உயர்வு

- 364 கோயில் திருக்குளங்கள் சீரமைப்பு
- 8 கோவில்களில் முதியோர்கள் மற்றும் மாற்று திறனாளிகளின் பயன்பாட்டிற்காக பேட்டரி கார் அறிமுகம்
- ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதர் சுவாமி திருக்கோயில் மற்றும் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்களில் நாள்முழுவதும் அன்னதானத் திட்டம்

விளையாட்டு வீரர் நலன்

- ஒலிம்பிக் மற்றும் பன்னாட்டு போட்டிகளில் பதக்கம் பெற வாய்ப்புள்ள சிறந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை உருவாக்க 'சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகை' என்ற புதிய திட்டம்
- உலக விளையாட்டுத் திறனாளர்களைக் கண்டறியும் திட்டத்தில் 3,240 திறமைமிக்க இளம் விளையாட்டு வீரர்களுக்கு ரூ6,000 வீதம் ஊக்கத் தொகை
- ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கம் பெறுபவர்க்கு ரூ2 கோடியும், வெள்ளிப்பதக்கம் பெறுபவர்க்கு ரூ1 கோடியும், வெண்கலப்பதக்கம் பெறுபவர்க்கு ரூ50 லட்சம் ஊக்கத் தொகை வழங்கப்படும். இதேபோன்று பன்னாட்டுப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு ஊக்கத்தொகை உயர்வு

மின் உற்பத்தி

- 962 மெகாவாட் மின் உற்பத்திக்கு புதிய காற்றாலைகள்
- ரூ22,800 கோடி செலவில் 3,860 மெகாவாட் மின் உற்பத்திக்கு நான்கு புதிய அனல் மின் திட்டங்கள்
- 2x800 மெகாவாட் மின் உற்பத்திக்கு ரூ8,000 கோடி செலவில் உடன்குடி சூப்பர் கிரிட்டிக்கல் அனல் மின் திட்டம்
- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு ரூ7,913.35 கோடி நிதியுதவி
- தானே புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ரூ300 கோடி செலவில் மின் சீரமைப்பு
- 400 கிலோவாட் துணை மின் நிலையம் ஒன்றும் 110/33 கிலோவாட் துணை மின் நிலையங்கள் 20ம் இயக்கி வைக்கப்பட்டுள்ளன
- 10 மெகாவாட் நிறுவுத் திறன் கொண்ட 6 சூரிய ஒளி மின் திட்டங்களும் 31.45 மெகாவாட் நிறுவுத் திறன் கொண்ட தாவர சக்தி / இணை மின் உற்பத்தி திட்டங்களும் செயல்படுத்தப் பட்டுள்ளன
- பவானி கட்டளை தடுப்பணை–2 மற்றும் பெரியார் வைகை–2 சிறு புனல் திட்டங்கள் மூலம் 32.5 மெகாவாட் மின்திறன் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது

புதிய கல்லூரிகள் துவக்கம்

- ஸ்ரீரங்கம் தொகுதி நாவலூர் குட்டப்பட்டில் பெண்களுக்கான தோட்டக் கலைக் கல்லூரி–ஆராய்ச்சி மையம்
- ஸ்ரீரங்கம் தொகுதி நாவலூர் குட்டப்பட்டில் தேசிய சட்டப்பள்ளி

தொழிலாளர் நலன்

- 25,392 தொழிலாளர்களுக்கு ரூ1.05 கோடி செலவில் நலத்திட்ட உதவிகள்

வீட்டு வசதி

- தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக 1,217 குடியிருப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன; 6,849 குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.
- நீண்ட நாள் நிலுவையில் இருந்த 18,171 வீட்டுமனை பத்திரங்கள் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- நகர குடிசைப் பகுதி மக்களுக்கு 2,567 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஒதுக்கீடு

விவசாயிகள் நலன்

- "முதலமைச்சர் புதிய உழவர் பாதுகாப்பு திட்டத்தின்" கீழ் 2.70 இலட்சம் பயனாளிகளுக்கு ரூ190.17 கோடி நிதியுதவி
- நுண்ணீர்ப் பாசனம் அமைக்க சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100% இதர விவசாயிகளுக்கு 75% மானியம்
- நெல் கொள்முதல் விலையில் ஒரு குவிண்டால் சாதாரண நெல்லுக்கு ரூ50, சன்னரக நெல்லுக்கு ரூ70 ஊக்கத் தொகை
- பயறு வகைப் பயிர்களில் அதிக விளைச்சலைப் பெற ரூ90.82 கோடி நிதி ஒதுக்கீடு
- ரூ34.59 கோடி செலவில் தமிழகம் முழுவதும் உழவர் பெருவிழா

சிறு, குறு தொழில்

- அரியலூர் மாவட்டத்திற்கென மாவட்ட தொழில் மையம் புதியதாக உருவாக்கம்
- சிறு தேயிலை விவசாயிகளுக்கு பசுந்தேயிலைக்கு ஆதார விலையாக கிலோ ஒன்றுக்கு ரூ2 வீதம் ரூ11.20 கோடி

மக்கள் நல்வாழ்வு

- "முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில்" ரூ110.09 கோடி செலவில் 42,848 பேருக்கு சிகிச்சை
- ரூ12.80 கோடி செலவில் 20 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள்

- முதன் முதலாக மருத்துவத் துறையில் பணியாளர்களைத் தேர்வு செய்ய மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம்
- தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி ஒப்புயர்வு மையமாக ரூ10 கோடி செலவில் நிலை உயர்வு
- AIIMS தரத்தில் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் பல துறை உயர் சிறப்பு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி

உள்ளாட்சி நிருவாகம்

- சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்திற்கு ரூ500 கோடி ஒதுக்கீடு.
- 9 மாநகராட்சிகள் 125 நகராட்சிகள் மற்றும் 529 பேரூராட்சிகளில் ரூ750 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அடிப்படை வசதிக் கட்டமைப்பு மேம்பாடு
- ரூ753 கோடி மதிப்பில் ஊரகக் குடிநீர் திட்டப்பணிகள்
- 374 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் ரூ268.66 கோடி மதிப்பீட்டில் 881 கி.மீ சாலை மேம்பாட்டுப் பணிகள்
- சென்னை மாநகராட்சியில் 5 இலட்சம் பள்ளி மாணவ, மாணவியருக்கு குடற்புழு நீக்கச் சிகிச்சை
- ரூ11.50 கோடி மதிப்பீட்டில் 9 மாநகராட்சிகள், 503 பேரூராட்சிகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு கழிப்பறைகள்
- சென்னை மாநகராட்சியில் 77.35 கி.மீ. நீள 118 பேருந்து சாலைகள் ரூ50.21 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு
- 9 மாநகராட்சிகள், 119 நகராட்சிகள் மற்றும் 94 பேரூராட்சிகளில் ரூ 52.26 கோடி மதிப்பீட்டில் 305 கி.மீ. பிளாஸ்டிக் சாலைகள்

சுற்றுலா மற்றும் பண்பாடு

- 15 சுற்றுலாத் தலங்களில் ரூ11.20 கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள்
- 10 சுற்றுலாத் தலங்களில் ரூ10 கோடி மதிப்பீட்டில் சாலைகள் மேம்பாடு
- கூடுதலாக 500 நலிந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ1,000 நிதியுதவி

தமிழக அரசின் ஓராண்டுச் சாதனை

நூறாண்டு பேசும் 1 ஓராண்டுச் சாதனை

மாற்றுத் திறனாளிகளின் நலன்

- மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு கூடுதலாக 20 சிறப்பு இல்லங்கள் ரூ2 கோடி செலவில் ஏற்படுத்த ஆணை
- மாற்றுத் திறனாளிகள் ஒய்வூதிய திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கபட்டிருந்த குறைந்தபட்ச வயது வரம்பு 45லிருந்து 18ஆக குறைப்பு
- தொழிற்திறன் மேம்பாட்டு பயிற்சிகள் 32 மாவட்டங்களிலும் ரூ75 லட்சம் செலவில் 2,400 மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வண்ணம் வழங்கப்பட்டு வருகிறது
- 10, 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் மாநில/மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் செவித்திறன் குறையுடைய மாணவ, மாணவிகளுக்கு உயர்கல்வி பயில நிதி ஒதுக்கீடு
- மாற்றுத் திறனாளிகளுக்கு பராமரிப்பு உதவித்தொகை ரூ500லிருந்து ரூ1000ஆக உயர்த்தப்பட்டு 76,407 பேருக்கு ரூ92.28 கோடி உதவி

பொதுத்துறை

- கோவில் பாதுகாப்பு படையில் பணிபுரியும் முன்னாள் படைவீரர்களுக்கு தொகுப்பூதியம் ரூ.5,000 ஆக உயர்வு
- ஒய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் மருத்துவப்படி மாதமொன்றிற்கு ரூ100ஆக உயர்வு
- முகாமிலுள்ள 416 இலங்கைத் தமிழர் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூ10,000 வீதம் ரூ41.60 லட்சம் செலவில் சுழல் நிதி வழங்கிட ஆணை

சுற்றுச்சூழல் பாதுகாப்பு

- பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி தரமான சாலைகளை அமைக்க ரூ50 கோடி செலவில் 446.50 கி.மீ பிளாஸ்டிக் சாலைகள்
- திருப்பூர் சாயப்பட்டறை கழிவுகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கு ரூ75 கோடி

வன வளம்

- வன உயிரினங்களால் உயிரிழப்போ, நிரந்தர ஊனமோ ஏற்பட்டால் இழப்பீடு ரூ1.50 லட்சத்திலிருந்து ரூ3.00 லட்சமாக உயர்வு
- வன உயிரினங்களால் ஏற்படும் பயிர் இழப்பீடு ஏக்கருக்கு ரூ15,000 என்பது ரூ25,000 ஆகவும், வீடுகளுக்கு இழப்பீடு ரூ5,000லிருந்து ரூ35,000 ஆகவும் உயர்வு
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளையொட்டி தமிழகம் முழுவதும் 64 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தின்கீழ் ரூ13.77 கோடி செலவில் 39.33 லட்சம் மரக்கன்றுகள் நடவு

- தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தினை செயலாக்க ரூ686 கோடி அனுமதி
- தனியார் நிலங்களில் மரம் வளர்க்க ரூ12.33 கோடி செலவிடப்பட்டு 1.19 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன
- வனத்துறையில் பணிபுரியும் 1,240 தற்காலிக வேட்டைத் தடுப்பு காவலர்களின் மாதாந்திர ஊதியம் ரூ4,000ஆக உயர்வு
- மனித – வன உயிரின மோதல்களால் ஏற்படும் இழப்புகளைத் தடுக்க, பாதுகாப்புத் திட்டங்களைச் செயலாக்க ரூ11.70 கோடி அனுமதி

கட்டடங்கள் / நீர்வளம்

- சென்னை சைதாப்பேட்டையில் ரூ77.29 கோடி செலவில் அரசுக் குடியிருப்புகள்
- ரூ315.76 கோடி செலவில் பல்வேறு துறைகளுக்கான கட்டடங்கள்
- உலக வங்கி நிதியுதவியுடன் ரூ2,547 கோடி மதிப்பீட்டில் 15.25 லட்சம் ஏக்கர் பாசனம்
- திண்டிவனத்தில் ரூ17.32 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க ஆணை

போக்குவரத்து

- 27.2 லட்சம் மாணவ, மாணவியருக்குப் பேருந்து முழுக்கட்டணச் சலுகை
- ரூ539.84 கோடி செலவில் 3,000 புதிய பேருந்துகள்
- சென்னையின் போக்குவரத்து மேம்பாட்டிற்கு மோனோ ரயில் திட்டம்
- தமிழக – ஆந்திர எல்லையோர பகுதியான பெத்திகுப்பத்தில் ஒருங்கிணைந்த நவீன சோதனைச் சாவடி அமைக்க ரூ79.77 கோடி நிதி ஒதுக்கீடு
- 250 புதிய வழித்தடங்களில், 389 புதிய பேருந்துகள்

கூட்டுறவுக் கடனுதவி

- தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் 9 லட்சம் விவசாயிகளுக்கு ரூ3,280.42 கோடி பயிர்க்கடன்
- 67,071 விவசாயிகளுக்கு ரூ281.24 கோடி மத்திய கால முதலீட்டுக் கடன்
- கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு ரூ28,059 கோடி பல்வகைக் கடன்கள்

செய்தி–மக்கள் தொடர்பு

- பத்திரிகையாளர் ஒய்வூதியம் ரூ5,000லிருந்து ரூ6000ஆகவும், பத்திரிகையாளர் குடும்ப ஒய்வூதியம் ரூ2,500லிருந்து ரூ3,000 ஆகவும் உயர்வு
- ரூ30 லட்சம் செலவில் சென்னை நிருபர்கள் சங்கத்திற்கு கட்டடம்
- ரூ20 லட்சம் செலவில் தலைமைச் செயலக செய்தியாளர் அறை புணரமைக்கப்பட்டது

- ரூ40 லட்சம் மதிப்பீட்டில் தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம்
- ரூ1.50 கோடி செலவில் புனரமைக்கப்பட்ட குளிர்சாதன வசதியுடன் கூடிய எம்ஜிஆர் அரசுத் திரைப்படத் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன நவீன படப்பிடிப்புத் தளம்
- தலைமை மற்றும் மாவட்ட அலுவலர்களுக்கு ரூ81.58 லட்சம் மதிப்பில் நவீன காமிராக்கள்
- ரூ81 லட்சம் செலவில் ஊடக மையம்
- அனைத்து மாவட்டங்களிலும் பொதுமக்கள் நலன் கருதி பல்துறை பணி விளக்கக் கண்காட்சிகள் மற்றும் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டன

ஊரக வளர்ச்சி

- ரூ1,080 கோடி செலவில் 60,000 பசுமை வீடுகள்
- 5,56,311 மகளிர் சுய உதவிக் குழுக்களில் 85.70 லட்சம் உறுப்பினர்கள் சேர்ப்பு. இக்குழுக்களின் மொத்த சேமிப்பு ரூ3,375 கோடி
- 4,081 பெண்களுக்கும் 25,000 ஆண்களுக்கும் தொழில் முனைவோர் பயிற்சி
- 20,000 உள்ளாட்சி தெரு விளக்குகள் சூரிய மின் சக்தி விளக்குகளாக மாற்றுவதற்கு ரூ52.50 கோடி

வணிக வரி

- ரூ230.96 கோடி செலவில் வணிகவரித்துறை முழுமையும் கணினிமயமாக்கல்
- விவசாயிகள் பயனடையும் பொருட்டு வேளாண் உபகரணங்கள் மற்றும் இரசாயன உரங்கள் மீதான மதிப்புக் கூட்டுவரி ரத்து
- கோதுமை, ஓட்ஸ், இன்சுலின், கையினால் தயாரிக்கப்படும் பூட்டுகள், பாலூட்டும் உபகரணங்கள் மற்றும் தலைக்கவசம் ஆகிய பொருட்களின் மீது மதிப்புக் கூட்டு வரி ரத்து
- சமையல் எரிவாயு மீதான மதிப்புக் கூட்டு வரி ரத்து செய்ததால், சிலிண்டரின் விலை ரூ 14.73 குறைப்பு. பயன்பெறும் குடும்பங்கள் 1.36 கோடி

குடிநீர் வசதி

- 6,000 குடியிருப்புகள் 3,447 அரசுப் பள்ளிகள் 1,390 அங்கன்வாடி மையங்கள் மற்றும் 229 அரசு விடுதிகளுக்குக் குடிநீர் வசதி

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn No. TN/ARD/48/12-14
& WPP No. TN/PMG (CCR) 518/12-14

விலை ரூ.20/-